உ

சிவமயம்.

ஜெயங்கொண்ட சோளீசர் துணை.



சிவபூஜை முறை

இந்நூல் பழனி, சைவ சித்தாந்த சரபம்

சிவஸ்ரீ

ஈசான சிவாச்சாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்படி தொகுக்கப்பெற்றது

தொகுத்தோர் :

சைவ சித்தாந்தப் புரவலர், தமிழ் வள்ளல்,

உ. ராம. மெ. சுப. சேவு. மெ.

மெய்யப்ப செட்டியார்

தேவகோட்டை.

1953

உ

சிவமயம்.

ஜெயங்கொண்ட சோளீசர் துணை.



சிவபூஜை முறை

இந்நூல் பழனி, சைவ சித்தாந்த சரபம்

சிவஸ்ரீ

ஈசான சிவாச்சாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்படி தொகுக்கப்பெற்றது

தொகுத்தோர் :

சைவ சித்தாந்தப் புரவலர், தமிழ் வள்ளல்,

உ. ராம. மெ. சுப. சேவு. மெ.

மெய்யப்ப செட்டியார்

தேவகோட்டை.

1953

79/2



பழனி சைவசித்தாந்த சரபம்

சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரிய சுவாமியவர்கள்

16.6-1900 10.4.63

சார்வரி ஆனி 32 சோபகிருது பங்குனி 27

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவத்திரு சைவசித்தாந்த சரபம் செள்ளிமலை ஈசான சிவாச்சார்ய ஸ்வாமிகள் வழங்கிய

ஆசியுரை

சிவபெருமான், அநாதியே, ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களினின்றும் நீங்கியவர்; அதனால், அவர் படிகம் போல்வர்.

ஆன்மாக்கள் அநாதியே ஆணவம், கன்மம், மாயை; என்ற மூன்று மலங்களாலும் பாதிக்கப்பட்டவர்கள். அதனால் செம்பு போல்வர். செம்பு களிம்போடு கூடியது, உயிர்கள் மலத்தோடு கூடியவர்கள். செம்பு உள்ளவன்றே அவற்றோடு ஒப்ப விரவியுள்ளது களிம்பு; உயிர் உள்ள வன்றே அவற்றின் அறிவில் கலந்திருப்பது மலம். அம் மட்டோ? அறிவை மறைத்து நிற்பதும் மலம் ஆகும். ஆன்மாக்களின் அறிவு, இச்சை, செயல்களை மறைத்து நிற்பதும் மலம் ஆகும். ஆன்மாக்களின் அறிவு இச்சை செயல்களை மறைத்து மலினமடையச் செய்வதால் 'மலம்' என்று பெயர் பெறும். இந்த மலசம்பந்தம் உயிர்களுக்கு ஒரு காலத்தில் உண்டானதல்ல. இங்ஙனம் உயிர்களுக்கு அறியாமையைச் செய்யும் மலம் உயிர்களின் குணமுமன்று; சித்து மன்று; "சடமா"கும். கண்ணிற்குப்படலம்போல ஒரு குற்றமாகும். கண்மாசு ஒளியை மறைக்கும்; மலமாசு

அறிவை மறைக்கும். கண்மாசு, அஃதில்லாத மருத்துவனால் நீக்கப்படும். மலமாசு, அஃதில்லாத சிவபெருமானால் நீக்கப்படும். கண்மாசு நீக்குதற்குரிய காலம் வந்தபோது அந்தப் படலத்தை மருத்துவன் உரித்து நீக்குவான். மலமாசு நீக்குதற்குரிய காலம் வந்தபோது சிவபெருமானும் அதனை நீக்கி யருள்வர். பக்குவ காலமாவது நீக்குதற்குரிய சாதனங்கொண்டு நீக்குவோன் அதனை நீக்க நீங்கும் தன்மை அந்த மலத்துக்கு வருங் காலமேயாகும். அந்த பரிபாகமாகிய பக்குவ காலம் உயிர்களுக்குச் சிவபுண்ணிய வாயிலாகவே உண்டாகும். அந்தச் சிவபுண்ணியமே சிவார்ச்சனையாகும். ஆதலால், சிவார்ச்சனையாகிய சிவ பூஜையைக் காட்டிலும் ஆன்மாக்களுக்கு இன்பவீடு அளிக்கும் சாதனம் பிறிதொன்றில்லை. எல்லாத் தீர்த்த ஸ்நான பலன்களிலும், எல்லா யாகப் பலன்களிலும், எல்லாத் தானப் பலன்களிலும் எத்துணைத் தவத்தினால் வரும் பலன்களிலும் சிவபூஜையினால் வரும் பலன் கோடி பங்குயர்ந்ததென்று சிவாகமங்கள் கூறும்.

இத்துணைச் சிவபூஜை வேதத்தினும், சிவாகமத்தினும் விதிக்கப்பட்டிருப்பினும் சிவபெருமான் ஒருவனே பரமபதி என்றுணர்ந்து சிவாகமநெறிப்படி சிவதீட்சைபெற்று ஆச்சாரியரின் அனுமதிப்படி சிவபூஜை செய்தாலல்லது அத்துணைச் சிவபூஜைக்குரிய சிறந்தபலன் சித்திக்காதெனச் சிவாகமங்கள்கூறும். இங்ஙனம் மேற்கொண்டு செய்யப் பெறும் சிவபூஜைப்பேறு முற்செய் தவமுடையார்க்கன்றி எய்துவதன்று. இத்துணைச் சிவபூஜையைச் சிவதீட்சை பெற்றுச் சிவாகம விதிவழியே செய்தல் வேண்டும் என்ற பேரார்வமுடையவர் நமது உயர் சைவப் பெருந்திருவாளர் சேவு. மெய்யப்ப செட்டியார் அவர்கள். "இளையான்

அடக்கம் அடக்கம்" என்ற நல்லுரைக்கு நேராகவும் இரு வேறுலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு என்ற பொது விதிக்கு மாறாகவும் ஒருவர் உளரெனின் அவர் இவரேயாவர். இவர்கள் நல்ல சிவபுண்ய சீலர்களின் பாம்பரையில் தோன்றியவர். கல்வியறிவு முதலியவைகளிற் சிறந்து விளங்குபவர். சித்தாந்த சைவபரிபாலன சிவதர்மமே உயிர்க்குறுதி தருவனவென்ற துணிவுடையவர். இத்துணை நல்லொழுக்கங்களெல்லாந்திரண்டு ஒருவடிவெடுத்தாற் போன்ற இந்தப் புண்ணியசீலருடைய வாழ்விலே சிவபூஜை இவரால் சிறந்த கடப்பாடாகக் கொள்ளப்பட்டு வருவது, மேருமால் வரைக்கமைந்தவிழுச் சுடர்ச் செம்பொன்னிலாகிய சிகரமாகத் திகழ்கின்றது. சிவபூஜை மேற்கொண்ட அன்றுதொட்டு இன்றுகாறும் நாளும் அதிலிவர்க்குள்ள ஆர்வம் அளவிடற்பாலதன்று. சிவதீட்சா காலத்திலே ஆசாரியனிடத்தே சிவபூஜை எழுந்தருளப்பண்ணுவித்துக் கொள்ளுங்கால் முக்கண்ணராகிய சிவபெருமானே! உம்மைப்பூஜித்தன்றி நான் ஒன்றும் உண்ணக்கடவேனல்லேன் என்னும உறுதிமொழிகூறிச் சிவபூஜை ஏற்றுக்கொள்க என்னும் சிவாகம நெறி பிறழாது, பக்தி சிரத்தையோடு பூஜை செய்கின்றவர்களில் இவர் எடுத்துக்காட்டாக உள்ளவர். அத்துணையுமன்றி யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், என்னும் திருவாக்குக்கிணங்க இங்ஙனம் சிவபூஜை செய்கின்றவர்களுக்கெல்லாம் உரிய சாதனமாகச் சைவானுஷ்டான விதியும் சிவபூஜாவிதியும் எளிய இனிய தமிழ் நடையிலே தொகுத்து எழுதி அச்சுவாகனமேற்றி சைவ அன்பர்களுக்கு அளிக்க முன்வந்த பெருந்தகைமை சைவ நல்லன்பர்களால் என்ஞான்றும் பாராட்டற்குரி

யது. யான் மேற்கொண்ட சைவ தர்மங்கள் எல்லா வற்றிற்கும் சாதகமாக இருப்பவரும் இந்தச் சிரியநூல் எழுதுவதற்குத் துணைபுரிந்தவருமான நமது அன்புருவா கிய செல்வச்சிரஞ்சீவி அய்யாமணிக் குருக்கள் என்கின்ற ஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்களுடைய பெருமைப்பும் போற்றத்தக்கதேயாம். நமது தவப்புதல்வராகிய ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார் அவர்களுக்கு நமது குலதெய்வ மாகிய சிரகிரி வெற்றிவேற் பெருமானுடைய திருவருளி னாலே நோயின்றியன்ற யாக்கையும் நீண்ட வாழ்நாளும் வாழ்க்கைச் செழுங்கிளை தழைத்தோங்கவும், சிவஞான சித்தி எய்தவும் அப்பெருமானுடைய பொன்னடிப் போது களைச் சந்ததம் சிந்தித்து வந்தித்து வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

ஈசான சிவாச்சாரியர்

சிவமயம்.

அணிந்துரை.

"வானிடத்தவரும் வந்து மண்மேலரன்றன்னை யர்ச்சிப்பர்" எனக் கூறிய மறைமொழிக்கிணங்க ஊனெடுத்த எவரும் செய்யவேண்டியது சிவபூசனையேயாகும். அதுவும், பல்லூழிகாலம் பயின்றாலேயர்ச்சிக்கில் சற்றே நல்லறிவு நகும் என்பர் மேலோர். அப்பெரும்பேறு வாய்த்தற்கு முன்னர், பன்னாள் செய்த தவம் கூட்டுவித்தாலன்றி அஃது அமைவது சுலபமன்று, என்பது யாவருமறிந்ததே. அங்ஙனமாக, எனது நண்பரும் சைவசித்தாந்தப் புரவலருமான தேவகோட்டை, உயர்திரு தமிழ்வள்ளல் சேவு. மெய்யப்ப செட்டியாரவர்கட்கு அப்பேறு அவர்களின் முன்னோர் செய்த நல்வினைப்பயனால் வந்தவாய்ப்பேயாகும் அதுவே இந்நூல் எழுந்தமைக்குக் காரணமாகும். சிவ வழிபாடுசெய்வதில் எனது நண்பருக்கிருந்த பேரவா, அளவிடவொண்ணாதது. அவ்வப்போது எனது தமிழறிவு வளர்ச்சிக்காகப் பலபண்டிதர்களும் இடையறாது உடனிருக்க மகிழ்கின்ற எனது நண்பர் மெ. அவர்கள் இல்லத்திற்கு நான் செல்லுவதுண்டு. அந்தச்சமயங்களிலெல்லாம் உற்ற தோழனாகிய என்னிடம் தனக்கு இலௌகிக விவகாரங்களில் உள்ள வேலைகளின் விரிவையும் சிவபூசையிலுள்ள அவாவையும் கூறி எனக்கு எப்போது இறைவனை மலரிட்டருச்சித்து வணங்கிடும் பேறுகிட்டும்? அது மிகவும் அரிய பெரிய முறைகளுடன் கூடிய மேம்பட்ட காரியமாயிற்றே என்னால் செய்தற்குக்கூடுமோ? என அடிக்கடி வினவுவார்கள். நானும் எனக்குத்தெரிந்த அளவில் பூசனை சம்பந்தமான சிலசில விஷயங்களைக்கூறி, இறைவனை அன்புடன் நீரும்பூவுங் கொண்டேத்துவார்க்கெல்லாமவன் எளியனாகுந் தன்மையைக்கூறி, சிவபூசை செய்தற்கரிதான செய்கையாயினும் சிவபிரான் அன்பரன்புக்கு எளியராதலாலும், சிவபூசைக்குரிய பலசாதனங்களுக்குள், அதனை இயற்றுதற்கண் உள்ள மெய்ப்பற்றும், அன்புமே சிறந்தசாதனமாதலால் தங்களுக்கு அவை இயல்பாயிருப்பதால் எளிதேயென்று கூறினேன்.

அப்பணியிலீடுபடும் மனப்பண்பு வாய்ப்பது முன்வினைப்பயன் கூட்டுவிக்காதொழியின் வாய்த்தலரிது, என்று சொல்லுவதுண்டு. இந்நிலையில் ஒருநாள் என்னை எடகத்தில் சந்திக்கும்படி ஒரு முடங்கலனுப்பினார்கள். நானும் திருவேடகமடைந்து அங்குள்ள சிவபெருமானை வணங்கினேன். அக்கால் நண்பரும் தனக்கு உடனே சிவபூசை எழுந்தருளச் செய்து தருதல் வேண்டும்; இனியும் என்னால் சிவார்ச்சனமின்றியிருக்க மனம் ஒப்பவில்லை என்று சொல்லி அதற்காவன உடனே செய்துதரல் வேண்டுமெனக் கூறினார்கள். பழனி சைவசித்தாந்த சரபம் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகள் என்னினும் வயதினாலும் அறிவாற்றல்களினாலும் பிறஎல்லா வகையாலும் மேம்பட்டுள்ளவர்களென்பது தெரிந்த நான் எனது நண்பருக்கு அந்த சிவாசாரிய சுவாமிகளை ஞானாசிரியராக அமைக்க விரும்பினேன். சிவாசாரிய சுவாமிகளும் ஏற்றுக்கொண்டு தீக்ஷை செய்வித்தும் சிவபூசை எழுந்தருளச்செய்து கொடுத்தும் ஆசீர்வதித்தார்கள்.

பின்னர் அவ்வப்போது உடனிருந்து பூசை செய்வித்து வரிசைகளையும் முறைகளையும் நண்பருக்கு ஞாபகப்படுத்தி வந்தேன். அவர்கள் மிக மிக நுண்ணறிவு வாய்ந்தவர்கள் ஆதலின் ஒரு முறை சுருக்க, விபரத்தைச் சொல்லி அறிவித்தவுடன் அதைத் தெரிந்து கொள்வதோடமையாது மேலும் மேலும் தன்னுடைய கூர்த்த மதி கொண்டு உட்கருத்துக்களையெல்லாமாராய்ந்து விரிவுபடுத்திக்கொள்ளும் ஆற்றலும் பெற்றார்கள். இவ்வியல்பு, வேறு யாரிடமும் காணமுடியாத தனிச்சிறப்பு. நண்பர் மெ. அவர்களிடம் நான் கண்ட பலபோாற்றல்களில் இது ஒன்று. பூசையின் பெரும்பகுதி ஸ்ரீமத் அகோர சிவாசாரிய சுவாமிகள் பத்ததிவழியை அனுசரித்தே பயிற்றுவிக்கப் பெற்றது. உடனிருந்து பயிற்றுவித்த நாட்களும் மிக மிகச் சொற்ப நாட்களே யாகும். இவ்வளவு குறுகிய கால அளவையில் தானும் சிவபூசை செய்து மகிழ்வதோடமையாது இந்த வழிபாட்டு விளக்கத்தை எழுதி ஏனையோருக்கும் பயன்படுமாறு வெளியிடுமாற்றல், சாதாரணமாக

யாருக்கும் உண்டாகமுடியாது. அஃது அன்னாரின் ஆன்மார்த்தமூர்த்தி யாகி அன்றும் இன்றும் என்றும் உள்ள சவுந்தா நாயகி உடனாகிய செயங்கொண்ட சோளீசப் பெருமான் திருவடி வணங்கிடும் நெறியில் விளைந்த விளைவேயாகும். அப்பெருமான் திருவருளால் எனதன்பர் மெ. அவர்களும் அவர்களின் வழித்தோன்றல்களும் இடையறாத சிவபூசைச் செல்வர்களாகவும் நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் உள்ளவர் களாகவும் விளங்கி, சிவசமய வளர்ச்சிக்கான பணிகளைச்செய்து, நல் வாழ்வு வாழவேண்டுமென்பதாகவும், இதுபோன்ற சிவபூசாவிளக்கங் கள் பல நாட்டில் தோன்றி, இடையே எழுந்துள்ள இருட்சமயங்க ளெல்லாம் நீங்கி உலகெங்கும் நீற்றொளிபரந்து நிலவவேண்டுமென்ப தாகவும் எனது வழிபடுகடவுளாகிய அறுமுகவன் மலரடிகளை மனத் திருத்தி வாழ்த்துகின்றேன்.

திருவாடானை }
16—8—'53 }

எம். அய்யாமணி

உ

சிவமயம்.

ஜெயங்கொண்ட சோளீசர் துணை.

பதிப்புரை

அடியேன் சிறு பிராயமாக இருக்குங்காலையில் எனது தருமைத் தந்தையாரவர்கள் நான் இயற்றமிழ்க் கல்வி வல்லுநனாக ஆகுதல் வேண்டும் என்று கொண்டிருந்த பேரவாக் காரணமாக, அதுபோழ்து தேவகோட்டை சிவாகம சங்கத்தில் ஆராய்ச்சியாளராக இருந்த திரு. பொ. முத்தைய பிள்ளை அவர்களிடம் என்னை அனுப்பிக் கல்வி பயிற்றுவித்தார்கள். சைவசித்தாந்த சாத்திரங்களை நுணுகி நுணுகி ஆய்ந்தறிந்த பெரியாராகிய அவ்வாசிரியரும் என்னுள்ளத்தே வெறும் உலகியல் இலக்கியவிலக்கணங்களை மட்டும் புகுத்தாது, தன்னோடொப்பாருமிக்காருமில்லாத் தனிப்பெருந் தலைவனாகிய சிவபெருமானுடைய பேராற்றல்களையும் பெருங்கருணைத் திறத்தையும் மெல்ல மெல்ல உள்ளத்திலே விதைத்தார்கள். அவ்விதை முளைவிட்டு வளரச் செய்த பெருமைசிலகாலம் எனக்குப் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய சமய நூல்களையும் இலக்கணங்களையும் பாடஞ்சொல்லிய வித்வான் ஸ்ரீ ஆ. சத்திவேற் பிள்ளையவர்களையே சாரும். இங்ஙிலையில் தன்னையடைந்தவரைத் தன்மயமாக்கிடுந் தலமாகிய ஐயாற்றில் எனது தந்தையாரவர்கள் தொடங்கிய திருப்பணி வேலையை அடியேன் மேற்கொண்டு நடத்தவேண்டியதாயிற்று. அப்பதியின் உரிமையாளர் திருக்கைலாய பரம்பரைத் தருமை ஆதீனகர்த்தரவர்களின் பெருந்தொடர்பே என் சைவப் பற்றுதலுக்கு ஆணிவேராகியது. அது காலை, ஐயாற்றில் ஆலய நிர்வாகக் கட்டளையில் விற்றிருந்தவர்கள் இந்நாள் பனசையின்கண் வீற்றிருந்து

அருளாட்சி செய்கின்ற ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் ஆவார்கள். அவ்வடிகளாரின் கூட்டுறவு அடிக்கடி ஏற்படலாயிற்று. மேருவைச் சார்ந்த காகமும் பொன்னிறமடைதல் போல், ஞானப் பெருஞ்செல்வராகிய அவர்களது உடனுறைவால் எனதுள்ளத்தில் சைவ உணர்ச்சி வளரத் தொடங்கிற்று. மெல்ல மெல்ல உள்ளத்தரும்பும் சைவப்பண்பு மேலும் திட்பமாக ஓங்குதற்குத் தற்போது குன்றக்குடியில் திருவண்ணமலை ஆதீன மகாசன்னிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணுசல தேசிக பரமாசார்ய சுவாமிகளவர்களின் நெருங்கிய தோழமையும் அன்னாரது மணிமொழிகளுமே காரணமாக அமைந்தன. இந்தச்சூழ்நிலையில், இலௌகிகத் துறையில் அதிக ஈடுபாடுள்ள எனக்கு இறைவழிபாட்டின் இன்றியமையாமை புலனுகப் புலனுக அதன்கண்ணே ஓர் ஆசை வளர்ந்து, அவற்றினியல்பை முற்றுமுணர்ந்து, முக்காலமும் நியமந்தவருத பெரியோர்களும் சிவபூசையினது பெருமையைக் கண்டு அஞ்சுகின்ற தன்மையை நோக்க உள்ளத்தில் செயற்கருஞ் செயலாகிய இச்செயலை ஏதுமுணராத எளியேன் எவ்வாறு கைக்கொண்டு அவ்வழி ஒழுகிவரமுடியுமென்ற அச்சம் தோன்றி மனம் ஒருமைப்படாது குழம்பியது. அதுபோழ்து என தருமைத் தோழரும் எனது நலமொன்றையே தனது நலமாக்க் கருதும் உள்ளமுடையவருமான திருவாடானை ஸ்ரீ ஈசான சிவாசாரியரென்று வழங்கும் அய்யாமணி சிவாசாரியரவர்கள் மிக மிகக் குறுகியகால அளவில் சிவாகம முறையினின்று சிறிதும் வழுவாவண்ணம் சிவபூசை செய்தற்குப் பத்ததி தாம் வகுத்துத் தருவதாகவும் பூசையில் எவ்வித முட்டுப்பாடுமின்றி முடித்தற்குப் பயிற்றுவிப்பதற்கு எவ்வளவு நாட்கள் வேண்டுமாயினும் தாம் உடனிருந்து பயிற்றுவிப்பதாகவும் கூறி எனதுள்ளக் கலக்

கத்தைப் போக்கினார்கள். சிவபூசை எழுந்தருளச்செய்து தருதற்கும் விசேட தீக்கைசெய்து என்னை உய்விக்கவும், தன்னிலும் வயதிலும் அறிவாற்றல்களிலும் மேம்பட்டவர்களாக உள்ள பழனி சைவ சித்தாந்த சரபம் சிவத்திரு ஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளைக் கொள்ளுதல் நலமெனவும் கூறினார்கள். ஓரளவு அச்சம் தவிர்ந்த நான் இறைவன் வழிபாட்டில் எனக்கேற்பட்டிருந்த அவாவின் காரணமாக என்னுடைய தகுதியில்லாமை தெரிந்தும் திருவாடானை அய்யாமணி சிவாசாரியாரையும் உடனழைத்துக்கொண்டு ஒரு நாள் பழனி சென்று சிவாசாரிய சுவாமிகளிடம் எனது பேரவாவைத் தெரிவித்தேன். அவர்களும் எனது முன்னோர்கள் செய்த பெருந்தவம் அது போழ்து கூட்டுவிக்க, உடனே இசைவு தந்து சென்ற நந்தன ஆண்டு மார்கழித்திங்கள் ஆதிரை நாளில் திருவேடகத்தில் எளியேனது விடுதிக்கெழுந்தருளிச் சிவதீக்கை செய்தும் சிவபூஜை எழுந்தருளச் செய்வித்தும் கருணைபாலித்தருளினார்கள். திருவாடானை அய்யாமணி சிவாச்சாரிய சுவாமிகளும் சாதகாசரியமாக உடனிருந்து எல்லா விதிமுறைகளையும் செவ்வனே நடத்தித் தந்தார்கள்.

அதுமுதல் "ஆசை வெட்க மறியாது" என்ற மூதுரைப்படி சிவபூசை செய்யும் அன்பர் குழாத்திலெல்லாம் சேர்ந்து சேர்ந்து சிவபூசை செய்ய முற்பட்டேன். திருவாடானை சிவாசாரிய சுவாமிகளும் உடனிருந்து அவ்வப்போது வழிபாட்டு முறைகளை எனது பக்குவத்திற்கேற்பச் சிறிது சிறிதாக உணர்த்தி ஓரளவு சிவபூசையில் எனக்கேற்பட்டிருந்த அச்சத்தை அறவே நீக்கி "யாருமோர் குடங்கை நீர்தழையிடுவார்க் கழிவில் விடளித்தனை" என்ற மறைமொழியை அடிக்கடி உணர்த்தி என்னை ஊக்குவித்தார்கள்.

சின்னாள் இவ்வாறு பூசனை செய்து வருகையில், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற திருவாக்கின் படி சிவபூசாவிதிக் கிரமங்களையெல்லாம் எனக்குத் தொகுத்துத்தந்த அளவில் ஒரு நூலாக இதனை எழுதக் கருதினேன். எனது நண்பர்களும் சிவபூஜா விளக்கத்தை ஒரு நூலாக எழுதி வெளியிடுமாறு என்னை வற்புறுத்தினார்கள். ஆகம நெறிகளை யெல்லாம் முற்றுமுணர்ந் தடங்கிய மேலோர் செய்யவேண்டிய இப்பணியை எத்துணை நலனுமில்லா யான் செய்வதென்றால் இயலுமோ? ஆயினும் நண்பர்கள் மொழிகளை மறுத்தற் கஞ்சியும், இப்பணி, எப்பணியினும் மேலானதாதலாலும், அப்பணியும் கடவுளின் அறப்பணியாதலாலும் அதனை அங்ஙனமே செய்ய முன்வந்தேன். சிவபூசையின் நடைமுறை அடியேன் செய்துவரும் முறையையே பின்பற்றி இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. பிழைகள் பல இருப்பினும் கற்றறிந்த பெரியோர்கள் அவ்வப்போது அறிவிப்பின் பின்வரும் பதிப்புகளில் திருத்தத்துடன் வெளிவர ஏற்பாடு செய்யலாம். எல்லா வகையிலும் என் உடனிருந்து அறிவுச்சுடர் கொளுத்திய எனதாசிரியன்மார்களனைவருக்கும், நல்வழியில் சிறுவயது முதற்கொண்டு பழக்குவித்த எனதருமைத் தந்தையாரவர்களுக்கும், அடிக்கடி சிவவழிபாட்டை வற்புறுத்தி மேற்கொள்ளச்செய்த எனதருமை அன்னையாரவர்களுக்கும், இப்பணியில் வேரூன்றச் செய்த தெய்வத் திரு குருமகா சன்னிதானங்களுக்கும் ஆசியுரை யளித்த குருமூர்த்திகள் சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியாரவர்கட்கும், அணிந்துரையும், முன்னுரையும், சாத்து கவிகளும் தந்து என்னைப் பெருமைப்படுத்திய அறிவு சான்ற அன்புப் பெரியார்கட்கும், இந்நூல் அச்சாகும்பொழுது உடனிருந்து ஒப்பு நோக்குதல் முதலிய உதவிகள் செய்த

பண்டித, திரு. ஆழ்வார் ஐயங்கார் அவர்கட்கும் யான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். கைம்மாறு கருதாது என்னையுமாட்கொண்ட அவர்களது பெருந்தகைமைக்கு எனது வணக்கம் உரித்தாகுக. இந்நூலை அழகுற அச்சிற் பதிப்பித்த "தமிழ் நாடு" அச்சகத்தாருக்கும் நன்றியுடையேன்.

அன்புள்ள,

சேவு. மெ. மெய்யப்பன்

சென்னை, உயர்திருவாளர், "பன்மொழிப்புலவர்" "பல்கலைச்செல்வர்" தெ. பொ. மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை M. A., B. L, M. O. L. E. C. T. அவர்கள் அளித்த

முன்னுரை.

திருவாளர் மெய்யப்ப செட்டியார் அவர்களை, வாணிப உலகமே யன்றி, சைவவுலகமும் தமிழுலகமும் நன்கு அறியும். திரு ஐயாற்றிலும் திரு வடகத்திலும் தலைமுறை தலைமுறையாக வரும் ஈடுபாடும் அன்பும் இவர்கள் வழியே சிறப்புற்றுத் தோன்றுவதனைக் காணலாம், ஆண்டவனைத் தமிழ்ப் பாக்கள் சூட்டி வழிபட்டு இன்புற்றுவந்த இவர் உள்ளம் ஆகம முறைப்படி அஷ்டபுஷ்பங்களைச் சூட்டி வழிபடவும் முற்பட்டது.

ஆகம அறிவும் திருமுறையுணர்வும் அன்புருவம் எடுத்தாற் போல் விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ பழனி, ஈசான சிவாசாரியர்பால், உடல் குழைய, உளம் குழைய, உயிர் குழைய உயிர்க்குள் விளங்கும் சிவமும் குழைய, சிவ வழிபாடு இயற்றும் விசேட தீக்ஷை பெற்ற அற்புதக் காட்சியைக் காணும் பேறு பெற்றேன். நாள் தோறும் இரண்டுமணி யளவில் இறைவனுக்குப் பறிகொடுத்த மனத்தோடும் குழவி போல ஈடுபட்டு வழிபடுவதனையும் கண்டேன்.

இதன்பயனுக இவர்க்கிருந்த நோய் விலகியது கண்டு வியப்பு எய்தாதவர் இல்லை. தாம்பெற்ற இன்பம் உலகம் பெறவேண்டுமென்ற பேரன்பினுல் உந்தப்பெற்று, தம் குருவழியே தாம் கண்டு அநுபவித்து வரும் சிவவழிபாட்டு முறையை அனைவரும் தமிழில் அறிந்து பயன்பெற இந்த நூலை ஆக்கித் தந்துள்ளார்கள். இவருடன் இருந்து பயிற்றிய திருவாடானை ஸ்ரீ-ல-ஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்கள் ஆகம

முறைப்படி அமைந்துள்ளமையைச் சரிபார்த்துக் கைச்சாத்திட்டு அணிந்துரை தந்துள்ளார்கள்.

குருமூர்த்தமாக விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ பழனி ஈசான சிவாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கியுள்ளார்கள். ஆதலின், எல்லா வகையான சிறப்பும் பெற்ற இந்நூலை இவ்வளவு எளிமையில் நாம் பெறுவது சிவபெருமானது தனிப்பேரருள் என்றே அடியேன் கருதுகின்றேன். வாழ்க மெய்யப்பர்; வாழ்க ஈசான சிவாசாரியர்! வாழ்க செயங்கொண்ட சோளீசர்! வாழ்க அருள்! வாழ்க இந் நூல்!

இங்ஙனம்,

தெ. பொ. மீனுக்ஷிசுந்தரன்.

சிறப்புப்பாயிரம்

திருவாமாத்தூர் - கௌமாரமடாலயம்

தி. செ. முருகதாச பிள்ளையவர்கள்

அறுசீர்விருத்தம்

தேவையெலாந் தந்தருளும் தேவைநகர்ச்
சேவகன்சேய்; திகழ்மெய் யப்பன்
சேவையிவர்ந் திடும்பரமன் சேவைபெறுஞ்
சிவபூசைச் சீலன்; கஞ்சப்
பூவையிட மாக்கொளிரு பூவையர்வாழ்
செல்வன்;நலம் பொலிபல் வாழ்வோன்
பாவைநுவல் நாவயுளான் ஏவைநிகர்
மதிநிறைந்த பண்பி னேனே.

பழனியவிர் சிவத்திருவார் ஈசான
சிவாசிரியர் பரிந்து நல்கும்
அழனிகருந் திருமேனிச் சிவன்பூசைத்
தீக்கைதனை அம்ப லத்தான்
கழனிணைந்து பரவுநர்க்குக் கதியளிக்குந்
திருவாசகத்தின் பாங்கர்
தொழனிதமு முயர்வென்னக் கொண்டுமிகு
மன்பொடுசெய் தூய்மை யோனே.

எப்பணிசெய் தாலுமனம் அப்பணிவான்
றனைநினையி லேற்ற மேயாம்
செப்பணியார் உலகமயக் கிடையுழல்வார்க்
கமையாது சிந்தை யொத்துத்

தப்பணிடா தேன்றவரை சிவபூசை
　　யினிற்போது சார்தல் வேண்டி
மெய்ப்பணியாம் அரன்பூசை தனைப்போலன்
　　பினர்செயச்செய் விருப்புற் ருனல்.
இனிமையுற அம்முறையை எழுதித்தன்
　　ஆசிரியர் இசைவு பெற்று
நனியுரைக்கும் ஆசிமொழி யுடன்கலந்து
　　பதிப்பித்து நல்லோர் கொள்ளக்
கனியுமன்பாற் புத்தகமா யளித்திட்டான்
　　இறையருளைக் கலந்து யாரும்
புனிதமுற நுகர்வதனிற் பேராவல்
　　பொருந்தியஇப் புனிதன் வாழ்க.

சந்தக்கவி

[தனதான தய்யத்த — தனதான]

தருநேரும் வள்ளற்றன் - மையன், மாணர்
　　தருதேவை வைகக்கொள் - பதியோனே
திருவாரு மெய்யப்பன், - நெறியோடே
　　சிவபூசை செய்பொற்பு - மிகையோனே
பொருவாத நல்லற்பின் - முறையாலே
　　புவியோரும் அஃதைச்செய் - திடுமாறே
குருபார்வை பெய்புத்த - கமதாயே
　　கொளுமாறு நல்கற்(கு)என் - அருள்சீரே?

உ

சிவமயம்.

இம்மையில் நன்மை தருவார் ஆதீனம்.

திரு. கடம்பவனச் சொக்கலிங்கத் தருக்கள் ஐயா அவர்கள்.

வெண்பா.

மெய்யன்பு தோய்ந்தொளிரு மேன்மையோன் தேவையுறை
மெய்யப்பன் ஈசனருள் மேவினோன்—வையகத்தோர்
மெச்சுசிவ பூசை விளக்கமெனும் நூலெழுதி
அச்சிற் பதித்தளித்திட் டான்.

இளம்பருவந் தொட்டறிஞர் இன்றொடர்பு கொண்டோன்
வளங்கொள் சிவபூசை மாண்போன்—உளங்கொள்
மகிழ்வுடன்பல் லாண்டவன்பால் வைகுநலந் தோய்ந்தேன்
புகழ்பொலிய வாழ்கநலம் பூத்து.

உ

சிவமயம்.

செட்டிநாடு இதழாசிரியர், தருமபுர ஆதீன வித்துவான்,
திருவண்ணாமலை ஆதீன விரிவுரை அரசு, சைவ
சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி, வயிநாகரம்,
வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்.

செயங்கொண்ட சோளீசன் றிருவடியே தினம்பரவுஞ்
செம்மை யாள
னயங்கொண்ட சிவபூசை நாணாளும் புரிந்துவக்கு
நன்மை யாளன்

வயங்கொண்ட தமிழ்சமயம் வளர்வதற்கே பணியாற்றும்
வாய்மை யாளன்
சுயங்கொண்ட பாவலவன் மெய்யப்பப் பெயர்கொண்ட
தூய்மை யாளன்.
உலகமுயத் திருவுருவங் கொடுவந்து சிவாகமத்தி
னுண்மை தேர்ந்தே
யிலகுமொரு பெருங்குரவ னீசான சிவநாமத் தெந்தை
தன்பா
லிலவுசிவ தீக்கைபெற்று நேயமொடு பூசைபுரி
நியமித் தாலே
குலவுசிவ பூசையினை விளக்குமொரு நூல்பதித்துக்
கொடுத்தான் மன்னோ!

நலம் பெருகுக.

உ
சிவமயம்

உயர்திரு

முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியாரவர்கள்

காரைக்குடி

திருவாளர் சேவு. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் நாடோறும் நியமத்துடன் செய்துவரும் சிவபூசை முறையை அடியேன் நேரிற் பார்த்தேன். அன்போடும் ஆதாவோடும் விளக்கமாகவும், விரிவாகவும் திரவிய விசேஷத்துடனும், புஷ்ப விசேஷத்துடனும், சாவதானமாகவும், அமைதியாகவும் செய்துவருகிறார்கள். அவர்கள் அனுபவத்தைப் பிறர்க்குப் பயன்படும்படி இந் நூல் எழுதி

வெளியிட்டிருக்கிறார்கள். அதைப் பெற்றுப் பூஜகர்கள் பயன்பெற வேண்டியதுடன் இனிமேற் பூஜை எடுத்துக் கொள்ள இருக்கிறவர்களுக்கும் பயனடைய எதுவாக இருக்கிறது.

உ

சிவமயம்

உயர்திரு ராம. சொ. திருநாவுக்கரசுச் செட்டியாரவர்கள்

முத்துப்பட்டினம், காரைக்குடி

வள்ளல் சிவபூசையிலும் வள்ளலே

தேவைமாநகரம், நேமமாகிய தேனூறுபாயும் இளநல முடையான் சிவநேசத் திருவாளர் சேவு. மெய்யப்ப செட்டியாரவர்கள் செய்யும் சிவபூஜைத்திறம் செப்புதற்கரியது.

சிவபூஜைக்கான திரவியம் சேர்ப்பதிலே மிகப்பிரியம். அக்காலத்தில் பீமன்தான் உலகத்தில் உண்டான புஷ்பமெல்லாம் சிவபெருமானுக்கென்று சொன்னாராம். இக்காலத்துப்பீமனாகிய வள்ளலவர்களுக்கு ஒருவேளைபூஜைக்குக் குறைந்தது ஐந்து ரூபாய் புட்பமாவது வேண்டும்; அதற்குக் குறைந்தால் பூஜை நிறைவெய்தியதாக அவர்கள் மனம் களிப்படையாது. இதிலே, வள்ளல் சிவபூஜையிலும் வள்ளலே என்பது வெளிப்படையாயிற்று. மேலும் அவர்கள் பூஜையில் மகாசந்நிதானங்களின் நினைவு கூர்ந்து அவர்கள் அளித்த சின்னங்களை யணிந்து சிவோகம் பாவனை செய்வது பார்க்க மிக அழகாயிருக்கும். அவர்கள் இதுகாறும் சிவபூஜை ஆத்மார்த்தமாகச் செய்பவர்கள் யாரும் செய்ய முடியாத பச்சிமத்துவார கணேசாதி சப்த குருமார்கள் சமயாச்சாரியார்கள் எல்லோருக்கும் தனித்

தனியே ஆவாஹன ஸ்தாபனுதிகள் தூபதீப நிவேதனுதி கல்ப்பூர ஆரத்திகள் செய்வது மிகவும் போற்றத்தக்கதே. பரமேஸ்வரனிடம் திருமுறைகள் ஓதிக் கல்மனமுருகக் கசிந்துருகிப் பாடுவதும், கவிகள் தாமேசெய்து பாடுவதும் தம்முடன் வரும் சிவனடியார்களுக்கும், சிவபூஜாதிரவியாதி புட்பங்கள் தம்மைப்போலவே சிவபூசைசெய்யும்படி கொடுத்துப் பூஜை செய்யப் பார்த்துக் களிப்பதும் மெச்சத்தக்கன. இவர்கட்குத் தான் வள்ளல் என்பது பொருந்துமெனப் போற்றுங் கடப்பாடுடையவர்களில்யானுமொருவனென்று எண்ணி எண்ணி இன்புறுகின்றேன். அவர்கள் இந்நூலைச் சைவ உலகத்திற்குப் பயன்படுமாறு வெளியிட்டமை மிகவும் போற்றற்குரியது.

உ

சிவமயம்.

திருவண்ணுமலை ஆதீனவித்வான் உயர்திரு புலவர்மணி சோதிட மகோததி வெ. பெரி. வீர சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள்

எழுசீர் விருத்தம்.

ஓம்எனு மூல மந்திரப் பொருளை யுன்னிமுன் செய்தவ
மோங்கிக்
கோமகிழ்ந் தேத்தக் குலவிடுந் தேவ கோட்டையில் வாழ்
தன வணிகன்
நாமகள் திருமா மகளருளுட்ட நன்கமை சேவுமெய் யப்பன்
சேமமார் ஜெயங்கோண் டாற்பணி நேம வீறுெடு
மணிபுனை நிதியோன்

சிவனருட் பேறுர் சிந்தையி னிறைவைத் தெரிந்திவற்
காவினன் குடிவாழ்
தவகுண சிலர் சைவசித் தாந்த சரபமே விசேடமாந் தீட்சை
உவமையி லேட கத்திருநகரி லுளங்களித் துணர்த்தினர்
வாழி
அவனுட னிருந்தே பயிற்றஜ கஜவூ ரருட்சிவாச் சாரியர்
வாழி

பூசையிற் பூத சுத்திநற் பானு பூசையை யாவர ணத்தைப்
பேசுறுந் துவார பாலகர் பணிவைப் பிரான்வரை பூசைவா
சகத்தின்
தேசுறு பேழை யமைப்பினைப் பூசைத் திரவியச் சேர்க்கை
யின் திறத்தை
வாசமா மலர்ப்பல் வகைச்சிறு குன்றை மனக்குழை
வினைச் சண்டி வாழ்த்தாம்.

"முறை"யினை யெவரே முற்றுறக் கண்டு
மொழிவதுந் தெளிவது மரிதால்
நிறையருட் சிவனை நியதியோ டாற்றும்
நித்திய பூசைநூ லெழுதிப்
பொறையுட னமைத்திச் சைவமா வுலகிற்
பொருத்துதல் புனிதமென் றெண்ணிக்
கறையறு மனத்தாற் றமனுட் டித்துத்
தங்குரு தந்தவா றெருங்கே.

"நூல்"தர நினைந்தான் றன்பெறு மின்ப
நுண்ணறி வாளர்க்கா மென்றும்
மேல்வளர் நோக்கால் விரைந்தொரு விளக்கம்
விரித்ததை யச்சுவா கனத்தின்

பாலமைத் தன்பர் பண்புறப் பயின்று
பரனருட் பூசைசெய் துய்வ
தால்வரும் பயன்க ளதின்மிக வேறு
சைவமா வுலகிலின் றெனவே.

வெண்பா

"வாழி"சைவ சித்தாந்த மாபுரவ லர்வாழி
வாழிதிரு மெய்யப்ப மன்னவன்சீர்—வாழியவே
வாழி"சிவ பூசைமுறை" மன்னுநூல் மாமதிபோல்
ஊழிமிக வாழிசிவ "ஓ"

ஓம் "சிவபூசைமுறை" நூல் வாழிசிவ ஓம்.

பண்டித திரு ஆழ்வாரையங்கார் அவர்கள், மதுரை.

செய்ய தமிழோங்குந் தேவை நகர்வந்தோன்
பெய்யு முகில்போலும் பெட்பினன்—துய்ய
தமிழமுதைப் பல்புலவர் தம்மொடுகூட் டுண்பான்
இமிழ்கடற்பா ரெங்கு மினிது.

இத்தகைய மெய்யப்ப வேந்தல் சிவபெருமான்
நித்த னெனவுணர்ந்த நீர்மையால்-முத்திதரும்
அப்பெருமான் பூசை யகமுருகிச் செய்சிறப்புச்
செப்பரிதே யெம்மாற் றெளிந்து.

நல்லோர்பல் லோரு நனியுவக்க மெய்யப்ப
வல்லோன் சிவபூசை மாண்பெல்லாம் - பல்லவையோர்
ஏத்தவொரு நூலா யிலங்குமா செய்தளித்தான்
சீர்த்தியுடன் வாழியவன் றேர்ந்து.

வாழ்த்துரைகள்.

உ

குருபாதம்.

தருமபுர ஆதீனம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்.

தருமபுரம், மாயூரம் P. O.

8—9—1953

**‘ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே’**

அப்பர் சுவாமிகள் காயக்கோயிலில் அடங்கிய மனமே அடிமையாக வாய்மையால் தூய்மை பெற்று, ஆன்ம இலிங்கத்தை நேயம் ஆகிய நெய் பாலால் ஆட்டிப் பூசித்து, போற்றுதலாகிய சுவையை நைவேதித்ததாகச் சொல்லுகிறுர்கள். இதனுல் அகப்பூசை புறப்பூசை இவற்றின் ஒருமைப்பாடு உணர்த்தப்பெறுகின்ற இத்த சைய சிவ பூஜை ஆன்மாக்களுக்கு இன்றியமையாதது. இருமையின்பத்தையும் ஒருசேர அளிப்பது. இதனை முறை யறிந்து செய்தலே இறையருள் பெற ஏதுவாகும்.

அவரவர்கள் மேற்கொள்ளும் ஆசாரிய பரம்பரைக் கேற்ப அனுஷ்டான விதிகளும் சிவ பூஜா முறைகளும் அந்தந்த ஆகமங்களை ஒட்டி எழுதப்பெற்றுள்ளன. ஆறுமுக நாவலர் முதலிய பல சிவானுபூதிச் செல்வர்கள் எழுதியிருக்கிறுர்கள். சிவபக்த சிகாமணியாகிய திருப் பணிச்செல்வர், ஸ்ரீமான் மெய்யப்பச் செட்டியார் அவர்கள் நமது அன்பர் ஈசான சிவாசாரியார் அவர்களிடம் விதிப்படி விசேஷ தீட்சை பெற்றுப் பூஜா முறைகளில் நன்கு தேர்ந்து தான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் எனத் தமிழுலகம் அறிந்து ஈடேற இதனை வெளியிட்டிருக்கிறுர்.

தமிழ் நாட்டில் சிவபூஜை செய்யாத சைவர்கள், திருமுறை ஓதாத சமயிகள், சிவாலய வழிபாடு செய்யாத சைவக் குடும்பங்கள் இருந்ததேயில்லை. அப்படியிருந்தும் இன்று சிவ பூஜா விதிகளைத் தெரிவிப்பது தேவையாய் விட்டது. அதற்கொரு சிறந்த வழிகாட்டி இந்நூல் இதில் சைவப்பெருமக்கள் செட்டியாருடைய ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஜெயங்கொண்ட சோளீஸ்வர திருநாமம் வரும் இடங்களில் தத்தம் ஆன்மார்த்த மூர்த்தியின் பெயரை இணைத்துப் பூசித்துப் பயன் பெறுவார்களாக.

எல்லாம் வல்ல சொக்கலிங்கப்பெருமான் ஸ்ரீமான் செட்டியார் அவர்களுக்கு இம்மையில் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் சிந்தித மனோரத சித்தியும் அளித்து என்றும் திருவடி மறவாப் பேரின்பத்தைத் தந்து காத்தருள்க.

உ

குரு அருள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி
அருணாசல தேசிக
பரமாசாரிய சுவாமிகள்.

திருக்கயிலாய பரம்பரைத்
திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி. 23—9—53

கயிலாயத்து உச்சியுள்ளான்
காளத்தி யான்அவன்என்
கண்ணு ளானே.

கடல் சூழ்ந்த இந்நிலவுலகின்கண் வாழும் மக்கள், கடவுள் உண்டென்பாரும், இல்லையென்பாருமாக இரு திறத்தர். கடவுள் உண்டென்பாரும், நேரே கண்டு

சொல்வதில்லை. அனுமானப் பிரமாணத்தால் அறிந்தே சொல்கின்றனர். நேரே அறியப்படாமையால் கடவுள் இலக்கணத்தை அவரவர் அறிவுக்கெட்டிய வண்ணம் பலதிறப்படக்கூறி மாறுபடுகின்றனர். அதனால் சமயங் களும் அச்சமயங்களை விளக்கப் போந்த நூற்களும் பலவாயின.

இவ்வாறு பலதிறப்பட்ட சமயங்களுள், மெய்ச்சமயம் எது என ஆராயின், ஒவ்வொரு சமய நூற்களும் தத்தம் சமயமே மெய்ச்சமயமாக அமைவதாக அரற்றுவதைக் காணலாம். இனி உண்மையுணர்தல் எவ்வாறு கூடு மெனின், தம் எண்ணத்திற்கு மாறுபட்ட அனுபவம் நிகழக் காண்கின்றமையால், அதனை இயக்கும் இறை வனாகிய முழுமுதற் பரம்பொருள், தம்மின் வேறாய் ஒன்று உண்டென நிச்சயிக்க வேண்டிவரும். எனவே, அதுவே கடவுள் என்றும், இல்லையென்பார் மதம் பொய் என்றும் மறுத்து விடலாம். கடவுள் உண்டெனக் கொள்ளும் சமயங்களுள், எது மெய்ச்சமயமெனின் பிற சமயக் கொள்கைகளை யிகழாது, அவையெல்லாம் உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்றபடி இறைவன் கருணையினால் அமைந்தனவாதலின் வேண்டப்படுவனவேயெனக் கொண்டு, அவற்றிற்கு வேறான சிறப்புத் தன்மையினைத் தன்னகத்தே கொண்டொழுகும் சமயமே மெய்ச் சமயம். அந்த மெய்ச் சமயம் சித்தாந்த சைவத் திருவருள் நெறி யாகிய சைவ சமயமேயாம்.

இந்த மெய்ச் சமய நெறி கொண்டொழுகும் அன்பர் கள் பலரும் இறைவனை வழிபட்டுய்தி பெறுதற்கெனச் சிவ பூஜை முறையினை விளக்க எழுந்த வேதசிவாகமங்களும் பத்ததிகளும் பற்பல. இவற்றின் துணைகொண்டு அநேக சிவபூஜா விதிகள் வெளிவந்தன.

நமது சித்தாந்தப்புரவலர், தமிழ் வள்ளல் சைவத்திரு உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் அருட்செல்வமும் பொருட்செல்வமும் ஒருங்கே பெற்றவர்கள். இவர்கள் திக்கைப் பெரும் பேறு பெற்றுச் சிவ பூஜை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சிவபூஜை முறையாகச் செய்து இன்பானுபவம் பெற்று "யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற பொது நோக்கோடு சிறப்புற இந்நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள்.

ஆகவே, சைவவுலகம் இந்நூலை உவந்தேற்றுப் போற்றிச் சிவ பூஜையில் தலைசிறந்து விளங்கி எல்லா நலன்களையும் பெற்று இனிது வாழ அண்ணாமலை அண்ணலின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சிவ சிவ.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசி வாசி
அருள்நந்தித்தம்பிரான் அவர்கள்
திருப்பனந்தாள்.

(தஞ்சாவூர் ஜில்லா)
தேதி. 2, செப்டம்பர், 1953

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனம் வாக்காயம்
ஆனிடத்தைந்து மாடும் அரன்பணி"க்கேயாகும்

என்று சிவஞான சித்தியார் என்ற ஞானசாத்திரம் புகலும். பூக்கைக்கொண்டு அரன் பொன்னடி போற்றுதல் வேண்டும். நாக்கைக்கொண்டு அரன் நாமம் நவிற்றல் வேண்டும்.

"எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை" ஆகலின் இறைவனை

விண்ணவரும் அறிவரும் பூசனையாற்றிப் பேறு பெற்றனர். ஆகையால் சிவபெருமானைப் பூசை செய்வதற்குரிய முறைகளைக் கூறும் 'சிவ பூசை முறை' என்னும் இந்நூல் சிவ பூசை செய்யும் அன்பர்களுக்கு மிகவும் பயன்படும்.

இதனைத் தொகுத்த சிவஞானச் செல்வராகிய திருவாளர், உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்களுக்குச் செந்திலாண்டவன் திருவருள் துணைசெய்க.

சுபம்.

18

உ

சிவஞான பாலைய சுவாமிகள்,
மயிலம் மடம்.
8—12—1954.

அந்திமுகத் துத்தமனை
நித்தமினை சித்தமே.

செம்மேனி எம்மானாகிய சிவபெருமான் திருவடி நிழலின்கண் வாழ்வதாகிய பேரா இன்பம் பெறுவதே சைவ சமயத்திற் பிறந்ததன் பயனென்பர் பயன்றெரி பழையோர். அவ்வின்பத்தை அடைய முயல்பவர் பலரும் பலவழிகளைப் பின்பற்றினும் அவற்றுளெல்லாந் தலையாயது ஆகமப்படி சிவபூஜை செய்வதே யாகும். மனம் முதலிய அந்தக்கரணங்களைத் தூயனவாக்கி,யான் எனதெனும் பற்றினை முற்றத்துறந்து, பசுகரணங்களெல்லாம் பதிகரணங்களாகக்கொண்டு, மக்களைப் பிறவிப் பெருங்கடலினின்றும் ஏற்றுவிப்பதில் தன்னேரில்லாத் தலைமையை யுடையது சிவபூஜை. பல ஜன்மங்களில் செய்துவந்த புண்ணியப்பலனால், ஆகமவிதிப்படி பூஜைசெய்பவர்கள் ஒருசிலரே ஆவர். அவருள்ளும் யாம பெற்றபேறு பெறுக இவ்வையகம் என்னும் திருவுள்ளப் பண்பினால் ஆகம விதியினைப் புத்தக மூலமாகத் தமிழில் வெளியிட்டருள்பவர் இன்னும் மிகச்சிலரே. இத்தகைய அரும் பெரும் பணியைச்செய்ய முந்நியிருப்பவர் தன்னேரில்லாத் தனவணிக மரபின் திலகமாக விளங்கும் திருவளர் மெய்யன்பர் மெய்யப்பராவர். மெய்யப்பர் பூஜை மெய்யன்புடையது; சித்தத்தைச் சிவன்பால் சேர்ப்பது; கண்டவர் கருத்தைக் கனியச்செய்வது.


அம்முறையே புத்தகவடிவில் தமிழில் அச்சிட்டுதவுவது சைவமக்கள் செய்த தவப்பேறாகும். இவ்வகையில் தமிழுக்கும் சைவத்திற்கும் செட்டியாரவர்கள் செய்யும் தொண்டு அவரது சால்பிற்கு ஓர் சான்றாகும். எனவே இத்தகைய நற்பெரும் குணக்கடலாம் செட்டியாரவர்கள் பல்லாண்டு பல்லாண்டாக வாழவேண்டுமாக மயிலக் குன்றமர் பாலசித்தனையும், செந்தமிழ் முருகனையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்க மெய்யப்பர்! வாழ்க சிவபூஜை!

"பூப்புனை கையுமெம் புனிதன் நன்புகழ்
பாப்புனை நாவுமே படைத்து ளான்றனைச்
சேப்புனை கொடியுடைத் தேவ னேயென
நாப்புனை புகழொடு நாக ரேத்துவார்."

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே."

விஷய அட்டவணை



பூஜையில் மெ.

உ

சிவமயம்.

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குமுன் எழுந்து கைகால் சுத்திசெய்துகொண்டு, திருநீறு தரித்து, தான்பெற்ற தீக்கைக்கேற்ப, கடவுளைத் தியானிக்க. பின் அவசிய கர்மங்கள் தந்த சுத்தி-ஸ்நானம் என்னும் இவைகளைச் செய்து சுத்தவுடையணிந்து, விபூதி உத்தூளன மாகப் பூசிக்கொண்டு, அனுட்டான பாத்திரத்தை அஸ்த்ரமந்திரத்தால் கழுவி இருதய மந்திரத்தால் அதில் ஜலம் எடுத்துக்கொண்டு, வடக்கு முகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும், சுத்தத்தானத்தில் அமர்ந்து அநுட்டானம் பண்ணுக.

அனுட்டான விதி

பூமிசுத்தி

"அஸ்த்ராயபட்" என்று தானிருக்கும் பூமியைச் சலத்தினுல் தெளிக்க.

கணபதி வணக்கம் :—

"கம் கணபதயே நம: " என்று முஷ்டியால் மூன்று முறை தலையில் குட்டிக்கொள்க.

குரு வணக்கம்

"கும் குருப்யோ நம:" என்று கும்பிடுக.

ஜலசுத்தி

"அஸ்த்ராய நம:" என்று வலக்கைச் சுட்டு விரல் நடு விரல்களை நீட்டி, பெருவிரலால் அணி விரலைத் தொட்டு, அதன் நடுவாகப் பார்த்தலாகிய "நிரீக்ஷணமும்" சிவ மந்திரத்தால் புரோக்ஷணமும், "அஸ்த்ராய ஹும்பட்" என்று தாடனமும், "கவசாய வௌஷட்" என்று அப்யு க்ஷணமும், 'அஸ்த்ராயபட்' ,என்று தாளத்ரயமும் ஷை மந்தி ரத்தால் திக் பந்தனமும் "கவசாயவௌஷட்" என்று அவ குண்டனமும், "சிவாயவௌஷட்" என்றுதேனு முத்திரை யுங் கொடுக்க.

ஆசமனம்

"ஓம் ஹாம் ஆத்ம தத்துவாய ஸ்வதா
ஓம் ஹாம் வித்யா தத்துவாய ஸ்வதா
ஓம் ஹாம் சிவ தத்துவாய ஸ்வதா" என்று கையில் சுட்டுவிரலை மடக்கி உள்ளங்கையில் உளுந்தமி ழும் அளவு ஜலத்தினுல் ஆசமனம் செய்க. "அஸ்த்ராய நம:" என்று மூன்று முறை (2 முறை கவிழ்ந்த பதாகையா லும், ஒரு முறை நிமிர்ந்த பதாகை முத்திரையாலும்) உதடு களைத் துடைத்து "ஹ்ருதயாய நம:" என்று பெருவிரல் அணிவிரல் இரண்டையும் கூட்டி, முகம், நாசியின் இரு புறங்கள், இரு கண்கள், இரு செவிகள், உந்தி, மார்பு, இரு புயங்கள், சிரசு என்னும் இடங்களைத் தொடுக.

சகளீகரணம்

கரந்யாசம்

"அஸ்த்ராயநம:" என்று வலக்கையை மேலும் கீழும் ஒரு முறையும் இடக்கையை அங்ஙனமே இரண்டு

முறையும், துடைத்து "சக்தயே வௌஷட்" என்று நெற்றிக்குநேராகக் கும்பிட்டு, புருவ நடுவிலிருந்து பெருகா நிற்கும் அமிருதத்தால் கைகள் நனைந்ததாகப் பாவிக்க. உள்ளங்கையில் இரு பெருவிரல்களாலும் "ஓம் ஹாம் சிவாஸநாய நம:, ஓம் ஹாம் சிவமூர்த்தயே நம:" எனவும்

"ஓம் ஹோம் "ஈசான மூர்த்தாய நம:" என்று சுட்டு விரலாற் பெருவிரல்களிலும்

,, ஹேம் "தத்புருஷவக்த்ராய நம:" என்று பெரு விரலாற் சுட்டு விரல்களிலும்

,, ஹும் அகோர ஹ்ருதயாய நம: என்று பெருவிரலால் நடுவிரல்களிலும்

,, ஹிம் வாமதேவ குஹ்யாய நம: என்று பெரு விரலால் அணி விரல்களிலும்

,, ஹம் சத்தியோஜாத மூர்த்தயே நம: என்று பெருவிரலால் சுண்டு விரல்களிலும்

"ஹாம்ஹௌம் வித்யா தேஹாய நம:" என்று பெரு விரலால் உள்ளங்கைகளிலும்

"ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம: என்று உள்ளங்கைகளில் அணிவிரல், நடுவிரல், சுட்டு விரல்களை மடக்கி நியசித்தும்,

மூலமந்திரத்தால் உள்ளங் கையில் பெருவிரல்களால் நியசித்தும்,

ஓம் ஹாம் ஹ்ருதயாய நம: என் று பெருவிரல்களால் சுண்டு விரல்களிலும்

" ஹிம் சிரசே நம: என்று மேற்சொன்ன முறையே அணிவிரல்களிலும்,

" ஹூம் சிகாயை நம: என்று நடு விரல்களிலும்,

" ஹைம் கவசாய நம: என்று சுட்டு விரல்களிலும்,

" ஹ: அஸ்திராய நம: என்று சுட்டுவிரல்களால் பெரு விரல்களிலும் நியசித்தும்,

ஓம் ஹாம் கவசாய நம: என்று இரு கைகளையும் முஷ்டியாகப் பிடித்துச் சுற்றியும்,

ஓம் ஹாம் சிவாய வௌஷட்" என்று கும்பிடுக.

அங்கந்யாஸம்.

ஓம் ஹாம் சிவாஸநாய நம: என்று மார்பிலும் அணிவிரல் பெருவிரல்களால் தொட்டு

" ஹாம் சிவ மூர்த்தயே நம: என்று புருவ நடுவிலும்

" ஹோம் ஈசான மூர்த்தாய நம: என்று சிரசிலும்

" ஹேம் தத்புருஷவக்த்ராய நம: என்று முகத்திலும்

" ஹூம் அகோர ஹ்ருதயாய நம: என்று மார்பிலும்

" ஹிம் வாமதேவ குஹ்யாய நம: என்று நாட்டியிலும

" ஹம் சத்தியோசாதமூர்த்தயே நம: என்று இரு முழந்தாள்களிலும் பெருவிரல், சுட்டுவிரல், நடுவிரல், அணிவிரல். சுண்டு விரல்களால் முறையே நியசிக்க.

" ஹாம் ஹௌம் வித்யா தேஹாய நம: என்று மார்பில் அணிவிரல் பெருவிரலாலும்

" ஹௌம் நேத்ரேப்யோ நம: என்று கண்கள், புருவ நடு, ஆகிய மூன்று இடங்களிலும், அணிவிரல் நடுவிரல் சுட்டுவிரலாலும் மூலமந்திரத்தால் மார்பில் அணி விரல் பெருவிரலாலும்

ஓம் ஹ்ராம் ஹ்ருதயாய நம: என்று மார்பில் கட்டை விரலுடன் கூடிய சுண்டு விரலாலும்

,, ஹ்ரீம் சிரஸே நம: என்று சிரசில் ஷையுடன் அணி விரலாலும்

,, ஹ்ரூம் சிகாயை நம. என்று சிகையில் ஷையுடன் நடு விரலாலும்

,, ஹ்ரைம் கவசாய நம: என்று சுட்டுவிரலால் கழுத்தைச் சுற்றியும்

,, ஹ: அஸ்திராய நம: என்று உள்ளங்கைகளில் அணி விரல்களாலும் தொடுக.

,, ஹ: அஸ்த்ராய ஹூம்பட் என்று உள்ளங்கைகளில் நடு விரல் சுட்டு விரலால் மூன்று முறை தட்டுக.

,, ஹ: அஸ்த்ராய பட் என்று தலையைச் சுற்றி 10 திக்கிலும் பெருவிரல் சுட்டுவிரலால் ஒலி எழுப்புதலாகிய திக்பந்தனமும்

,, ஹாம் சிவாய வௌஷட் என்று தலைமேல் அஞ்சலி கூப்பி இருதயம் வரை கொண்டுவருதலாகிய பரமீகரணமும் செய்க.

குறிப்பு :— கரந்யாஸம், அங்கந்யாஸம் இரண்டும் செய்தலுக்குச் "சகளீ கரணம்" எனப் பெயர் கூறப்படும்.

விபூதி சுத்தி

கொஞ்சம் திருநீறு எடுத்து இடது உள்ளங்கையில் வைத்து வலதுகை அணிவிரலால் தொட்டுச் சிறிது ராக்ஷஸப்ரீதியாக நிருதி திக்கில் அஸ்த்ராயஹூம்பட் என்று சிறிது தெளித்து நிரீக்ஷணாதி சுத்திசெய்து வலது கையால் மூடி

ஓம் ஹ்லாம் நிவிருத்தி கலாயை நம:
,, ஹ்வீம் பிரதிஷ்டாகலாயை நம:
,, ஹ்ரூம் வித்யாகலாயை நம:
,, ஹைம் சாந்திகலாயை நம:
,, ஹௌம் சாந்தியதீதகலாயை நம:
,, ஹோம் ஈசானமூர்த்தாய நம:
,, ஹேம் தத்புருஷ வக்த்ராய நம:
,, ஹூம் அகோரஹ்ருதயாய நம:
,, ஹிம் வாமதேவ குஹ்யாய நம:
,, ஹம் சத்யோஜாதமூர்த்தயே நம:
,, ஹாம் ஹ்ருதயாய நம.
,, ஹிம் சிரஸே நம:
,, ஹூம் சிகாயை நம:
,, ஹைம் கவசாய நம:
,, ஹௌம் நேத்ரேப்யோ நம:
,, ஹ: அஸ்த்ராய நம: என்று அபிமந்திரித்து

அஸ்த்ராய நம: என்று உத்தூளனஞ் செய்துகொண்டு ஓம் ஹைம் கவசாய நம: என்று ஜலம் விட்டுக் குழைத்து
ஓம் ஹோம் ஈசானமூர்த்தாய நம: என்று சிரசிலும்
,, ஹேம் தத்புருஷ வக்த்ராய நம: என்று நெற்றியிலும்
,, ஹூம்அகோரஹ்ருதயாய நம: என்று மார்பிலும்
,, ஹிம் வாமதேவகுஹ்யாய நம: என்று நாபியிலும்
,, ஹம் சத்தியோஜாதமூர்த்தயே நம: என்று முழந்தாள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விலாப்புறங்கள், கழுத்து முதலிய இடங்களில் இரண்டு கைகளாலும் தரித்துக்கொண்டு, எஞ்சிய விபூதியில் ஜலம் சேர்த்துக் கைகளைக் கழுவி, டி ஜலத்தைக் கீழே விடாமல் கும்பமுத்திரையாக முஷ்டிபோல் இடக்கையைப்

பிடித்து, வலக்கையால் ஏற்று அதனின்று ஒழுகும் ஜலத்தை அஸ்த்ராய நம: என்று சிரஸில் தெளித்துக் கொள்க.

குறிப்பு:- [திருநீறு எல்லா இடங்களிலும் மூன்று ரேகைகளாகவும் ஒன்றையொன்று தீண்டாயலும் நெற்றி, மார்பு ஆகிய இரண்டிடங்களில் எட்டு அங்குல அளவாகவும், புயங்களிரண்டிலும் நான்கு அங்குல அளவாகவும், ஏனைய இடங்களில் ஒவ்வோரங்குல அளவாகவும் இருத்தல் வேண்டும்.]

முன்போல் ஆசமனம் செய்து தொடுமிடந் தொட்டு பிந்துஸ்தானமாகிய புருவ நடுவில் உள்ள அமிருதத்தை மடக்கிய சுட்டுவிரலால் செய்யப்பெற்ற அங்குச முத்திரையால், "ஹ்ருதயாய வௌஷட்" என்னும் மந்திரத்துடன் கொண்டு வந்து அநுட்டான தீர்த்தத்தில் வைத்து வலக்கையால் மூடி மூலமந்திரத்தால் பதினொரு முறை அபிமந்திரித்து "அஸ்த்ராயபட்" என்று திக்பந்தனமும், கவசாய நம: என்று அவகுண்டனமும், வௌஷடந்த மூலத்தால் தேனு முத்திரையுங் கொடுக்க

சந்தியா த்யானம்

பின்னர்க் கையில் கொஞ்சம்ஜலம் எடுத்துக் காலையில் பிராம்ஹை நம: என்றும், நடுப்பகலில் வைஷ்ணவ்யை நம: என்றும், மாலையில் ரௌத்திரியை நம: என்றும் த்யானிக்க.

மந்திராபிஷேகம்

பின்னர்ப் புரோக்ஷணத்திற்காக வலக்கையில் கொஞ்சம் ஜலம், எடுத்து இடக்கையில் விட்டு ஈசானம் முதல் அஸ்த்ரம் முடியப் பதினொரு மந்திரங்களையும் சொல்லி

கைகளை முட்டியாகப் பிடித்துக் கும்பக முத்திரையால் சிரசில் புரோக்ஷித்துக் கொள்க.

மார்ஜனம்

ஜலத்தை எடுத்து வலக்கையால் மூடி முன்போல் பதினொரு மந்திரங்களால் அபிமந்திரித்து இடக்கையில் அந்த ஜலத்தை வாங்கிக் கீழே ஒழுகுகின்ற ஜலத்தை ஈசான முதல் அஸ்த்ரம் வரையில் வௌஷடந்தமாக உச்சரித்து வலக்கையினுல் ஒழுகுகின்ற ஜலத்தை வாங்கிச் சிரசில் தெளித்துக்கொள்க.

அகமருஷணம்

எஞ்சிய ஜலத்தை மீண்டும் வலக்கையில் வாங்கி வலதுநாசியைக் கட்டை விரலால் அழுத்திக்கொண்டு இடதுநாசி வழியாய்க் கங்கைபோல் பரிசுத்த படிகவர்ண மாக உள்ளே சென்று வல துநாசி வழியாகப் பாவங்களை யெல்லாம் கழுவிக்கொண்டு மைக்குழம்புபோல் வெளி வந்ததாகபாவித்து ஜலத்தை வலதுகால் கட்டைவிரலில் உள்ள காலக்னியில் "அஸ்த்ராய ஹும்பட்" என்று புருவ நெரிப்புடன் உத்பவமுத்திரையால் விட்டுவிடுக.

மீண்டும் கை கழுவி ஆசமனம் செய்து சகளீகரணம் செய்துகொண்டு மனத்தில் சூர்யமண்டல மத்தியில் உள்ள சதாசிவமூர்த்தியை த்யானித்து, வலக்கையில் தண்ணீரை எடுத்துக் கவசாய நம: என்று தன்னைச் சுற்றி விட்டு அந்த மண்டல மத்தியில் தான் இருப்பதாகப் பாவித்து இரண்டு கைகளிலும் தண்ணீரை எடுத்து ஸ்வாஹாந்த மான சிவகாயத்திரியால் மூன்று முறை அர்க்கியங் கொடுத்துச் சிவகாயத்திரி மந்திரத்தைப் பத்து முறை

ஜபித்து, மீண்டும் இரு கைகளாலும் ஜலத்தை எடுத்து ஆசார்யர் உபதேசித்த மூலமந்திரத்தை ஸ்வாஹாந்தமாக உச்சரித்து மூன்று முறை அர்க்யம் கொடுத்துப் பத்து முறை ஷை மூலத்தை ஜபித்து ஸ்வாஹா என்பதை இறுதியாகக் கொண்ட சம்ஹிதா மந்திரங்களால் ஒவ்வொருமுறை தர்ப்பணம் செய்து விரல் நுனிகளால் சர்வேப்யோ தேவேப்யஸ்வாஹா என்றும் ! சுண்டுவிரல் மூலமாக சர்வோப்யோ மனுஷ்யேப்யோ வௌஷட், சர்வேப்யோ பூதேப்யோ வௌஷட், என்றும் கைகளின் அடிப்பாகத்தினால் சர்வேப்யோ பிதிர்ப்யஸ்வதா என்றும் தர்ப்பணம் செய்து, ஆசமனஞ் செய்து, சகளீகரணம் செய்துகொண்டு, வலது பெருவிரலால் வலது நாசியை மூடி, சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்துமூச்சை உள்ளே இழுத்து, அணிவிரலால் இடது நாசியையும மூடி முன் போல் சம்ஹிதா மந்திரங்களை உச்சரித்தும் வலது நாசியைத் திறந்து ஷை மந்திரோச்சாரணத்துடன் மெதுவாக மூச்சை வெளிவிடுதலாகிய பிராணயாமத்தைச் செய்தும் ஜபமாலையை பிறர் கண்ணுக்குத் தெரியாத வண்ணம் வஸ்திரத்தால் மூடி இயன்ற அளவு ஜபம் செய்து, பின்னர் சம்ஹிதா மந்திரங்களையும் ஒருமுறை ஜபிக்க. ஆசமனம் செய்து இருக்குமிடத்தில் அஸ்த்ராய நம: என்று தண்ணீரைத்தெளிக்க. பாத்திரத்தில் உள்ள மந்திரங்களை எழுப்பி நெற்றி நடுவில் ஒடுக்கி திருநீறணிந்து கொள்க.

குறிப்பு:-

ஆசமனம்:- மூன்றுமுறை நீர் அருந்தித் தொடமிடங்கள் பன்னிரெண்டும் தொடுதல்.

சம்ஹிதா மந்திரம்:- ஈசான முதல் அஸ்திரம் முடிய உள்ள பதினொரு மந்திரங்கள்.

சூரிய பூஜை

சுத்தமான இடத்தில் கிழக்கு முகமாக உட்கார்ந்து தன்னைச் சுற்றிலும் அஸ்த்ரமயமான கூண்டிருப்பதாகப் பாவித்துச் சூரியபூஜை செய்க.

சூரிய கரந்யாஸம்

ஓம் ரஹ: அஸ்த்ராயபட் என்று முன்பு அநுஷ்டான சகளீகரணத்தில் செய்ததுபோல் வலக்கையை ஒருமுறையும் இடக்கையை இரண்டு முறையும் மேலும கீழுமாகத் துடைத்து ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸஹ சிவசூர்யாய வௌஷட் என்று கும்பிட்டு,

ஓம் அம் ஹ்ருதயாய நம: என்று பெருவிரலிலும்
„ அர்க்காய சிரஸே நம: என்று சுண்டுவிரலிலும்
„ ஜ்வாலினீ சிகாய நம: என்று அணி விரலிலும்
„ ஹ்ரூம் கவசாய நம: என்று நடுவிரலிலும்
„ பம் பானுநேத்ரேப்யோ நம: என்று சுட்டுவிரல்களை உள்ளங்கைகளில் மடக்கியும்
„ ரஹ: அஸ்திராய நம: என்று பெருவிரலிலும் நியஸித்து கவசாய நம: என்று கைகளைச்சுற்றி "ஸஹசிவ சூர்யாய வௌஷட்" என்று கும்பிட்டுப். பரமீகரணம்செய்க.

சூரிய அங்கந்யாஸம்

ஓம் அம் ஹ்ருதயாய நம: மார்பு. பெருவிரலுடன் கூடிய சுண்டுவிரலாலும்
„ அர்க்காய சிரஸே நம: சிரசு. ஷை அணிவிரலாலும்
„ ஜ்வாலினீசிகாய நம: சிகை. ஷை நடுவிரலாலும்
„ ஹ்ரூம் கவசாய நம: கழுத்தைச் சுற்றிய புயங்கள் ஷை சுட்டுவிரலாலும்

ஓம் பம் பானுநேத்ராப்யாம் நம: கண்கள்.	நடுவிரல் சுட்டுவிரல் இரண்டினாலும்
,, ரஹு: அஸ்திராய நம: உள்ளங்கை	அணி விரல்களினாலும் ஸ்பர்சித்து
,, ரஹ: அஸ்திராயபட்: உள்ளங்கை தாளத்திரயம்	அணிவிரல் நடுவிரல்களால் 3 முறை தட்டுக

,, ரஹ: அஸ்திராய ஹூம்பட்: பெருவிரல் சுட்டுவிரல்களால் தலையைச்சுற்றி 10 முறைசோடிகாமுத்திரையால் திக்பந்தனமும்.

,, ஹ்ரூம் கவசாய நம: என்று சுட்டுவிரலால் அவகுண்டனமும்,


,, ஸஹசிவசூர்யாய வௌஷட்: என்று தலை முதல் கால் வரை பரமீகரணமும் (மகாமுத்திரையால்)

செய்து தன்னுருவைச் சூர்ய ரூபமாகப் பாவிக்க.

தெரிசனார்க்கியம்

பாத்திரத்தில் உள்ள ஜலத்தில் செஞ்சந்தனம், சிவப்பு அக்ஷதை, சிவந்த புஷ்பம் இவைகளைச் சேர்த்து ஹ்ராம் ஹ்ரீம் சிவசூர்யாய நம: என்று பூசித்து முழங்காலிலிருந்து புருவ நடுவரை அர்க்கிய பாத்திரத்தைத் தூக்கிச் சூர்ய மண்டலத்திலிருந்து ஒழுகும் அமிர்தம் பாத்திரத்தில் நிறைந்ததாகப் பாவிக்க. பின்னர், தாமிரப் பாத்திரத்தை அஸ்த்ராய நம: என்று தண்ணீர் விட்டுக் கழுவி ஓம் அம் ஹ்ருதயாய நம: என்று தண்ணீர் பூரித்துச் சிவப்புச் சந்தனம், அக்ஷதை, புஷ்பம் கஷோல்காய நம: என்று சாத்தி, ஓம் அம் ஹ்ருதயாய நம:, ஓம் அர்க்காய சிரஸே நம:, ஓம் ஜ்வாலினீசிகாய நம:, ஓம் ஹ்ரூம் கவசாய நம:, ஓம் பம் பானுநேத்ரேப்யோ நம:, ஓம் ரஹ:, அஸ்திராய நம: என்று பூசித்து, வலக்கையால்மூடிச்

சூரிய பூஜா வேதிகை


வடக்கு
தேஜஸ் சண்டர்
சுக்கிரன்
2 ராகு
கேது 3
8
9
17
16
18
24
15
5,10,19
20,21,22
11
14
23
12
13
7
6
மேற்கு
குரு
கிழக்கு
சோமன்
1 சனீஸ்வரன்
அங்காரன் 4
புதன்
தெற்கு

சூரிய மூலத்தால்: அபிமந்திரித்து, ரக்ஷா அவகுண்டனம் செய்து சிவசூர்யாய வௌஷட் என்று தேனுமுத்திரை கொடுக்க. ஷை ஜலத்தால் தன்னையும் சூரிய பூசாத் திரவியங்களையும் அஸ்த்ராய நம: என்று புரோக்ஷிக்க.

சுத்தமான தாமிரத் தாம்பாளத்தில் சூர்ய பூஜா யந்திரத் தகட்டை, முக்கோணத்தின் நுனி மேற்கு நோக்க வைத்து ஷை தாம்பாளத்தில் [பக்கத்தில் உள்ள படத்தில் காட்டிய எண்களின்படி]

1.	ஓம் அம் தண்டினே நம:	நிருதியில்
2.	,, ,, பிங்களாய நம:	வாயு
3.	,, ,, கணபதயே நம:	ஈசானம்
4.	,, , குரவே நம:	அக்னி
5.	,, ,, பிரபூதாஸநாய நம:	நடுவில்
6.	,, ,, விமலாய நம:	அக்னி
7.	,, ,, சாராய நம:	நிருதி
8.	,, ,, ஆராத்யாய நம:	வாயு
9.	,, ,, பரமசுகாய நம:	ஈசானம்
10.	,, ,, பத்மாய நம:	நடுவில்

பின்னர், தள, கேஸரங்களில்

11.	ஓம் ராம் திப்தாயை நம:	கிழக்கு
12.	,, ரீம் ஸூக்ஷ்மாயை நம:	அக்னி
13.	,, ரும் ருஜாயை நம:	தெற்கு
14.	,, ரூம் பத்ராயை நம:	நிருதி
15.	,, ரேம் விபூத்யை நம:	மேற்கு
16.	,, ரைம் விமலாயை நம:	வாயு
17,	,, ரோம் அமோகாயை நம:	வடக்கு

18. ஓம் ரௌம் வித்யுதாயை நம: ஈசானம்
19. ,, ரஹ: சர்வதோமுக்யை நம: நடுவில்
20. ,, அம் அர்க்காஸநாய நம: நடுவில் பத்மத்தில் இலையில் சந்தனம் தொட்டு வைத்தும்
21. ,, அம் கஷோல்காய சிவசூர்ய மூர்த்தயே நம: என்று மூர்த்தியை நியஸித்தும்
22. ,, பம் பானு நேத்ரேப்யோ நம:

என்று நடுவிரல் சுட்டு விரல்களால் நேத்திரம் காட்டியும் கைகளில் புஷ்பத்தால் அஞ்சலியுடன் சிவசூரிய மூலத்தால் ஆவாஹனமும் ஸ்தாபன ஸன்னிதான ஸன்னிரோதனங்களும் அந்தந்த முத்திரையால் செய்து கஷோல்காய ஹ்ருதயாய ஸ்வாஹா என்று ஸ்வாகதார்க்கியமும் கொடுத்து அஸ்த்ர மந்திரத்தால் தீக்பந்தனமும் கவசத்தால் அவகுண்டனமும் வௌஷடந்த சிவசூர்ய மூலத்தால் தேனு முத்திரை, பத்ம முத்திரை, பிம்ப முத்திரைகளும் கொடுத்து, கஷோல்காய ஹ்ருதயாய நம: என்று இருமுறை பாத்தியமும் கஷோல்காய சிவசூர்யாய ஸ்வதா என்று மும்முறை ஆசமனமும், கஷோல்காய சிவசூர்யாய ஸ்வாஹா என்று ஒரு முறை அர்க்கியமும் கொடுத்துப் புஷ்பம் அக்ஷதை அறுகு எடுத்து, வௌஷடந்த மூலத்தால் சாத்தி, ஓம் ஹ்ராம்ஹ்ரீம் ஸஹசிவசூர்யாய நம: என்று அர்க்கிய ஜலத்தால் புரோக்ஷித்து எண்ணெய்க் காப்பு, பால், இளநீர் முதலிய அபிஷேகங்கள் செய்ததாகப் பாவித்து, சிவப்பு வஸ்திரம் ஆபரணம் சாத்தியதாக மனத்தினால் தியானித்து சந்தனம், அக்ஷதை, புஷ்பம் சாத்தித் தூபதீபம் கொடுத்து முன்போல் ஆசமன அர்க்கியம் கொடுத்து ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஸஹசிவசூர்யாய நம:

என்று புஷ்பாஞ்சலி மூன்று முறை சாத்திச் சூர்ய எந்திரத்தின் தெற்குப் பக்கத்தில்

23. ஓம் ஹ்ராம் உஷா தேவ்யாஸநாய நம: என்று இலையில் சந்தனம் தொட்டு வைத்தும்

" " உஷாதேவீ மூர்த்தயே நம: என்று புஷ்பம் சாத்தியும்

" " உஷாதேவ்யை நம:

என்று புஷ்பாஞ்சலியால் ஆவாஹனம் ஸ்தாபனம் சன்னிதானம் சன்னிரோதனமும் ஸ்வாகதார்க்கியமும் திக்பந்தன அவகுண்டன தேனுமுத்திரைகளும் கொடுத்து ஓம் ஹ்ராம் உஷாதேவ்யை நம: என்று இரண்டு முறை பாத்தியமும், உஷாதேவ்யை ஸ்வதா என்று மும்முறை ஆசமனீயமும், உஷாதேவ்யை ஸ்வாஹா என்று ஒரு முறை அர்க்கியமும், உஷாதேவ்யை வௌஷட் என்று புஷ்பாக்ஷதையும், உஷாதேவ்யை நம: என்று ஸ்நானார்த்தம் புரோக்ஷணமும், கந்த புஷ்பாக்ஷதைகளும் சாத்தியும், ஓம் ஹ்ராம் உஷாதேவ்யை நம: என்று மும்முறை புஷ்பாஞ்சலியும் செய்க.

24. சூரிய யந்திரத்தின் வடக்கில்

ஓம் ஹ்ராம் பிரத்யுஷா தேவ்யாஸநாய நம: என்று பத்திரத்தில் சந்தனம் தொட்டு வைத்து

" " பிரத்யுஷா தேவீமூர்த்தயே நம: என்று புஷ்பம் சாத்தி மூர்த்தியை நியஸித்தும்

" " பிரத்யுஷா ஒதவ்யா தேவ்யை நம:

என்று அஞ்சலியால் புஷ்பத்தால் ஆவாஹனம் முதல் தேனு முத்திரை ஈருகச் செய்து பிரத்யுஷாதேவ்யை

நம: என்று இருமுறை பாத்யமும், பிரத்யுஷா தேவ்யை ஸ்வதா என்று மும்முறை ஆசமனமும் பிரத்யுஷா தேவ்யை ஸ்வாஹா என்று ஒருமுறை அர்க்கியமும் கொடுத்து, பிரத்யுஷாயை வௌஷட் என்று புஷ்பாக்ஷதைகளும் சாத்தி, பிரத்யுஷா தேவ்யை நம: என்று ஸ்நானார்த்தம் ஜலம் புரோக்ஷித்து சந்தனாக்ஷதை புஷ்பங்கள் சாத்தி ஓம் ஹ்ராம் பிரத்யுஷாதேவ்யை நம: என்று மும்முறை புஷ்பாஞ்சலி செய்க.

லயாங்க பூஜை

ஓம் அம் ஹ்ருதயாய நம:
,, அர்க்காய சிரஸே நம:
,, ஜ்வாலிநீ சிகாய நம:
,, ஹ்ரூம் கவசாய நம:
,, பம் பானு நேத்ரோப்யோ நம:
,, ரஹ: அஸ்திராய நம:

என்று பூசித்து அங்கங்களுக்கு நமஸ்கார முத்திரையும் நேத்திரத்திற்கு கோவிஷாண முத்திரையும் அஸ்திரத்திற்கு த்ராஸிநீ முத்திரையும் கொடுக்க. பின்னர் ஆவரண பூசை செய்கிறேனென்று பிரார்த்தித்துப் போகாங்க பூஜையைச் செய்க. ஹ்ருதயம் முதலிய ஸ்தானங்களிலிருந்து அந்தந்த மூர்த்தியை எடுத்து

ஓம் அம் ஹ்ருதயாய நம: என்று அக்னி திக்கிலும்
,, அர்க்காய சிரஸே நம: என்று ஈசானத்திலும்
,, ஜ்வாலிநீ சிகாயை நம: என்று நிருதியிலும்
,, ஹ்ரூம் கவசாய நம: என்று வாயுவிலும்
,, பம் பானு நேத்ரோப்யோ நம: என்றுஈசானத்திலும்
,, ரஹ: அஸ்திராய நம:

என்று நான்கு திக்கிலும் பூசித்து மேற்படி மந்திரங்களால் ஸ்வாஹாந்த அர்க்கியம் கொடுக்க. கிழக்கு முதல் பத்ம தளங்களில் முறையே.

ஓம்	ஸம்	ஸோமாய	நம:	என்று	கிழக்கு	வெள்ளைப்பூ
,,	பும்	புதாய	நம:	,,	தெற்கு	பொன்
,,	ப்ரும்	பிரகஸ்பதயே	நம:	,,	மேற்கு	மஞ்சள்
,,	பம்	பார்க்கவாய	நம:	,,	வடக்கு	வெள்ளை
,,	அம்	அங்காரகாய	நம:	,,	அக்னி	சிவப்பு
,,	சம்	சனிச்சராய	நம:	,,	நிருதி	நீலம்
,,	ரம	ராஹவே	நம:	,,	வாயு	புகை
,,	கம்	கேதவே	நம:	,,	ஈசானம்	சிவப்பு

அந்தந்த நிற மலர் கிடைப்பின் அவைகளாலும் அல்லாவிடில் வில்வமல்லா ஏனைய பத்ர புஷ்பங்களாலும் பூசித்து ஸ்வாஹாந்தமான அந்தந்த நாமங்களால் அர்க்கியம் கொடுத்துச் சூரியன் முதல் சமஸ்த தேவதைகளுக்கும் சமஷ்டியாகத் தூபதீபங்காட்டி, கஷோல்காய சிவசூர்யாய ஸ்வதா என்று மும்முறை ஆசமனமும் கஷோல்காய சிவஸூர்யாய ஸ்வாஹா என்று ஒருமுறை அர்க்கியமும் கொடுத்து நைவேத்தியம் வைத்து அதை அஸ்த்ர மந்திரத்தால் புரோக்ஷித்துக் கவசமந்திரத்தால் தண்ணீரால் சுற்றிச் சிவசூர்யாய ஸ்வாஹா என்று அர்க்கியம் கொடுத்துப் புஷ்பத்தால் ஷை மந்திரத்தால் ஏழுமுறை தண்ணீருடன் தொட்டு மிருகீ முத்திரையால் நைவேத்திய பாவனை காட்டி, முன்போல் கஷோல்கஞ் சேர்ந்த ஹ்ருதயத்தால் பாத்யமும் மூலத்தால் ஆசமன அர்க்கியங்களும் கொடுத்துக் கற்பூர நீராஞ்சனம் காட்டிச் சூர்ய சகளீகரணம் செய்து சூர்ய மூல மந்திரத்தை 10உரு ஜபித்துப் புஷ்பத்துடன்கூடிய அர்க்கிய ஜலத்துடனும் முழங்காலை உந்தி ஹ்ராம் ஹ்ரீம் சிவசூர்யாய வௌஷட் என்று சூரியன் வலது அஸ்தத்தில் உத்பவ முத்

திரையால் சமர்ப்பிக்க. பின்னர் அங்க மந்திரங்களையும் ஒரு முறை ஜபித்துச் சமர்ப்பிக்க.

ஸ்தோத்திரம்.

திருச்சிற்றம்பலம்

எல்லாவுலகு மானாய் நீயே யேகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் [நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே புகழ்ச்சே வடியென் [மேல் வைப்பாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதி.

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ னுளமே புகுந்த [வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி சனி [பாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு [மிகவே

திருச்சிற்றம்பலம்

விளங்குதண்டி முதலோரால் சேவிக்கப் படுவோன்
விமலமுதல் நாற்சிங்க பதாசனத்தின்மேலோன்
களங்கமிலாத் தித்தைமுதற் சத்திகண சகிதன்
கருதருண மணியொளியன் கடோற்கான்ம மூர்த்தி

துளங்கலில்தன் னங்கம்தன் னங்கமெனுங் கிரகம்
தொகுமுடுவா தியசூழச் சுவேதகஞ் சத்திவர்ந்தோன்
வளங்கொள்சுவே தாம்புசத்தோட் கரனிருநல் விழியோன்
வருசிவசூ ரியன்காக்க மகிழ்ந்துஅடியேங் களையே.

எனப்புகழ்ந்து பாடி நமஸ்கரித்து பிரத்யக்ஷ சாக்ஷியான சிவசூர்ய மூர்த்தியே, உன் அனுக்கிரஹத்தால் சிவபூஜை செய்கிறேன்; விக்னமில்லாது முடித்துத் தருக" என வேண்டி, கஷோல்காய சிவசூர்யாய ஸ்வாஹா என்று பராங் முகார்க்யம் கொடுக்க.

தேஜஸ்சண்ட பூசை.

சனத்தில் ஓம் அம் தேஜஸ்சண்டாஸநாயநம: என்று பத்திரத்தில் சந்தனம் தொட்டுவைத்து ஓம் தேஜஸ்சண்ட மூர்த்தயே நம: என்று புஷ்பம் சாத்தி, ஓம் அம் தேஜஸ் சண்டாய நம: என்று புஷ்பாஞ்சலியால் ஆவாஹனம் செய்து, ஸ்தாபன சன்னிதான சங்கிரோதன, ஸ்வாகதார்க்கிய, திக்பந்தன அவகுண்டன, தேனு முத்திரை கொடுத்து, தேஜஸ்சண்டாய நம: என்று இரு முறை பாத்யமும், தேஜஸ்சண்டாய ஸ்வதா என்று மும்முறை ஆசமனமும், தேஜஸ்சண்டாய ஸ்வாஹா என்று ஒருமுறை அர்க்கியமும் கொடுத்து, தேஜஸ்சண்டாய ஸ்வாஹா என்று ஸ்நானமும், சந்தனாக்ஷத புஷ்பங்களுஞ் சாத்தி தேஜஸ்சண்டாய நம: என்று மூன்று முறை புஷ்பாஞ்லி சாத்தி சூர்ய நிர்மாலியத்தையும் சாத்தி, தூபதீபம் கொடுத்து முன்போல் ஆசமன அர்க்கியம் கொடுத்து. சூர்ய நைவேத்தியத்தில் சிறிது எடுத்து வைத்து, அஸ்த்ராய நம: என்று புரோக்ஷித்து, கவசாய நம: என்று பரிஷேஜனம் செய்து, தேஜஸ்சண்டாய ஸ்வாஹா என்று அர்க்கியம் கொடுத்து, புஷ்பத்தால் தேஜஸ்சண்டாய ஸ்வாஹா என்று ஏழுமுறை

நிவேதித்து, முன்போல் பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்து, கற்பூர நீராஞ்சனம் செய்து கும்பிட்டுச் சண்டிகேச மகாபாஹ ஸௌரத்யான பராயண சூர்ய பூஜா பலந் தேஹி தேஜஸ்சண்ட நமோஸ்துதே என்று சிவசூர்ய பூஜா பலத்தைத் தருமாறு பிரார்த்தித்து, ஓம் அம் தேஜஸ்சண்டாய நம: என்று பராங்முகார்க்கியம் கொடுத்து, சண்டிகேசரை விஜர்ஜனை செய்க. பின்னர் பாத்திரத்திலுள்ள மந்திரங்களை இருதயத்தில் ஒடுக்கி, ஸௌரபாவனை நிவர்த்தியர்த்தம் கைகால்களைத் துடைத்து, ஆசமனம் செய்து, திருநீறு அணிந்துகொண்டு சகளீகரணம் செய்க.

சிவமயம்.

சிவ பூசை.

ஆசனத்தில் வடக்கு முகமாக உட்கார்ந்து ஓம் கம் கணபதயே நம: என்று முன்போல் குட்டிக்கொண்டு

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

என்று தோத்தரித்து

ஓம் கும் குருப்யோ நம: என்று கும்பிட்டு
கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை ஈர்ப்பாம்.

என்று போற்றி

கலச பூசை.

தீர்த்த பாத்திரத்தில் சுகந்த மலர்கள் சந்தனம் ஜலத்ரவியம் முதலியன சேர்த்து, வேதிகையின் மேல் ஒரு பத்திரம் கிள்ளிவைத்து அதன் மேல் ஷை பாத்திரத்தை வைத்து ஷை பாத்திரத்தின் புறப்பாகத்தில் எட்டுத் திக்குகளிலும் "அஸ்த்ராயபட்" என்று பத்திரம் கிள்ளி வைத்து ரக்ஷை செய்து ஷை பாத்திரத்தின் தீர்த்தத்தில் மலர்களால்

ஓம்கங்காயை நம:
,, யமுநாயை நம:
,, நர்ம தாயை நம:
,, துங்க பத்ராயை நம:
,, சரஸ்வத்யை நம:
,, கோதாவர்யை நம:
,, காவேர்யை நம:
,, வேகவத்யை நம:
,, தாம்பிரபர்ணயை நம:
,, சமஸ்த தீர்த்த தேவதாப்யோ நம:

என்று பூசித்து, வலக்கையால் மூடி ஷை மந்திரங்களால் அபிமந்திரித்துத் திக்பந்தனம் அவகுண்டனம் தேனுமுத்திரை முதலியன கொடுத்து,

திருச்சிற்றம்பலம்

ஒன்று யுலகனைத்து மானார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி யெங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே

கொன்றுடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை முடையார் தாமே

சென்றடு தீர்த்தங்க ளானர் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே.

திருச்சிற்றம்பலம் என்று தோத்தரிக்க.

தீபத்தில்

இலக்குமி பூசை

தீபத்திற்குச் சந்தனம் குங்குமம் புஷ்பம் சாத்தி, ஓம் ஹ்ரீம் மகாலக்ஷ்மியை நம: என்று எட்டு முறை அர்ச்சித்து.

திருச்சிற்றம்பலம்

செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்தொளிரும்
எழில்மேனித் திருவே வேலை

அங்கணுல கிருள்துரக்கு மலர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க் கூட்டும்

பொங்கமுலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பில் மண்ணில்

எங்குளைநீ யவணன்றோ மல்லல்வளஞ் சிறந்தோங்கி
யிருப்ப தம்மா.

எனத் தோத்தரித்துப் பூஜா காரியத்தில் அஷ்ட லக்ஷ்மிகளும் பிரசன்னமாக இருக்கவேண்டுமென்று பிரார்த்தித்து வேதிகையின்மேல்

சாமான்யார்க்கியம்


இரண்டு பத்திரம் கிள்ளிவைத்து அதன்மேல் அஸ்த்ராயபட். என்று ஜலம் விட்டு அலம்பிய பாத்திரத்தை வைத்து நிரம்பத்தண்ணீர்விட்டு. ஓம்ஹ்ருதயாய வௌஷட் என்று அமிருதத்தால் நிரம்பியதாகப் பாவித்துச் சந்தனம் அக்ஷதை புஷ்பம் சேர்த்துப் பிரணவத்தால் ஏழுமுறை ஷி மந்திரத்தால் அபிமந்திரித்துத் திக்பந்தன அவகுண்டன தேனுமுத்திரை கொடுக்க. அந்த அர்க்கிய ஜலத்தால் பூசாத்ரவியங்களையும் தன்னையும் புரோக்ஷித்துக் கொள்க.

சிவ பூஜாங்கத்துவார பூசை

பத்திரத்தில் சந்தனத்தை வைத்து, பூஜா வேதிகையின் மேற்குப் பக்கத்தில் தென்வடல் அகலத்தை மூன்று பங்காக்கி நடுப் பங்கில் தெற்குப் பக்கத்தில் [படத்தில் கண்டுள்ள எண் வரிசைப்படி]

1 ஓம் ஹ்ராம் கணபத்யாஸநாய நம:
„ „ கணபதி மூர்த்தயே நம:
„ „ கணபதயே நம:
2 „ „ சரஸ்வத்யாஸநாய நம.
„ „ சரஸ்வதி மூர்த்தயே நம:
„ „ சரஸ்வத்யை நம:
3 „ „ மகாலக்ஷ்மியாஸநாய நம:
„ „ மகாலக்ஷ்மீ மூர்த்தயே நம:
„ „ மகாலக்ஷ்மியை நம:

துவார பூஜா வேதிகை



தெற்குப் பங்கின் நடுப்பாகத்தில்

4 ஓம் ஹ்ராம் நந்தியாஸநாய நம:
" " நந்தி மூர்த்தயே நம :
" " நந்திநே நம :

அதன் வடக்கே

5 " " கங்காஸநாய நம :
" " கங்கா மூர்த்தயே நம :
" " கங்காயை நம :

வடக்குப் பங்கின் நடுப்பாகத்தில்

6 " " மகாகாளாஸநாய நம :
" " மகாகாள மூர்த்தயே நம :
" " மகாகாளாய நம :

அதன் தெற்கே

7 " " யமுநாஸநாய நம :
" " யமுநா மூர்த்தயே நம :
" " யமுநாயை நம :

ஷ. வேதிகைப் பலகையின் கிழக்குப் பக்கம் நடுவில்

8 " " ரிஷபாஸநாய நம :
" " ரிஷபமூர்த்தயே நம :
" " ரிஷபாய நம : என்று பூசித்து

ஷபீடத்தின் மேற்குப் பக்கத்தில் மகாகாளருக்கு வடக்கில்

9 ஓம் ஹ்ராம் அஸ்த்ரத்துவாரபாலேப்யோ நம: என்று பூசித்துஅஸ்த்ராய நம: என்று நாராச முத்திரையால் ஒரு புஷ்பத்தை உயரே எறிந்து அஸ்த்ராயபட் என்று வலது காலால் பூமியை மூன்று முறை தட்டி,

எல்லா விக்னங்களும் நீங்கப்பெற்றதாகக் கருதி ஓம் ச்லீம், ஹ்ரீம், க்ரீம்,பம், சும் ஹூம்பட் பாசுபதாஸ்த்ராய நம: என்று புஷ்பங்களை யிறைக்க.

ஷடி பீடத்தில் நந்திக்குத் தெற்கே

10 ஓம் ஹாம் வாஸ்துவாதிபதியே பிரம்மாஸநாய நம:
" " வாஸ்துவாதிபதயே பிரம்மமூர்த்தயே நம:
" " வாஸ்துவாதிபதயே ப்ரமணே நம: என்று

பூசித்து, சர்வேப்யோ துவார தேவதாப்யோ நம: என்று எல்லாத் தேவர்களுக்கும் ஆவாஹன ஸ்தாபன சந்நிதான சந்நிரோதன திக்பந்தன அவகுண்டன தேனு முத்திரை கொடுத்து, சர்வேப்யோ துவார தேவதாப்யோ நம: என்று இருமுறை பாத்தியமும் சர்வேப்யோ துவார தேவதாப்யஸ்வதா என்று மும்முறை ஆசமனமும் சர்வேப்யோ துவார தேவதாப்யஸ்வாஹா என்று ஒரு முறை அர்க்கியமும் கொடுத்து, மேற்படி மந்திரத்தால் ஸ்நானம் புஷ்பம் சந்தனக்ஷதை முதலிய உபசாரங்களும் செய்து தூபதீபங் கொடுத்து முன்போல் ஆசமன அர்க்கியங் கொடுத்து நைவேத்தியம் செய்து அஸ்த்ராய நம: என்று சாமான்யார்க்கிய ஜலத்தால் புரோக்ஷித்து, கவசாய நம: என்று தண்ணீரால் சுற்றி, சர்வேப்யோதுவாரதேவதாப்யஸ்வாஹா என்று அர்க்கியமும் புஷ்பத்தால் ஏழு முறை நிவேதனமுங் கொடுத்து, முன்போல் பாத்ய ஆசமன அர்க்கியங்களும் கொடுத்து, கற்பூர நீராஞ்சனம் செய்க.

திருச்சிற்றம்பலம்

மூவெயில் சென்றஞான்று உய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக

மானே நோக்கியோர் மாநடம் மகிழ
மணிமுழா முழக்க வருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே.
திருச்சிற்றம்பலம் எனத் தோத்தரிக்க.

பின்னர் கரந்யாஸம் மட்டும் செய்துகொண்டு சம்ஹிதாப் பிராணயாமம் மூன்று செய்து தூலதேஹ சுத்திசெய்க.

பூத சுத்தி

நன்கு நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு வலக் கையில் ஒரு பத்திரமோ அல்லது புஷ்பமோ எடுத்துக் கும்பக முத்திரையுடன் முழந்தாள் முதலாக வியாபித்துள்ள பிருதிவீ தத்வத்தையும் அதற்கு அதிஷ்டானமான நிவிருத்தி கலையையும் த்யானித்து, இடது நாசியால் மூச்சை இழுத்து ஓம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் நிவிருத்தி கலாயை ஹ: ஹூம் பட் என்று ஐந்து மாத்திரை கும்பகம் செய்து, பிருதிவீ தத்வம், சோதயாமி என்று சோதிக்கப் பெற்றதாகவும், அதில் உள்ள சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களான குணங்கள் நாசமடைந்ததாகவும் கருதி மூச்சை மெதுவாக வலது நாசியால் விட வேண்டும். கையில் உள்ள புஷ்பத்தை முழங்கால் முதல் துவாதசாந்தம் மட்டும் கொண்டுபோய்ப் பாவனை செய்து பின்னல் எறிந்துவிடுக. இது பிருதிவி தத்வ சோதனம்.

மறுபடியும் முன்போல் பூரகம் செய்து நாபி முதல் வியாபித்துள்ள அப்புதத்துவத்தையும் அதற்கு அதிஷ்டானமான பிரதிஷ்டா கலையையும் த்யானித்து ஓம் ஹ்வீம், ஹ்வீம், ஹ்வீம், ஹ்வீம் பிரதிஷ்டா கலாயை ஹ:

ஹூம்பட் என்று நான்கு மாத்திரை கும்பகம் செய்து அப்புதத்வம் சோதயாமி என்று அப்புதத்வம் சோதிக்கப் பெற்றதாகவும், அதிலுள்ள ரஸ ரூப ஸ்பரிச சப்த குணங்கள் நாசமடைந்ததாகவும் த்யானித்து ரேசகத்தை மெதுவாகச் செய்க கையில் உள்ள பத்திரத்தை நாபி முதல் துவாதசாந்த மட்டும் கொண்டுபோய்ப், பாவனை செய்து பின்னால் போடுக. இது அப்புதத்வ சோதனம்.

மீண்டும் முன்போல பூரகம் செய்து இருதயம் முதல் வியாபித்துள்ள தேயுதத்துவத்தையும் அதன் அதிஷ்டானமான வித்யாகலையையும் நினைத்து ஓம் ஹ்ரூம், ஹ்ரூம், ஹ்ரூம். வித்யாகலாயைஹ : ஹூம்பட். என்று மூன்று மாத்திரைகள் கும்பித்து, தேயுதத்வம் சோதயாமி என்று தேயுதத்வம் சோதிக்கப் பெற்று அதிலுள்ள குணங்களான ரூபஸ்பரிச சப்த குணங்கள் நாசமடைந்ததாகக் கருதி மெதுவாக ரேசிக்க வேண்டும். கையில் உள்ள புஷ்பத்தை இருதயம் முதல் துவாதசாந்தம் மட்டும் கொண்டுபோய்ப், பாவனையாகப் பின்னால் போடுக. இது தேயுதத்வ சோதனம்.

திரும்பவும் வாயுவைப் பூரகஞ்செய்து கண்ட முதல் வியாபித்துள்ள வாயுதத்துவத்தையும் அதற்கு அதிஷ்டானமாகவுள்ள சாந்திகலையையும் எண்ணி ஓம் ஹைம் ஹைம் சாந்தி கலாயை ஹ : ஹூம்பட் என்று இரண்டு மாத்திரைகள் கும்பகம் செய்து வாயுதத்வம் சோதயாமி என்று வாயுதத்வம் சோதிக்கப்பெற்றதாகவும் அதிலுள்ள சப்த ஸ்பரிச குணங்கள் நாசமடைந்ததாகவும் கருதி மெதுவாக மூச்சை வெளியில் விட வேண்டும். கையில் உள்ள புஷ்பத்தை முன்போல் கண்ட முதல் துவாதசாந்தமட்டும்

கொண்டுபோய்ப் பாவனையால் விட்டுவிட வேண்டும். இது வாயுதத்வசோதனம்.

இனி முன்போல் பூரகஞ் செய்து புருவ நடுமுதல் துவாதசாந்தமட்டும் வியாபித்துள்ள, ஆகாசதத்துவத்தையும் அதன் அதிஷ்டானமான சாந்தியதீத கலையையும் மனத்திற்கொண்டு ஓம் ஹௌம் சாந்தியதீத கலாயை ஹ: ஹூம்பட் என்று ஒருமுறை தீர்க்கமாகக் கும்பகஞ் செய்து ஆகாசதத்வம சோதயாமி என்று ஆகாசதத்வம் சோதிக்கபெற்றதாகவும், அதிலுள்ள அநித்திய அவ்யாபகமான, பூதாகாசம் நாசமானதாகவும், நித்யமாயும் சுத்தமாயும் வியாபகமாயும் நிர்மலமாயுமுள்ள பரமாகாசசொரூபம் நிற்பதாகவும் த்யானித்து மூச்சை நிறுத்தி ரேசகம் செய்ய வேண்டும். இது ஆகாசதத்வ சோதனம். இந்தவிதமாக ஐந்து பூதங்களும் ஐந்து பிராணாயாமங்களால் சுத்தி செய்யப்பட்ட பின்னர், பரமாகாசரூபமான இந்தச் சரீரத்தை வலது கால் பெருவிரலில் உள்ள காலக்னியை ஓம் ஹ: அஸ்த்ராய ஹூம்பட் என்ற மந்திரத்தால் எழுப்பி, உடம்பு முழுதும் தகனம் செய்யப்பெற்றதாகக் கருதவேண்டும். அவ்வாறு தகிக்கப்பெற்ற உடல் எரிந்த சாம்பற் கயிறு போல விருப்பதாகப் பாவித்து அதன்மீது ஓம் ஹாம் சக்தயே வௌஷட் என்ற மந்திரோச்சாரணத்தால் சத்தியின் திருவருளால் அமிருதமழை பொழிந்து குற்றமற்ற படிகமயமான திவ்ய சரீரம் வந்ததாகப் பாவிக்க. பிறகு அங்க ந்யாஸம் செய்க.

குறிப்பு:— உச்வாஸ, நிச்வாஸ சம்பந்தமான பிராணயாமப் பழக்கமில்லாதவர்கள். இவைகளைப்பாவனையாலேனும் செய்துகொள்ள வேண்டியது மிகமிக அவசியம்.

மேலும், வடதரு ரூபமாகச் செய்யும் ஆதி தைவிக, ஆதி பௌதிக ஆத்யான்மிக முறைகளைக் கற்றோர் பால் கேட்டுணர்ந்துகொள்க.

இனி அகப்பூசை

மேலே சொன்னபடி சுத்தம் செய்யப்பெற்ற பரிசுத்த சிவமயமான சரீரத்தின் இருதய கமலத்தில் தன்னுடைய ஆன்மார்த்த மூர்த்தி எழுந்தருளியதாகப் பாவித்து முறைப் படியே, மானசீகமாக அபிடேகப் பொருள்களெல்லாங் கற்பித்து அபிடேகம் செய்ததாகப் பாவித்துக்கொண்டு மெல்லிய திருவொற்றாடை கொண்டு ஒற்றி, ஆடை ஆபரணங்கள், பூணூல், சந்தனம், மாலை முதலியனவெல்லாம் சாத்தியதாகக் கருதித் தூப தீபம் கொடுத்து ஆசமன அர்க்கியமும் கொடுத்து மனோ கற்பனைக்கு எட்டியமட்டும் நைவேதனமும் சமர்ப்பித்து, பாத்திய ஆசமன அர்க்கியங்கள் கற்பூரம் முதலியன வெல்லாங்காட்டி, அஹிம்சாதி அஷ்ட புஷ்பங்களும் சாத்தி மனத்தால் பிரதக்ஷிண நமஸ்காரங்களும் செய்து வணங்கி நாபிகுண்டத்தில் தணியாது எரிந்து கொண்டிருக்கும் சிவாக்னியில் புருவ நடுவிலுள்ள அமிருத தாரையால் மூல மந்திரத்தை ஸ்வாஹாந்தமாக ஓமம் செய்ததாகப் பாவித்து, அங்கியில் உள்ள பெருமானை இருதயத்தில் சேர்த்து இருதயத்தில் உள்ள மூர்த்தியைப் புருவ நடுவில் சேர்த்து, புருவ நடுவில் உள்ள சோதியுருவை, மூக்கின் நுனியைப் பார்த்து த்யானித்து "ஆண்டவனே உன்னை வெளியில் பூசிக்க அனுமதி வேண்டு"மென்று பிரார்த்திக்க. இறைவனும் அனுமதி தந்ததாகக் கருதுக. இதுவரை அந்தர்யாகம்.

ஸ்தான சுத்தி.

இடது உள்ளங்கையில் வலது கை நடுவிரல் சுட்டு விரல்களால் அஸ்த்ராயபட் என்று மூன்றுமுறை தாளத்ரயம் செய்து, "அஸ்த்ராயஹூம்பட்" என்று சுட்டுவிரல் பெருவிரல்களால் தலையைச் சுற்றி, பத்து திக்கிலும் திக்பந்தனம் செய்து, சுட்டு விரலின் நுனி மேல்நோக்கியவாறு தலையைச்சுற்றி, "கவசாயவௌஷட்" என்று மூன்று அரண்கள் செய்து தேனு முத்திரையால் மேலும் கீழும் சக்தயேவௌஷட் என்று காண்பித்து, சக்தி மயமான வலைகள் மூடிக்கொண்டதாகப பாவிக்கவும்.

திரவ்ய சுத்தி

பூஜா வேதிகையின் தென்பாகத்தில் கிழக்கிலிருந்து மேற்கே நான்கு இடங்களில் நான்கு பத்திரங்களைக் கிள்ளி வைத்து நான்கு வட்டகைகளையும் அஸ்த்ராயபட் என்று ஜலத்தாற் கழுவி அதன்மேல் வைத்து: வேறொரு பாத்திரத்தில் ஹ்ருதயாய வௌஷட் என்று நீர் நிரப்பிச் சந்தனம் புஷ்பம் அக்ஷதைகளை எல்லாவற்றிலும் இட்டு முதலில் கிழக்கேயுள்ள பாத்திரத்தில், விசேஷார்க்ய த்ரவியங்களும் போட்டு, சிவாசனயநம: சிவமூர்த்தயே நம: என்றும் ஈசானம் முதல் சத்தியோஜாதம் வரையிலும் வித்யாதேக நேத்ர மந்திரங்களாலும் மூலத்தாலும் அர்ச்சித்துப் பின்னர் ஹ்ருதயம் முதல் அஸ்த்ரம் வரை ஷடங்கங்களாலும் அர்ச்சித்து, வலது கையால் மூடி மூலமந்திரத்தால் பதினொரு முறை அபிமந்திரித்து ரக்ஷா வகுண்டன திக்பந்தன தேனு முத்திரை கொடுக்க. ஷை ஜலத்தில் சிந்து அபிஷேகத் திருமஞ்சனக் குடத்தில் விடுக.

ஷைஜலத்தால் பூஜாத்ரவ்யங்களில் ப்ரோக்ஷித்து

பாத்யாதி பூசை

இரண்டாவது பாத்திரத்தில் பாத்யத்ரவ்யங்களைப் போட்டு ஓம் ஹாம் சிவாசநாய நம:

„ „ சிவமூர்த்தயே நம:

„ „ சிவாய நம:

„ „ ஹ்ருதயாய நம:

„ ஹிம் சிரஸே நம:

„ ஹூம் சிகாயை நம:

„ ஹைம் கவசாய நம:

„ ஹௌம் நேத்ரேப்யோ நம:

„ ஹ: அஸ்த்ராய நம:

எனவும் மூன்ருவது பாத்திரத்தில் அர்க்கியத்ரவியமும் முன் விசேஷ அர்க்கியம்போல் ஆசன, மூர்த்தி, பஞ்சபிரம்ம,வித்யாதேக, நேத்திர, மூலத்தாலும் ஷடங்கங்களாலும் பூசிக்க. நான்காவது ஆசமன பாத்திரத்தில் அதற்குரிய திரவியங்கள் சேர்த்து ஓம் ஹாம் சிவாஸ நாய நம:

„ „ சிவமூர்த்தயே நம:

„ ஹோம் ஈசானமூர்த்தாய நம:

„ ஹேம் தத்புருஷவக்த்ராய நம:

„ ஹூம் அகோரஹ்ருதயாய நம:

„ ஹிம் வாமதேவகுஹ்யாய நம:

„ ஹம் ஸத்தியோ ஜாதமூர்த்தயே நம:

„ ஹாம் ஹ்ருதயாய நம:

„ ஹிம் சிரஸே நம:


„ ஹூம் சிகாயை நம:

„ ஹைம் கவசாய நம:

„ ஹௌம் நேத்ரேப்யோ நம:

„ ஹ: அஸ்த்ராய நம:

லிங்கசுத்தி



என்று அர்ச்சித்து ஷை பாத்திரங்களை வலதுகையால் மூடி மூலமந்திரத்தால் அபிமந்திரணம் செய்து ரக்ஷாவ குண்டனை தேனு முத்திரை கொடுக்க. ஷை ஜலத்தால் சிரசிலும் பூஜாத்ரவியங்களின் பேரிலும் புரோக்ஷிக்க.

ஆத்ம பூஜை

சந்தனத்தை மூலத்தால் நெற்றியில் திலகம் இட்டு அதன்மீது அக்ஷதை குங்குமம் வைத்துக்கொண்டு தன் ஆசனத்தில் சிவாசநாய நம: என்றும்,

மார்பில் சிவமூர்த்தயே நம: என்றும் சிரஸில் சிவாய நம: என்றும் புஷ்பத்தால் அர்ச்சித்துக்கொள்க. தன்னை ருத்ராக்ஷம், பவித்திரமாலை, யக்ஞோபவீதம், மோதிரம் சிரோமாலை முதலியவைகளால் அலங்கரித்துக்கொள்க.

மந்திரசுத்தி

ஓங்காரம் முதல் நமோந்தம் வரை குருபதிஷ்டமான மந்திரங்களை நாக்கு பல் இவைகள் சம்பந்தமில்லாமல் மானசிகமாக ஒரு முறை உச்சரிக்க.

லிங்கசுத்தி

பீடத்தில் அல்லது ஸ்நான வேதிகையின் பேரில் ஒரு பத்திரத்தை நன்ருய்த் துடைத்து நுனி வடக்கு நோக்க வைத்து அதன்மேல் [பக்கத்தில் உள்ளபடத்தில் கண்ட எண்களின்படி] புஷ்பங்களால் பூசிக்க.

1 ஓம் ஹாம் அனந்தாய நம:
2 ,, ,, தர்மாய நம:
3 ,, ,, ஞானய நம:

4 ,, ,, வைராக்யாய நம:

5 ,, ,, ஐஸ்வர்யாய நம:

6 ,, ,, பத்மாய நம:

என்று ஷடுத்தாஸனம் பூசித்துப் பெருமான் எழுந்தருளி யிருக்கும் பெட்டகக் கோயிலை ஓம் ஹராம் பீமருத்ராய நம: என்று ஒரு புஷ்பம் சாத்தி,

திருச்சிற்றம்பலம்


பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார் வலஞ்செய் மாமறைக் காடரோ
கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே.

திருச்சிற்றம்பலம்

எனப்பாடி,

பெட்டகத்தைத் திறந்து பெருமானை முன்பு பூசித்துள்ள ஷடுத்தாஸனத்தில் எழுந்தருளச் செய்து சாமான்ய அர்க்கிய ஜலத்தால் மூலமந்திரம் சொல்லித் தீர்த்தம் தெளித்து ஒரு புஷ்பம் எடுத்துச் சிவகாயத்திரி மந்திரம் ஒரு தடவை சொல்லிச் சாத்தியும் பஞ்சப் பிரம்ம மந்திரங்களைச் சத்தியோஜாத முதலாகச் சொல்லி அபிமந்திரித்தும் பின்னர் அணிவிரல் சுண்டுவிரல்களால் ஒரு புஷ்பம் இடுக்கிக் கொண்டு பெருமான் திருமுடியிலுள்ள நிர்மாலிய புஷ்பத்தை அஸ்த்ராயபட் என்று நடுவிரல் சுட்டுவிரல்களால் எடுத்தும், எடுக்கும்போது பெருமான் திருமுடியில் எப்பொழுதும் புஷ்பம் இருக்கவேண்டுமாதலால் அணிவிரலிடுக்கிலுள்ள புஷ்பத்தை மூலத்தால் வைத்து நிர்மாலியத்தை, சண்டிகேசர் பொருட்டாக ஈசான

சிவ பூஜா வேதிகை



கணபதி
லக்ஷ்மி
பிரம்மா
விஷ்ணு
ஸ்கந்தர்
அம்பிகா
ஸ்ரீகண்டர்
அனந்தர்
சதாசிவர்
தூமவிச் சண்டர்
வ
வித்யா பீடம்
ஆன்மார்த்த மூர்த்தி
யோக பீடம்
சிவகுரு பாதுகை
சாமான்ய அர்க்கியம்
ஆசமனம்
அர்க்கியம்
பாத்தியம்
விசேட அர்க்கியம்

நிக்கில் வைக்க வேண்டும். சாமான்யார்க்கிய ஜலத்தாலும் மற்றும் கும்பத்திலுள்ள ஜலங்களாலும் நன்கு அபிஷேகம் செய்க. அபிஷேகத் திரவியங்கள் ஸ்படிகம் பாணம் முதலிய லிங்கவிஷயத்தில் எண்ணெ மஞ்சட்பொடி பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், பால்,இளநீர், சந்தனம்,பன்னீர் ஸ்னபனம் முதலியனவாம். பின்னர் மெல்லிய தூய்மையான ஒற்றுடையால் ஒற்றி வஸ்திரம், ஆபரணம், திருநீறு, சந்தனம், குங்குமம், புஷ்பமாலைகள் முதலியன சாத்தி அலங்கரித்து, தூப தீபம் கொடுத்து விசேஷார்க்கியங்களால் சிவாய ஸ்வதா என்று மும்முறை ஆசமனமும் சிவாயஸ்வாஹா என்று ஒருமுறை அர்க்கியமும் கொடுக்க.

கணபதி குரு வணக்கம

பூஜாவேதிகையின் வடக்குப் பாகத்தில் மேற்கிலிருந்து [பக்கத்திலுள்ள படத்தில் கண்ட எண்களின்படி பத்திரத்தில் சந்தனம் தடவிஷை பத்திரத்தைக் கிள்ளி

1 ஓம் ஹாம் கணபத்யாஸநாய நம:
,, ,, கணபதி மூர்த்தயே நம:
,, ,, கணபதயே நம: என்று அர்ச்சித்துப் புஷ்பாஞ்சலியால் ஆவாஹனமும் ஸ்தாபன சன்னிதான சன்னிரோதனமும் ஸ்வாகதார்க்கியமும் திக்பந்தனவ குண்டனமும் தேனு முத்திரையுங் கொடுத்து ஓம்ஹாம் கணபதி குரவே நம: என்று இருமுறை பாத்யமும் கணபதயேஸ்வதா என்று மும்முறை ஆசமனமும் கணபதயே ஸ்வாஹா என்று ஒருமுறை அர்க்கியமும் சாமான்யார்க்கிய ஜலத்தால் கொடுத்து வௌஷடை இறுதியாகவுள்ள மூலத்தால் அறுகுபுஷ்பம் அக்ஷதை சாத்தி, கணபதயே ஸ்வாஹா என்று ஸ்நானார்த்தம் ஷை அர்க்கிய ஜலத்தால்

புரோக்ஷித்துச் சந்தனுக்ஷதை புஷ்பம் சாத்தியும் ஓம் ஹாம் கணபதி குரவே நம: என்று மும்முறைபுஷ்பாஞ்சலிசெய்து தூபதிபங் கொடுத்து முன்போல் ஆசமன அர்க்கியம் கொடுத்து நைவேத்யத்தை ஆஸ்த்ராயபட் என்று புரோக்ஷித்துக்கவசாயநம: என்று ஷிஜலத்தால் சுற்றிக்கணபதி குரவே ஸ்வாஹா என்று ஏழுமுறை புஷ்பத்தால் நைவேத்ய முத்திரையுடன் நிவேதித்துப் புஷ்பம் சாத்தி முன்போல் பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் கொடுத்துக் கற்பூரம் காட்டி வணங்கி,

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருச்சிற்றம்பலம்

என்னும் பாவால் தோத்தரித்துச் சிவபூசை விக்னமின்றி நடத்தித்தரல் வேண்டும் என்று பிரார்த்திக்க.

இலக்குமி குரு

2. கணபதி குருவுக்குக்கிழக்கில் இரண்டு பத்திரங்களில்சந்தனம் வைத்து ஓம் ஹ்ரீம் மகாலக்ஷ்மியாசநாய நம: மஹாலக்ஷ்மி மூர்த்தயே நம: மகாலக்ஷ்மியை நம: என்று புஷ்பாஞ்சலியால் ஆவாஹன ஸ்தாபன சன்னிதான சன்னிரோதனமும் நிரோதார்க்கியமும் திக்பந்தனவ குண்டனமும் தேனுமுத்திரையுங் கொடுத்து ஓம் ஹ்ரீம் மகாலக்ஷ்மியை நம: என்று இருமுறை பாத்யமும் மகாலக்ஷ்மி

யை ஸ்வதா என்று மும்முறை ஆசமனமும் மகாலக்ஷ்மியை ஸ்வாஹா என்று ஒருமுறை அர்க்கியமும் சாமான்யார்க்கிய ஜலத்தால் கொடுத்து, வௌஷடந்த மூலத்தால் புஷ்ப தூர்வாக்ஷதைகள் சாத்தி மகாலக்ஷ்மியை ஸ்வாஹா என்று ஸ்நானர்த்தம் ஷை ஜலத்தால் புரோக்ஷித்துச் சந்தனாக்ஷத புஷ்பங்கள் சாத்தி ஷை மந்திரத்தால் மும்முறை புஷ்பாஞ்சலி செய்து தூபதீபம் கொடுத்து முன்போல் ஆசமன அர்க்கியம் கொடுத்து நைவேத்யத்தை அதன் சுத்தியின் பொருட்டு அஸ்த்ரமந்திரத்தால் புரோக்ஷித்துக் கவசமந்திரத்தால் அர்க்கிய ஜலத்தால் சுற்றி மகாலக்ஷ்மியை ஸ்வாஹாஎன்று ஏழுமுறை நைவேத்திய முத்திரையால் புஷ்பத்துடன் நிவேதித்து முன்போல் பாத்யஆசமன அர்க்கியமும் கொடுத்துக் கற்பூரங் காட்டி வணங்கி,

செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை வெண்ணகைத் [தேன்மொழியார்
வந்து வலஞ்செய்து மாநட மாட மலிந்தசெல்வக்
கந்த மலிபொழில் சூழ்கட னாகைக்கா ரோணமென்று
சிந்தைசெய் வாரைப் பிரியா திருக்கும் திருமங்கையே.

திருச்சிற்றம்பலம்

என்று தோத்தரித்துச் சிவசக்தியே யிங்கு இலக்குமி வடிவிலிருப்பதாகப் பாவித்துச் சிவபூசைக்கு வேண்டுவனவெல்லாந் தந்துதவல்வேண்டுமென்று பிரார்த்திக்க.

சதாசிவாதி சப்த குருபூசை.

பூஜா வேதிகையில் கீழ்ப்புறமிருந்து [படத்தில்கண்ட படி] முறையே,

3. ஓம் ஹாம் சதாசிவ குருமூர்த்தாஸநாய நம:

4. „ „ அனந்த குருமூர்த்தாஸநாய நம:
5. „ „ ஸ்ரீ கண்ட குருமூர்த்தாஸநாய நம:
6. „ „ அம்பிகா குருமூர்த்தாஸநாயநம:
7. „ „ ஸ்கந்த குருமூர்த்தாஸநாய நம,
8, „ „ விஷ்ணு குருமூர்த்தாஸநாய நம:
9. „ „ பிரம்ம குருமூர்த்தாஸநாய நம: என்று

சந்தனம் தடவிய பத்திரங்களை அந்தந்த இடங்களில் வைத்துப் புஷ்பத்தால் ஓம் ஹாம் சதாசிவாதி சப்த குரு மூர்த்தயே நம: ஓம்ஹாம் சதாசிவாதி சப்த குருப்யோ நம: என்று அஞ்சலியுடன் கூடிய புஷ்பங்களால் ஆவாஹித்து ஸ்தாபன சன்னிதான சன்னிரோதனவ குண்டனமும்நிரோ தார்க்கியமும் திக்பந்தன தேனு முத்திரைகளும் கொடுத்துச் சதாசிவாதி சப்தகுருப்யோ நம: என்று இருமுறை ஆசமனமும் சதாசிவாதி சப்த குருப்யஸ்வாஹா என்று ஒருமுறை அர்க்கியமும் கொடுத்து வௌஷடை இறுதியாக ஷி மூலத்தால் புஷ்ப தூர்வாக்ஷதை சாத்தியும் ஷி மூலத்தால் ஸ்நானர்த்தம் சாமான்யார்க்கிய ஜலத்தால் புரோக்ஷித்து, சந்தனக்ஷத புஷ்பங்களும் சாத்தி முன்போல் மும்முறை புஷ்பாஞ்சலி செய்து தூபதீபம் கொடுத்து முன்போல் ஆசமன அர்க்கியங்களும் கொடுத்து நைவேத்தியத்தை அஸ்த்ரத்தால் புரோக்ஷித்துக் கவசத்தால் அர்க்கிய ஜலத்தால் சுற்றிச் சதாசிவாதி சப்த குருப்யஸ்வாஹா என்று ஏழுமுறை நிவேதித்து முன்போல் பாத்ய ஆசமன அர்க்கியம் கொடுத்துக் கற்பூரங் காட்டி வணங்கி,

திருச்சிற்றம்பலம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி

வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை ஈர்ப்பாம்.

2 மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே யென்னுடைய குருவேயுன் குற்றேவல்
செய்வேன்
நெறியே நின்னடியார் நினைக்குந் திருக்காளத்தியுள்
அறிவே யுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே.

திருச்சிற்றம்பலம்

என்ற பாசுரங்களை ஓதியும் குருபாதுகைகளை வணங்கி, "குருமார்களே! உங்களனுமதியால் சிவபூசை செய்கின்றேன். குறைவு வராமல் காக்கவேண்டு"மெனப் பிரார்த்தித்துச் சிவபூஜையைத் தொடங்கவும்.

சிவாசன பூஜை

ஓம் ஹாம் யோகபீடாஸநாய நம: என்று பீடமத்தியில் பூசித்து

,,	,,	ஆதார சக்தயே நம:	என்று	நடுவிலும்
,,	,,	அனந்தாய நம:	,,	கிழக்கு
,,	,,	வாஸுகினே நம:	,,	தெற்கு
,,	,,	தக்ஷகாய நம:	,,	மேற்கு
,,	,,	கார்க்கோடகாய நம:	,,	வடக்கு
,,	,,	சங்கபாலாய நம:	,,	அக்னி

„ „ குளிகாய நம: „ நிருதி

„ „ பத்மாய நம: „ வாயு

„ „ மகாபத்மாய நம: „ ஈசானம்

„ „ அனந்தாஸநாய நம: „ நடுவிலும்

பூசித்து எட்டுப் பாம்புகளால் அனந்தாஸனம் அமைந்துள்ளதாகப் பாவித்து அதன்மேல்

ஓம் ஹாம் தர்மாய நம: என்று அக்னி திக்கிலும்

„ „ ஞானய நம: நிருதி „

„ „ வைராக்யாய நம: „ வாயு „

„ „ ஐஸ்வர்யாய நம: „ ஈசான „

„ „ அதர்மாய நம: „ கிழக்கு „

„ „ அஞ்ஞானய நம: „ தெற்கு „

„ „ அவைராக்யாய நம: „ மேற்கு „

„ „ அனைஸ்வர்யாய நம: „ வடக்கு „

„ „ ராஜஸாய நம: „ தெற்கு „

„ „ தாமஸாய நம: „ வடக்கு „

„ „ சாத்துவிகாய நம: „ நடுவில்

„ „ சிம்மாசனய நம: „ நடுவில் பூசித்துச் சிம்மாசனம் நான்கு சிங்கங்களால் தாங்கப்பெற்றதாக த்யானித்து அதன்மேல்

ஓம் ஹாம் கிருதயுகாய நம: என்று அக்னி திக்கிலும்

„ „ திரேதாயுகாய நம: „ நிருதி „

„ „ த்வாபரயுகாய நம: „ வாயு „

„ „ கலியுகாய நம: „ ஈசான „

„ „ அவ்யக்தாய நம: „ கிழக்கு „

„ „ நியதயே நம: „ தெற்கு „

„ „ காலாய நம: „ மேற்கு „

,, ,, கலாய நம: ,, வடக்கு ,,
,, ,, அதச்சதனய நம: ,, ஈசானத்தின் தெற்கிலும்
,, ,, ஊர்த்வச்சதனய நம: ,, நிருதியின் வடக்கிலும்
,, ,, கேசவாய நம: ,, மத்தியிலும்
,, ,, யோகாஸநாய நம: ,, நடுவிலும் பூசித்து

யோகாசனத்தை நான்கு பூதங்கள் தாங்குவதாகவும் அதச்சதனமாகிய கீழ் இதழுடனும் ஊர்த்துவச்சதன மாகிய மேல் இதழுடனும் கூடியதாகப்பாவித்து அதன் மேல் பத்மாசனத்தை ஆதாரசக்தியின் முளையிலிருந்து கிளம்பியதாகவும் சுத்தவித்யா தத்துவம் வரை உள்ளதாகவும் பாவித்துப் பூசிக்க.

ஓம் ஹாம் கந்தாய நம: என்று நடுவிலும்
,, ,, பீஜாய நம: ,, அதன் மேலும்
,, ,, அங்குராய நம: ,, ,,
,, ,, நாளாய நம: ,, ,,
,, ,, கண்டகேப்யோ நம: ,, ,,
,, ,, தளேப்யோ நம: ,, ,,
,, ,, கேஸரேப்யோ நம: ,, ,,
,, ,, கர்ணிகாயை நம: ,, ,, என்று பூசித்து

எட்டிதழ்களுடன் கூடிய தாமரையாகப் பாவித்துத் தளங்களில்,

ஓம் ஹ்ரீம் வாமாயை நம: கிழக்கு தளத்திலும்
,, ,, ஜ்யேஷ்டாயை நம: அக்னி ,,
,, ,, ரௌத்ரியை நம: தெற்கு ,,
,, ,, காள்யை நம: நிருதி ,,
,, ,, கலவிகரண்யை நம: மேற்கு ,,
,, ,, பலவிகரண்யை நம: வாயு ,,

,, ,, பலப்ரமதின்யை நம : வடக்கு ,,

,, ,, சர்வபூததமன்யை நம : ஈசான ,,

,, ,, மனோன்மன்யை நம : மத்தியிலும்

,, ,, பத்மாஸநாய நம : என்று நடுவிலும் பூசித்து

இந்தப் பத்மாஸனத்தின் மேல் தளங்களுடைய நுனியில் சிவப்பு நிறமாய்ச் சோதியுருவாய் விளங்கிக்கொண்டிருக்கும் சூர்யமண்டலத்தை

ஓம் ஹாம் சூர்யமண்டல[illegible] நம: என்று [illegible]

ஓம் ஹாம் சூர்யமண்டலாதிபதயே பிரம்மணே நம:

கேசரங்களின் நுனியில்

,, ,, சோமமண்டலாய நம : என்று வடக்கு ,,

,, ,, சோமமண்டலாதிபதயே விஷ்ணவே நம : ஷை கர்ணிகையின் நுனியில்

,, ,, வன்னி மண்டலாய நம : என்று நடுவிலும்

,, ,, வன்னி மண்டலாதிபதயே ருத்ராய நம : ஷை கர்ணிகை மத்தியில்

,, ,, சக்தி மண்டலாய நம : என்று நடுவிலும்

,, ,, சக்தி மண்டலாதிபதயே ஈஸ்வராய நம : ஷை

,, ,, விமலாஸநாய நம : என்று நடுவிலும் பூசித்து அதன் மேல்

,, ,, சிவாஸநாய நம : என்று நடுவில் மலர் சாத்தி

ஓம் ஹாம் ஹம் ஹாம் சிவமூர்த்தயே நம : என்று மூர்த்தியை தேஜோமயமாய் தண்டவடிவாய் அவயவங்களில்லாத சோதியாக த்யானிக்க. அந்த சோதி வடிவில் பின் வருமாறு முகங்கள் முதலிய அவயவங்கள் உண்டானதாகப் பாவிக்க.

ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம: சிரசு

,, ஹேம் தத் புருஷவக்த்ராய நம: முகங்கள்

,, ஹூம் அகோர ஹ்ருதயாய நம: மார்பு
,, ஹிம் வாமதேவ குஹ்யாய நம: நாபி
,, ஹம் சத்தியோஜாத பாதாய நம: பாதங்கள்
பின்னர் கலாமயமாய் அவயவங்களை த்யானிக்க.

ஓம் ஹௌம் சாந்தியதீதகலாயை நம: சிரசு
,, ஹைம் சாந்தி கலாயை நம: முகம்
,, ஹ்ரூம் வித்யா கலாயை நம: மார்பு
,, ஹ்வீம் பிரதிஷ்டா கலாயை நம: வயிறு
,, ஹ்லாம் நிவிருத்தி கலாயை நம: பாதங்கள்

இந்த மந்திரங்களால் பூசித்துச் சிவபெருமானை ஏனைய தேவர்கள் மானுடர்களுக்குரிய தேகம் போல், தோல் நரம்பு என்பு இரத்தம் முதலியவைகளால் ஆக்கப்பட்ட தேகமில்லாதவராய் எல்லா அவயவங்களும் சக்தி மயமாய் நம்பால் கொண்ட பரமகருணையின் காரணமாகத் திரு மேனி கொண்டுள்ளவராய்த் தியானிக்க.

தியானம்

மான் மழு கங்காதரம் திரிநேத்ரம் நீலகண்டம் சதுர் புஜம் நாக யக்ஞோபவீதம் சந்திரமவுலியும் உமையோர் பாகம் சதாசிவமாய் நித்தியராய் எல்லோருக்கும் மேம் பட்டவராய்ப் பரமகருணாநிதியாய் உள்ள சிவபெருமானை,

இறைவனுருவம்

"மைக்களமு மான்மழுவும் வரதமுட னபயமுறு
மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணும்
செக்கரு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தார்"

என்றவாறு மனத்தில் உருவகப் படுத்தி எதிரில் எழுந்தருளியிருக்கும் இலிங்க வடிவில் வந்ததாகக் கருதி ஓம் ஹாம் ஹௌம் வித்யாதேகாய நம: என்று பூசித்து

„ ஹௌம் நேத்ரப்யோ நம: என்று நேத்திர முத்திரை காட்டி இரண்டு கைகளையும் அஞ்சலியாகப் புஷ்பத்துடன் பூரக கும்பக ரேசகங்களைச் செய்துகொண்டு குரு உபதேசஞ்செய்த மகாமூலமந்திரத்தை மனத்தினால் ஸ்மரித்து நாபிகமல முதல் துவாதசாந்தம் வரை ஒரு சூரிய ஒளி ஓடுவதாகவும் அது கைக்குள் உள்ள புஷ்பாஞ்சலியில் வந்ததாகவும் பாவித்து நாபி முதல் துவாதசாந்த மட்டும் கும்பிட்டபடியே கொண்டுபோய்ப் பின்னர் புருவ நடுவில் கொண்டு வந்து நிறுத்தி அமிருதத்தால் நனைந்ததாகவும் கோடிசந்திரனுருவாகவும் எண்ணி எதிரில் உள்ள லிங்க பீடத்தில் எழுந்தருளியுள்ள வித்யாதேகத்தில் ஆவாஹன முத்திரையால் ஓம் ஹாம் சத்தியோ ஜாதாய இருதயாய நம: என்று சேர்க்க. அப்படியே கைகளிரண்டையும் திருப்பி ஓம் ஹிம் வாமதேவாய நம: என்று ஸ்தாபனமும் ஓம் ஹூம் அகோராய நம: என்று சன்னிதானமும் ஓம் ஹேம் தத்புருஷாய நம: என்று சன்னிரோதனமும் ஓம் ஹோம் ஈசானாய நம: என்று அவகுண்டனமும் செய்து, ஓம் ஹாம் சிவாயஸ்வாஹா என்று அர்க்கியம் கொடுத்து "தேவ தேவ சர்வஜெகந்நாதா நல்வரவாகட்டும்" என்று உபசாரம் சொல்லி, அதற்கு இறைவன், "குழந்தாய் நல்வரவு சந்தோஷம்" என்று பதிலிறுத்ததாகவும் பாவித்து,

"ஸ்வாமின் சர்வ ஜகன்னாத யாவத் பூஜாவஸானகம்;
தாவத்துவம் ப்ரீதிபாவேன லிங்கேஸ் மிந்சன்னிதீபவ"

என்றும்

சுவாமி! எல்லா உலகங்களுக்கும் நாதரே! எளியேன் பூசை முடியுமட்டும் இந்த லிங்கத்தில் பிரீதியாக எழுந்தருளி யிருத்தல் வேண்டுமெனப் பிரார்த்தித்துப் பின்,

ஓம் ஹாம் ஹ்ருதயாய நம: ஹ்ருதயம்
" " ஹீம் சிரஸே நம: சிரசு
" " ஹூம் சிகாயை நம: சிகை
" " ஹைம் கவசாய நம: பக்கங்கள்
" " ஹௌம் நேத்ரேப்யோ நம: நேத்திரங்கள்
" " ஹ: அஸ்த்ராய நம: அஸ்த்ரம்

இந்த மந்திரங்களால் பெருமானின் அந்தந்த அவயவங்க ளில் பாவனை காட்டித் திக்பந்தனுவகுண்டனம் செய்து தேனு முத்திரை கொடுத்துப் பஞ்சமுகி முத்திரையும் கொடுக்க.

ஓம் ஹாம் சிவாய நம: என்று இருமுறை பாத்யமும்
" " சிவாயஸ்வதா என்று மும்முறை ஆசமனமும்
" " சிவாய ஸ்வாஹா என்று ஒருமுறை அர்க்கிய

மும்கொடுத்துப் புஷ்பம் அறுகு. சந்தனம் அக்ஷதை இவை களை ஓம் ஹாம் சிவாய வௌஷட் என்று சாத்தி ஓம் ஹ: அஸ்த்ராய நம: என்று மணியடித்து ஓம் ஹோம் ஈசானய நம: எனறு தூபமும் ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம: என்று தீபமும் காட்டி, முன்போல் சிவாயஸ்வதா என்று மூன்றுமுறை ஆசமனமும் சிவாய ஸ்வாஹா என்று ஒரு முறை அர்க்கியமும் கொடுக்க. விசேஷார்க்கிய ஜலத்தி னுல் ஓம் ஹாம் சிவாய ஸ்வாஹா என்று அபிஷேகார்த்த மாகப் புஷ்பத்தால் புரோக்ஷித்து (மானஸிகமாக) எண்ணெக் காப்பு மாக்காப்பு மஞ்சட்காப்பு பால் இளநீர் பன்னீர் சந்த னம் முதலியன ஈசானம் முதலிய 11 மந்திரங்களாலும் பத

மந்திரத்தாலும் அபிஷேகம் செய்ததாகப் பாவித்து மெல்லிய திருவொற்றுடை யிட்டதாகவும் பாவிக்க. பின்னர் வஸ்திர ஆபரண யக்ஞோபவீதாதிகளையும் சாத்தியதாகக் கருதிக்கொள்க. பின்னர் சந்தனம் அக்ஷதை புஷ்பம் சாத்தி அஞ்சலியால் ஓம்ஹாம் ஆத்மதத்வாதிபதயே சிவாய நம:

பாதம். மஞ்சள்

ஓம் ஹாம் வித்யாதத்வாதிபதயே சிவாய நம:

இருதயம். சிவப்பு

,, ,, சிவதத்வாதிபதயே சிவாய நம:

சிரசு. வெள்ளை

என்றும், மூலத்தாலும் புஷ்பாஞ்சலி செய்து லயாங்க பூசையைச் செய்க.

லயாங்கம்

ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம.	மூர்த்நி
,, ஹேம் தத்புருஷவக்த்ராய நம:	முகங்கள்
,, ஹும் அகோர ஹ்ருதயாய நம:	ஹ்ருதயம்
,, ஹிம் வாமதேவகுஹ்யாய நம:	நாபி
,, ஹம் சத்தியோஜாத பாதாய நம:	பாதம்
,, ஹௌம் நேத்திரேப்யோ நம:	நேத்திரத்திரயம்
,, ஹாம் ஹ்ருதயாய நம:	இருதயம்
,, ஹிம் சிரஸே நம:	சிரசு
,, ஹூம் சிகாயை நம:	சிகை
,, ஹைம் கவசாய நம:	பக்கங்கள்
,, அஸ்த்ராய நம:	நான்கு பக்கம்

இந்தப்படியே பூசித்துப் புஷ்பாஞ்சலியால் ஆவாஹனம் செய்து, தேனுபத்ம மகர திரிசூல சிருக் முத்திரைகளும்

அங்கங்களுக்கு நமஸ்கார முத்திரையும் கொடுக்க. பின்னர் ஈசான முதல் ஸ்வாஹாந்தமாக ஒவ்வொரு முறை எல்லா மந்திரங்களுக்கும் அர்க்கியம் கொடுக்க.

கௌரீ பூசை

இறைவனுக்கு வடக்குப் பக்கத்தில் ஒரு பத்திரத்தில் சந்தனம் வைத்து,

ஓம் ஹ்ரீம் கௌர்யாஸநாய நம :
,, ,, கௌரீ மூர்த்தயே நம:
,, ,, கௌர்யை நம:

என்று ஆவாகன, ஸ்தாபன, சன்னிதான, சன்னிரோதனமும் நிரோதார்க்கியமும் கொடுத்துத் திக்பந்தன அவகுண்டன தேனு முத்திரையும் கொடுத்து,

ஓம் ஹ்ரீம் கௌர்யை நம: என்று இருமுறை பாத்யமும்
,, ,, கௌர்யை ஸ்வதா ,, மும்முறை ஆசமனமும்
,, ,, கௌர்யை ஸ்வாஹா ,, ஒருமுறை அர்க்கியமும்

கொடுத்து ஓம் ஹ்ரீம் கௌர்யை வௌஷட் என்று புஷ்பாக்ஷதை சாத்தி, ஓம் ஹ்ரீம் கௌர்யை ஸ்வாஹா என்று ஸ்நானார்த்தம் விசேஷார்க்கிய ஜலத்தால் புரோக்ஷித்துக் கந்தாக்ஷதைகள் சாத்தி மூன்று முறை ஓம் ஹ்ரீம் கௌர்யை நம: என்று புஷ்பாஞ்சலியும் சமர்ப்பிக்க.

பின்னர், சுவாமிக்கும் கௌரிக்கும் தனித்தனி நிவேதனம் செய்து தூபதீபங் காட்டி ஆசமன அர்க்கியம சுவாமிக்கும் அம்மைக்கும் தனித்தனியே கொடுத்து நிவேதனத்தை அஸ்த்ரமந்திரத்தால் புரோக்ஷித்துக் கவச

மந்திரத்தால் ஜலத்தால் (விசேஷார்க்கியம்) சுற்றி, ஓம் ஹாம் சிவாய ஸ்வாஹா என்று ஒரு புஷ்பத்துடன் ஜலம் விட்டு ஷ மந்திரத்தால்ஏழுமுறை புஷ்பத்துடன் நைவேத்ய முத்திரையால் நிவேதனஞ் செய்து, புஷ்பத்தைச் சாத்தி, ஸ்வா ஹாந்த மூலத்தால் ஹஸ்த உத்வர்த்தனமும் (கை கழுவுதல்) முன்போல் பாத்ய, ஆசமன, அர்க்கியமும் கொடுக்க. அங்ஙனமே அம்மைக்கும் நைவேத்யத்தை அஸ்த்ரத்தால் புரோக்ஷித்துக் கவசத்தால் சுற்றி, ஸ்வா ஹாந்த மூலத்தால் ஜலம் விட்டு ஏழுமுறை புஷ்பத்துடன் நைவேத்ய முத்திரையால் நிவேதித்து, புஷ்பம் சாத்திப் பின்னர் பாத்திய, ஆசமன, அர்க்கியங்களையும் கொடுக்க. கற்பூரம் காட்டுக.

முக்கிய குறிப்பு:—மேலே சொன்ன கௌரீ பூசையை லயாங்க பூசையைச் செய்யு முன்னரும் செய்து லயாங்கம் பூசித்து நைவேத்ய தூபதீபங் கொடுக்கும் வழக்கமும் உண்டு.

ஆவரண பூசை.

பின்னர் இறைவனிடம் ஆவரணபூசை செய்கிறே னென்று அனுமதிபெற்று,

ஓம்	ஹோம் ஈசான மூர்த்தாய நம:	என்று ஈசான திக்கு,
,,	ஹேம் தத்புருஷவக்த்ராய நம:	,, கிழக்கு ,,
,,	ஹும் அகோரஹ்ருதயாய நம:	,, தெற்கு ,,
,,	ஹிம்வாமதேவகுஹ்யாய நம:	,, வடக்கு ,,
,,	ஹம் ஸத்யோஜாத மூர்த்தயே நம:	,, மேற்கு ,,
,,	ஹௌம் நேத்ரேப்யோ நம:	,, ஈசானத்தின் வடக்கு ,,
,,	ஹாம் ஹ்ருதயாய நம:	,, அக்னி ,,
,,	ஹீம் சிரஸே நம:	,, ஈசானத்தின் தெற்கு.

,,	ஹூம் சிகாயை நம:	நிருதி
,,	ஹைம் கவசாய நம:	வாயு
,,	ஹ: அஸ்த்ராய நம:	நான்கு திக்கிலும்

மேலேகண்ட மந்திரங்களால் அந்தந்த அவயவங்களி லிருந்து அந்தந்த மூர்த்தியை எடுத்துக் கிழக்கு முதலிய ஸ்தானங்களில் பூசிக்க.

இரண்டாவது ஆவரணம்

பத்மாசனத்தின் தளங்களில்

ஓம்	ஹாம்	அனந்தாய நம :	கிழக்கு
,,	,,	ஸூக்ஷ்மாய நம :	அக்னி
,,	,,	சிவோத்தமாய நம :	தெற்கு
,,	,,	ஏகநேத்ராய நம :	நிருதி
,,	,,	ஏகருத்ராய நம :	மேற்கு
,,	,,	திரிமூர்த்தயே நம :	வாயு
,,	,,	ஸ்ரீகண்டாய நம :	வடக்கு
,,	,,	சிகண்டினே நம :	ஈசானம்

மூன்றாவது ஆவரணம்

பத்மாசன தளத்தின் அடிப்பாகத்தில் நுனியில்

ஓம்	ஹாம்	நந்தினே நம :	கிழக்கு
,,	,,	மகாகாளாய நம :	அக்னி
,,	,,	பிருங்கிணே நம :	தெற்கு
,,	,,	விநாயகாய நம :	நிருதி
,,	,,	ரிஷபாய நம :	மேற்கு
,,	,,	ஸ்கந்தாய நம :	வாயு
,,	,,	தேவ்யை நம :	வடக்கு
,,	,,	சண்டேசாய நம :	ஈசானம்

நான்காவது ஆவரணம்

பத்மாசனத்தின் தளத்தின் அடியில் நடுப்பாகத்தில்

ஓம்	ஹ்ராம்	இந்திராய நம :	கிழக்கு
,,	,,	அக்னயே நம :	அக்னி
,,	,,	யமாய நம :	தெற்கு
,,	,,	நிருதயே நம :	நிருதி
,,	,,	வருணாய நம :	மேற்கு
,,	,,	வாயுவே நம :	வாயு
,,	,,	குபேராய நம :	வடக்கு
,,	,,	ஈசானாய நம :	ஈசானம்
,,	,,	பிரம்மணே நம :	ஈசானத்தின் தெற்கு
,,	,,	விஷ்ணவே நம :	நிருதியின் வடக்கில்

ஐந்தாவது ஆவரணம்

பத்மாசன தளத்தின் அடிப்பாகத்தில்

ஓம்	ஹ்ராம்	வஜ்ராய நம :	கிழக்கு
,,	,,	சக்தயே நம :	அக்னி
,,	,,	தண்டாய நம :	தெற்கு
,,	,,	கட்காயை நம :	நிருதி
,,	,,	பாசாய நம :	மேற்கு
,,	,,	துவஜாய நம :	வாயு
,,	,,	கதாய நம :	வடக்கு .
,,	,,	திரிசூலாய நம :	ஈசானம்
,,	,,	பத்மாய நம :	ஈசான தக்ஷிணம்
,,	,,	சக்ராய நம :	நிருதிக்கு வடக்கு

இவ்வாறு பூசை செய்து, எல்லாத் தேவர்களும் இறைவனை நோக்கி அபிமுகமாக இருப்பதாகப் பாவித்து மகா

முத்திரை காட்டி ஒன்றுபடுத்தி, சர்வேப்யோ ஆவரண தேவதா சகித் ஸ்ரீ சவுந்தரநாயகி சமேத ஸ்ரீ ஜயங்கொண்ட சோளீஸ்வராய நம: என்று புஷ்பாஞ்சலி செய்து தூப தீபம் கொடுத்து ஆசமன அர்க்கியமும் கொடுத்து நிவேதித்துப் பாத்யாசமனர்க்கியங்கள் கொடுத்துப் பெருமானுக்குத் திருநீறு அணிவித்துத் தானும் அணிந்துகொண்டு கற்பூரம் காட்டி, முகவாசம், கண்ணடி, குடை, சாமரம், விசிறி முதலிய ராஜோபசாரங்களும் செய்க.

குறிப்பு:- மேற்கண்ட குடை முதலியன இல்லையேல் புஷ்பங்களால் பாவனையாகச் சாத்துக.

ஆத்ம சமர்ப்பணம்

சகளீகரணம், பிராணயாமம் செய்து மூலத்தால் ஜபமாலையைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு புஷ்பம் இடக்கையில் இடுக்கி, பட்டினல் பிறர் காணவண்ணம் மூடி, மௌனமாய், குரு உபதேசம் செய்த மூலமந்திரத்தை இயன்ற அளவு ஜபம் செய்து அந்தப் புஷ்பத்தைக் கையில் வாங்கி மேலும் கீழும் ரக்ஷாவகுண்டனம் செய்து, அர்க்கிய ஜலத்துடன் முழங்காற்படியிட்டு நின்றுகொண்டு உத்பவ முத்திரையால் சிவபெருமானுடைய வலக்கரத்தில் "சிவபெருமானே! நீர் ரகஸ்யத்திற்கெல்லாம் அதிக ரகஸ்யமானவர்; உம்முடைய அனுமதியால் இந்தப் பூசை செய்தேன்! குறைந்த செயலை உடையவனுன என்னுல் செய்யப்பட்ட இந்தப் பூசையில் எப்பொழுதும் நல்லனவும் கெட்டனவும் உமது ஆணைவழியே செய்துகொண்டிருக்கிற என்னை க்ஷமித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"கொடுப்பவரும் நீரே; கொள்ளுபவரும் நீரே; உம்மை யல்லாது உலகமில்லை; எல்லாச் செயல்களும் உம்மாலேயே நடத்தப்பெறுகின்றன. செய்பவராகவும் ஏற்றுக்கொள்பவ ராகவுமுள்ள இந்தத் தன்மைகள் எல்லாம் உமது ஒப்பற்ற கருணையே" என்று பிரார்த்தித்துத் தன்னையும் தான் செய்த பூசையின் பலனையும் பெருமானின் வலக்கரத்தில் ஸ்வாஹாந்த மூலத்தால் சேர்த்துவிடுக. பின்னர், பஞ்ச பிரம்மம், அங்கம் முதலிய பதினொரு மந்திரங்களையும் ஒரு முறை ஜபம் செய்து சமர்ப்பிக்க.

குறிப்பு:- [ஜபமாலை தவறினாலும் சிக்கிக்கொண்டாலும் அகோர மந்திரத்தைப் பதினாறு உரு ஜபிக்க.]

தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

1 பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

2 நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குத
லென்க டன்பணி செய்து கிடப்பதே.

3 கங்காளர் கயிலாய மலையாளர் கானப்பே ராளர் மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர் விடையாளர் பயிலுங் கோயில்

கொங்காளப் பொழில்நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதல் நீங்கி
செங்கானல் வெண்குருகு பைங்கானல் இரைதேரும்
திருவை யாறே.

4 மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்திர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவா யான்திரு
நீறே.

5 வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

6 வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசைப் பாடலார் ஏடகத் தொருவனே.

7 புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி
யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே.

8 செந்துவர் வாய்க்கருங் கண்ணிணை வெண்ணகைத்
தேன்மொழியார்
வந்து வலஞ்செய்து மாநட மாட மலிந்த செல்வக்
கந்த மலிபொழில் சூழ்கட னுகைக்கா ரோணமென்று
சிந்தை செய்வாரைப் பிரியா திருக்குந் திருமங்கையே.

9 விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பி லின்மொழிக் காரிகை வண்ணமும்
விரும்பு வார்வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பின் வண்ணமும் ஆவர்ஐ யாறரே.

10 ஓசை யொலியெலா மானுய் நீயே உலகுக் கொருவனுய்
நின்ருய் நீயே
வாச மலரெலா மானுய் நீயே மலையான் மருகனுய்
நின்ருய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே பிரானுய் அடியென்மேல்
வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானுய் நீயே திருவையா றகலாத
செம்பொற் சோதி.

11 பரவும் பரிசொன் றறியேன்நான் பண்டே யும்மைப்
பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய
மாட்டேன்யான்
கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க்
கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய
அடிகளோ.

12 கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

13 ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

14 பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கட
லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய
தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே
யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு
கூறுதுமே.

15 நடுவுநின்றார்க் கன்றி ஞானமு மில்லை
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை
நடுவுநின்றார் நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே.

16 முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே-ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்போதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

17 அண்ணலேயெனை ஆண்டுகொண் டருளிய அமுதே
விண்ணிலேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னுல்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்றொழ நயந்தருள் புரிகெனப் பணிந்தார்.

18 அறிவரும் வேதா கமங்களுங் கூறற்
கரியநின் றிருவடித் துணையில்
நெறிவழா தன்பாற் பூசைசெய் திறமும்
நிறைபல செல்வமு மருள்வாய்
மறிமழு வணிந்து மால்விடை யூரும்
வள்ளலே நேமங்கோ யிலிற்சீர்
செறிசவும் ,தரநா யகியுடன் விளங்கும்
செயங்கொள்சோ ளீச்சுரத் தானே.

19 நயங்கொள்செந் தமிழாற் றோத்திரம் புரிவார்
நண்ணிடத் தண்ணருள் செய்யும்
வயங்கொள்பல் பேறு மென்றனக் கருள்வாய்
மதகரி மாமுகன் றன்னைப்
புயங்கொள்வேற் குகனைத் தந்திடுந் தாயே
புவிபுகழ் நேமங்கோ யிலில்வாழ்
செயங்கொள்சோ ளிசப் பரமனுள் மகிழத்
திகழ்சவுந் தரியநா யகியே.

20 சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி

கரும்புருவச் சிலைபோற்றி கவுணியற்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் ணெம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரம்சிலம்பும் அடிகள் போற்றி.

21 பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு
முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்குமா மணியே போற்றி.

22 அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபுக் கெல்லாம் முதற்குரு நாத னாகி
பங்கயந் துளவம் நாறும் வேத்திரப் படைபொ றுத்த
செங்கையம் பெருமா னந்தி சேரடிக் கமலம் போற்றி.

23 பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

24 ஒப்பி லேறு(டு)உயர் விகந்தவன் றுவன்றினி தருள
அப்பு ராதனன் தோழனும் அருள்மொழிக் கவிஞன்

செப்பு மேன்மை ஒன்பதிற் றெழுவர்செம் மலர்த்தாள்
வைப்பி னுவினும் மனத்தினுஞ் சிரத்தினு மணப்பாம்.

25 அண்ட வாணர் தொழுதில்லை அம்பலவர்
அடியெடுத் துலகெ லாமெனத்
தொண்டர்சிர் பரவும் சேக்கி ழான்வரிசை
துன்ற குன்றைநக ராதிபன்
தண்ட காதிபதி திருநெறித் தலைமை
தாங்கும் செங்கைமுகில் பைங்கழல்
புண்ட ரீகமலர் தெண்ட னிட்டுவினை
போக்கு வார்பிறவி நீக்குவார்.

26 அல்லாத பரசமய அலகைத்தேர்விண்டகல
அகல் புனற்பெண்ணை வயல்சூழ் வெண்ணெய்
பொல்லாத இபமுகத்துப் புத்தேள் தன்பால்
புனிதசிவா கமப்பொருண்மை பொருந்த ஆய்ந்து
நில்லாத நிலையிதுமற் றென்று மொன்றாய்
நிற்குமநிலை யிதுவெனமெய்ந் நெறிதேர்ந்து யாரும்
வெல்லாத சிவஞான போதம் சொன்ன
மெய்கண்டான் சரணம்முடி மீது கொள்வாம்.

திருச்சிற்றம்பலம்

என்று தோத்தரித்துக் காதலாகிக் கசிந்து உருகி நின்று,

ஓம் ஹாம் சிவாஸநாய நம:
,, ,, சிவமூர்த்தயே நம: என்றும்.
பின்னர் மூலத்தாலும்

ஓம் ஹோம் ஈசானமூர்த்தாய நம:
,, ஹேம் தத்புருஷவக்த்ராய நம:
,, ஹும் அகோர ஹ்ருதயாய நம:
ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம:
ஓம் ஹம் சத்தியோசாத மூர்த்தயே நம: என்ருவது,
ஓம் ஹாம் பவாய தேவாய நம:
,, ,, சர்வாய ,, ,,
,, ,, ஈசானுய ,, ,,
,, ,, பசுபதயே ,, ,,
,, ,, உக்ராய ,, ,,
,, ,, ருத்ராய ,, ,,
,, ,, பீமாய ,, ,,
,, ,, மஹாதே ,, ,, என்ருவது அஷ்ட

புஷ்பம் சாத்திப் புஷ்பாஞ்சலியுடன் மூன்று முறை ஆத்ம பிரதக்ஷிணமாவது அல்லது இஷ்டலிங்கப் பிரதக்ஷிணமாவது செய்து புஷ்பம் சாத்தி மூன்று முறை நமஸ்காரம் செய்க. பின்னர் வேண்டும் வரங்களெல்லாம் வேண்டிக் கொள்க. பூசையில் ஏற்பட்ட குறைகளையெல்லாம் மன்னித்து ஏற்கவேண்டுமென்று பிரார்த்திக்க. சாமான்யார்க்கிய ஜலத்தால்

ஓம் ஹாம் சதாசிவாதி சப்த குருப்யஸ்வாஹா
,, ஹிரீம் மஹாலக்ஷ்மியைஸ்வாஹா
,, ஹாம் கணபதயேஸ்வாஹா
,, ,, சர்வேப் யோ துவாரதேவதாப்யஸ்வாஹா
,, ,, ரிஷபாயஸ்வாஹா
,, ,, வாஸ்துவாதிபதயே பிரம்மணேஸ்வாஹா
,, ,, அஸ்த்ராய துவாரபாலேப்யஸ்வாஹா

என்றும் விசேஷார்க்கிய ஜலத்தால்,

ஓம் ஹ்ரீம் கௌர்யை ஸ்வாஹா என்றும் சிவார்க்கிய ஜலத்தால் சிவபெருமானுக்கு ஸ்வாஹாந்த மூலத்தாலும் பராங்முகார்க்கியம் கொடுத்து உத்பவ முத்திரையால் ஹூம் படந்த அஸ்த்ரமந்திரோச்சாரணத்துடன் இறைவனை உள்ளே லயஞ்செய்துகொள்க.

குறிப்பு:—விநாயகர், சுப்பிரமணியர் முதலிய தேவதைகளைப் பூசிக்க விருப்பமுள்ளவர்கள் தனித்தனியே ஆவாஹனம் முதல் எட்டு சம்ஸ்காரங்களுடன் தூப தீப நைவேத்தியங்களும் பாத்தியாசமன அர்க்கியங்களும் புஷ்பாஞ்சலியும் கற்பூரமும் தோத்திரங்களும் தனித் தனியே செய்துகொள்ளக்கடவர்கள். சிவபெருமானுக்குப் பராங்முகார்க்கியம் கொடுப்பதற்கு முன் அந்தத் தேவர்களுக்குப் பராங்முகார்க்கியம் கொடுக்க.

வித்யாபீட குருபீட பூசை

பெருமானின் பீடத்தின் ஆக்னேய திக்கில் சந்தனம் தொட்டுப் பத்திரம் வைத்து,

ஓம் ஹாம் ஸ்வகுருபாதுகாப்யாம் நம: என்றும்

பீடத்தின் மேற்கில்

ஓம் ஹாம் வித்யாபீடாஸநாய நம: என்றும்

அதற்குத் தெற்குப்பாகத்தில்

ஓம் ஹாம் யோகபீடாஸநாய நம: என்றும் பூசித்து சாமான்யார்க்கிய ஜலத்தால் பாத்தியாசமனார்க்கியமும் தூபதீபமும் கொடுத்து நைவேத்யம் வைத்து நிவேதித்துக் கற்பூரங் காட்டி எல்லா உபசாரங்களும் செய்து பராங்முகார்க்கியமும் கொடுக்க.

சண்டேசுவர பூசை

பீடத்தின் ஈசான திக்கில் பத்திரத்தில் சந்தனம் தொட்டு வைத்து,

ஓம் ஹ்ராம் சண்டிகேஸ்வராஸனாய நம:
,, ,, சண்டிகேஸ்வர மூர்த்தயே நம:
,, ,, சண்டிகேஸ்வராய நம:

என ஆவாஹன ஸ்தாபன ஸன்னிதான ஸன்னிரோதன திக்பந்தன அவகுண்டன தேனுமுத்திரை கொடுத்து ஓம் ஹ்ராம் சண்டாய நம: என இரு முறை பாத்தியமும், சண்டாய ஸ்வதா என மும்முறை ஆசமனமும் சண்டாய ஸ்வாஹா என ஒரு முறை அர்க்கியமும் கொடுத்து ஸ்நானார்த்தம் சாமான்யார்க்கிய ஜலத்தால் சண்டாய நம: என்று புரோக்ஷித்துச் சந்தனாக்ஷதை சாத்தி மூன்றுதடவை புஷ்பாஞ்சலி செய்து, முன்பு வைத்த நிர்மாலியத்தையும் சாத்திப் புதிதாக ஒரு புஷ்பம் நிர்மாலியம் எடுத்துச் சாத்தி, இறைவனின் நிவேத்திய பாகத்தில் சிறிது எடுத்து வைத்துத் தூபதீபம் கொடுத்து முன்போல் ஆசமனார்க்கியம் கொடுத்து, நைவேத்தியத்தை அஸ்த்ரத்தால் புரோக்ஷித்துக் கவசத்தால் ஜலத்தால் சுற்றிச் சண்டாய ஸ்வாஹா என்று சாமான்யார்க்கிய ஜலத்தால் விட்டுப் புஷ்பத்தால் எழு முறை நைவேத்திய முத்திரையால் நைவேத்தியம் கொடுத்துப் பாத்திய ஆசமன அர்க்கியம் கொடுத்து, கற்பூரம் காட்டிப் பிரார்த்திக்க.

"சண்டி கேசமஹாபாஹ சிவத்யானபராயண
சம்போ ஸேவா பலந்தேஹி சண்டநமோஸ்துதே."
"ஏவ மேதத் கிரியாகாண்டம் பவசண்டத வாஞ்ஞயா

தஸ்மாத் ஸர்வம் பரிபூர்ணம் த்வத் பிரஸாதாத்
[திஹாத்வரே"

என்றும், "பெருமானே, இந்தக்கிரியைகள் முற்றும் தங்கள் அனுமதியால் செய்யப்பெற்றன. இவை பரிபூர்ணமாகக் கிருபை செய்ய வேண்டும்; சிவபூஜா பலனைத் தந்தருளல் வேண்டும்" என்றும் பிரார்த்திக்க.

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதர்க் கமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனு டைகள்பிறவும்
வேறு தனக்கென் றமையாமே
மன்னும் தலைவன் பூசனையில்
மல்கும் பயனை யடியவர்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளும்
தூயோன் அடித்தா மரைதொழுவாம்.

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங்க சிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் னஞ்
செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையும்தொ ழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொருத்தருள் வாய்கச்சி யேகம்பனே.

என்று தோத்தரித்து ஓம் ஹாம் சண்டாய ஸ்வாஹா என்று பராங்முகார்க்யம் கொடுத்து, இறைவனையும், ஏனைய மந்திரங்களையும் இதயத்தில் ஒடுக்கிக் கொள்க. பின்னர், பெருமானைக் கண்களில் ஒற்றிக்கொண்டு,

மண் பொருந்தி வாழ்பவர்க்கு மாதீர்த்த வேதியர்க்கும்
விண் பொருந்து தேவர்க்கும் வீடுபேருய் நின்ருனைப்
பண் பொருந்த விசைபாடும் பழனஞ்சே ரப்பனையென்
கண் பொருந்தும் போழ்தத்துங் கைவிடநான் கட
வேனே - அப்பர். திருப்பழனத்தேவாரம்—5

என்று தோத்தரித்துப் பெட்டகக் கோயிலில் எழுந்தருளச் செய்து திருக்கதவம் திருக்காப்பிட்டு,

சதுரம் மறைதாள் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க வெனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

திருச்சிற்றம்பலம்.

எனத் தோத்தரித்து, பின் சாமான்ய அர்க்கியம் விசேடார்க்கியம், பாத்யம், ஆசமனம், அர்க்கியம் ஆகிய தீர்த்தங்களையும் பாவனையாக விடப்பட்ட தீர்த்தங்களையும் சூர்ய பூஜையின் தீர்த்தங்களையும் அஸ்த்ராயபட் என்ற மந்திரத்தால் ஒன்றுகூட்டி ஹிருதயத்தில் ஒடுக்கிக் கொள்க.

அகால மிருத்யு ஹரணம் ஸர்வ வியாதி நிவாரணம்
ஸமஸ்தபாப க்ஷயகரம் ஜெயங்கொண்ட சோளீஸ
பாதோதகம் பாவனம் சுபம்: என்று மூன்று முறை உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடுக. இதர இஷ்ட மித்ர பந்துக்களுக்கும் கொடுக்க. சகளீகரணம் செய்துகொண்டு திருநீறு அணிந்து அகோர மந்திரம் 21 உரு ஜபம் செய்க.

சுபம்.

கபில பூஜா விதி.

கபிலை பூசை செய்வதாயின் பத்திரத்தில் சந்தனம் வைத்தாவது அல்லது பிரத்யக்ஷமாகவுள்ள பசுவையாவது பூசிக்க.

பசுவுக்குச் சந்தனம் புஷ்பம் சாத்தி,
ஓம் ஹ்ராம் கபிலாய நந்தினே நம:
" " " பத்ராயை நம:
" " " சுசிலாயை நம:
" " " சுரபினே நம:
" " " சுமநஸே நம: என்று பூசித்து

பிரத்தியக்ஷ பசுவானால் ஒரு பிடி அறுகம்புல் கொடுக்க. பாவனைப் பசுவானால் அறுகு சாத்துக. பின்னர் சிவாலயத்துக்குச் சென்று முறைப்படி தரிசனம் செய்து வந்து உடனிருக்கத் தகுந்த நியமமுள்ளவர்களை வைத்துக் கொண்டு போஜன விதிப்படி போஜனம் செய்க.

★

பஞ்சகவ்ய பூசைமுறை.

வடக்கு முகமாக அமர்ந்து சகளீகரணம் செய்து கொண்டு தனக்கு எதிரில் கீழ்க்கண்ட படத்தின்படி ஒன்பது கோஷ்டங்களைக் கற்பித்து,

	வடக்கு கோசலம்	ஈசானம் தர்பை ஜலம்
மேற்கு கோமயம்	மத்தி பால்	கிழக்கு தயிர்
	தெற்கு நெய்	

1. நடுக்கோஷ்டத்தில் ஓம் சிவதத்வ கோஷ்டாய நம: என்று பத்திரத்தைக் கிள்ளி வைத்து ஓம் சுசாந்த பாத்ராய நம: என்று பாத்திரம் வைத்து அதில் பாலை நிரப்பி, ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய நம: என்று ஒரு முறை பூசிக்க.

2. கிழக்குக் கோஷ்டத்தில் ஓம் சதாசிவதத்வ கோஷ்டாய நம: என்று முன்போல் பூசித்து ஓம் சுப்ரதிஷ்ட பாத்ராயநம: என்று பாத்திரம் வைத்து, அதில் தயிர் பாதி அளவாக விட்டு ஓம் ஹேம் தத்புருஷ வக்த்ரர்ய நம: என்று இருமுறை பூசிக்க.

3. தெற்குக் கோஷ்டத்தில் ஓம் வித்யாதத்வ கோஷ்டாய நம: என்று பூசித்து ஓம் தேஜோவத்பாத்ராய நம: என்று பாத்திரம் வைத்து, அதில் கால்பாகம் நெய்விட்டு

ஓம் ஹ்ரூம் அகோரஹ்ருதயாய நம: என்று மும்முறை பூசிக்க.

4. வடக்குக் கோஷ்டத்தில் ஓம் காலதத்வ கோஷ்டாய நம: என்று பூசித்து ஓம் அமிர்தாத்மகபாத்ராய நம: என்று பாத்திரம் வைத்து அரைக்கால் பங்கு கோசலம் நிரப்பி ஓம் ஹிம் வாமதேவகுஹ்யாயநம: என்று நான்கு முறை பூசிக்க.

5. மேற்குக் கோஷ்டத்தில் ஓம் நியதிதத்வ கோஷ்டாய நம: என்று அர்ச்சித்து, ஓம் கந்தோதகபாத்ராயநம: என்று பாத்திரம் வைத்து இலந்தைக்கனி அளவாவது அதில் பாதியளவாவது கோமயம் வைத்து ஓம் ஹாம் சத்தியோஜாத மூர்த்தயே நம: என்று ஐந்துமுறைபூசிக்க.

6. ஈசானக் கோஷ்டத்தில் ஓம் கலாதத்வ கோஷ்டாய நம: என்று முன்போல் பூசித்து ஓம் அவ்யக்த பாத்ராய நம: என்று பாத்திரம் வைத்து, சிவகாயத்ரியால் தருப்பையுடன் கூடிய ஜலம் அரைக்கிண்ணம் நிரப்பி மூல மந்திரத்தால் ஆறுமுறை அர்ச்சிக்க.

பின்னர், கோமயத்தை ஓம் ஹாம் சத்தியோஜாத வாமதேவாப்யாம் ஸ்வாஹா என்று கோசலத்திலும், கோசலத்தை ஓம் ஹிம் வாமதேவ அகோராப்யாம் ஸ்வாஹா என்று நெய்யிலும், நெய்யை ஓம் ஹூம் அகோரதத் புருஷாப்யாம் ஸ்வாஹா என்று தயிரிலும் தயிரை ஓம் ஹேம் தத்புருஷ ஈசானப்யாம் ஸ்வாஹா என்று பாலிலும் கலந்து, பின்னர் ஸ்வாஹாந்த மூலத்தால் தருப்பை ஜலத்தைப் பால் கிண்ணத்தில் சேர்த்துச் சமிதா மந்திரத்தால் தருப்பை கொண்டு கலக்கி, ஷ மந்திரத்தால் அபிமந்திரித்து ரக்ஷாவகுண்டன தேனு முத்திரை கொடுக்க.

பின்னர் பிராயச்சித்த விஷயமாக மூல மந்திரத்தால் இயன்ற அளவு அபிமந்திரணம் செய்க. தூபதீபம், நைவேத்யமும் கொடுக்க.

சிவாலய தரிசன விதி

ஸ்தூல லிங்கமான கோபுரத்தை வணங்கிப் பின் வெளிப்பிரகாரம் ஒரு முறை வந்து நமஸ்காரம் செய்து எழுந்து கும்பிட்டுத் துவார பாலகரை வணங்கி, நந்தி தேவரிடம், "உன் அருளாலே உட்சென்று பெருமானை வணங்கிப் பலன் அடைய அனுமதி தந்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு, முன்னர் விநாயகரிடம் சென்று முஷ்டியாகப் பிடித்த கையால் நெற்றியில் மூன்று முறை குட்டிக்கொண்டு, வலக்காது, இடக்காதுகளை இரு கைகளாலும் மாறிப் பிடித்துக் கொண்டு, மூன்று முறை தோப்புக்கரணம் செய்து, பெருமான் சந்நிதியடைந்து வணங்கித் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் முதலியனவற்றைக் காதலாகிக் கசிந்துருகிப் பாடித்தோத்திரித்து அஞ்சலி செய்து சிவாச்சாரியார்களைக் கொண்டு அர்ச்சித்து, கற்பூர தரிசனம் செய்து முறைப்படி வலம் வந்து அம்பிகை சந்நிதிக்குப்போய் முன் சொல்லியவாறு, தோத்திரங்கள் பாடி வலம்வந்து சிவாச்சாரியாரிடம் திருநீறும் குங்குமமும் வாங்கி அணிந்து கொண்டு சண்டிகேசர் சந்நிதியடைந்து மூன்றுமுறை கையைத் தட்டிச் சிவதரிசனத்தின் பலனைத் தந்தருளும்படி பிரார்த்தித்துப் பின் இடப தேவருக்கும் பெருமானுக்கும் புறம்காட்டாது வந்து இடப தேவருக்குப் பின் அஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து வடக்கு முகமாக இருந்து கொண்டு மூலமந்திரத்தை இயன்ற அளவு ஜபம் செய்து திருமனையடைக.

குறிப்பு:—விநாயகருக்கு ஒருமுறை வலம் வரவேண்டும். சிவபெருமானுக்கு 3 முதல் 21 வரை ஒற்றைப்படையாக மனோபீஷ்டம்போல் வலம் வரலாம். அம்பிகைக்கு நான்குமுறை வலம் வரவேண்டும். சிவாலயத்திற்குச் சென்று திருமனை திரும்பும் வரையில் மௌனமிருத்தல் நலம். இடப தேவருக்கும் பலி பீடத்திற்கும் குறுக்கே செல்லக்கூடாது. ஸ்தூபி, கோபுரம் முதலியவற்றின் நிழலை மிதியாது செல்லுதல் நலம். அவசியம் ஏற்பட்டகாலை இவற்றைக் கடந்து செல்லுதலால் தோஷம் இல்லை.

நிர்மாலியம், அபிடேக தீர்த்தங்களையும் மிதியாதிருத்தல் வேண்டும். ஆலயத்திற்கு அணிமையில் மலசலம் கழித்தலாகாது. மூக்குச்சிந்துதல், அபானவாயு விடுதல், தாம்பூலம் தரித்தல், எச்சில் உமிழ்தல், படுத்திருத்தல், மரியாதை இன்றிஇருத்தல் போன்றவை கூடாவாம்.

புட்ப விதி

1. கோட்டுப் பூவகை

வன்னிபலா எலுமிச்சை நாரத்தை கோங்கு
மந்தாரை ஊமத்தை மாவிலிங்கை நொச்சி
பன்னியகில் சந்துமகிழ் மாதுளைமா வசோகு
பாதிரிவெள் ளெருக்கிலந்தை பலாசுநுணா நறவம்
புன்னைவிளா மருதுகொன்றை நெல்லிகுரா செருந்தி
பொன்னினுவிரை கிளுவை குருந்துவில்வ நாவல்
மன்னுதா தகிகுளஞ்சி யலரிவெட்சி பவள
மல்லிகைசண் பகஞாழல் கோட்டுப்பூ வகையே.

1. வன்னி 2. பலா 3. எலுமிச்சை 4. நாரத்தை 5. கோங்கு 6. மந்தாரை 7. கருஊமத்தை 8. மாவி

லிங்கை 9. நொச்சி 10. பன்னீர் 11. அகில் 12 மாதுளை 13. மா 14 அசோகு 15. பாதிரி 16. வெள்ளெருக்கு 17. இலந்தை 18. பலாசு 19. நுணா 20. நறவம் 21. புன்னை 22. விளா 23. மருது 24. கொன்றை 25. நெல்லி 26. குரா 27. செருந்தி 28. பொன்னாவரை 29. கிளுவை 30. குருந்து 31. வில்வம் 32. நாவல்.

2. கொடிப் பூவகை

மருவாரும் காந்தள் காட்டு மல்லிகை முல்லை மௌவல்
கருவார்வெற் றிலையே தாளி கருமுகை கருங்காக் [கொன்றை
முருகாரும் வெண்காக் கொன்றை குருக்கத்தி [முதலா யுள்ள
விருவாட்சி கொகுடி பிச்சி யிவையெலாம் கொடிப்பூ வாமே

[1. காந்தள் 2. காட்டுமல்லிகை 3. முல்லை 4. மௌவல் 5. வெற்றிலை 6. தாளி 7. கருங்காக்கொன்றை 8. வெண்காக்கொன்றை 9. குருக்கத்தி 10. இருவாட்சி 11. கொகுடி 12. பிச்சி.]

3. நீர்ப்பூ வகை

செய்ய தாமரை சேர்ந்தபொற் றாமரை
துய்ய தாமரை சொல்லிரண் டுற்பலம்
மைய செம்மைய வெண்மைய வாகிய
நெய்தல் மற்றிவை நீரின் மலர்களே.

[1. செந்தாமரை. 2. அதிக இதழில்லாத தாமரை 3. வெண் தாமரை. 4. செங்கழு நீர். 5. நீலோற் பலம். 6. கருநெய்தல். 7. செந் நெய்தல். 8. வெண் நெய்தல்.]

4. நிலப்பூ வகை

பட்டிநா யுருவி பூளை பச்சைசெவ் வந்தி தும்பை
வெட்டிவேர் மருக்கொழுந்து கரந்தையே விஷ்ணு காந்தி
மட்டவிழ் துழாய்செங் கிரை மத்தைசெம் பரத்தை வங்க
மிட்டகொக் கிறக னிச்சம் வலம்புரி யிவைநீர்ப் பூவே.

[1. பட்டி 2. நாயுருவி 3. கண்ணுப்பூ 4. பச்சை 5. செவந்தி 6. தும்பை 7. வெட்டிவேர் 8. மருக்கொழுந்து 9. சிவகரந்தை 10. விஷ்ணுகாந்தி 11. துளசி 12. செங்கிரை 13. கருஊமத்தை 14. செம்பரத்தை 15. கொக்கிறகு 16. அனிச்சம் 17. நந்தியாவட்டை.]

துளபம் எடுக்காத காலம்

இரவொடு காலை மாலை இரவியே வெள்ளி செவ்வாய்
பரவுமட் டமியீ ராறு பதினன்கு பர்வம் ஓணம்
விரவிய மாதத் தாதி விதிபாத மபரா ணத்தின்
மருவிய துளபம் கொய்யின் மால்சிரங் கொய்தல் ஒக்கும்.

[இரவு, காலை, மாலை, ஞாயிறு, வெள்ளி, செவ்வாய், அட்டமி. துவாதசி, சதுர்த்தசி, திருவோணம், மாதப் பிறப்பு ஆகிய நாட்களில் துளசி எடுத்தல் திருமாலின் தலையைக் கொய்தலுக்கு ஒப்பாகும்.]

வில்வம் எடுக்காத காலம்

தவமுறு மாதமுன் சதுர்த்தி யட்டமி
நவமியே சதுர்த்தசி நவின்ற நல்லுவா
வவமுறு சோமவா ரத்து மன்பர்கள்
சிவனருச் சனைசெயும் வில்வம தீண்டார்.

[மாதப்பிறப்பு, சதுர்த்தி, அட்டமி, நவமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, திங்கள்கிழமை ஆகிய நாட்களில் வில்வம் எடுக்கலாகாது.]

துளசியும் வில்வமும் வைத்துக்கொள்ளும் நாள்

கூறு நாளி லெடுத்திடுங் கூவிளம்
ஆறு மாதம்வைத் தருச்சனை செய்யலாம்
நாறும் வெள்ளி நிறத்த நறுந்துழாய்
ஏறு மர்ச்சனை யீராறு திங்களே.

மேற்குறிப்பிட்ட நாட்களில் எடுக்கும் வில்வத்தை ஆறுமாதங்களும் துளசியைப் பன்னிரண்டு மாதங்களும் வைத்திருந்து அர்ச்சனை செய்யலாம்.

பஞ்ச வில்வம்

மெச்சியே படியவர் வியந்து சாத்திடு
நொச்சியே நறுவிளா நுவன்ற கூவிளம்
வைச்சிடும் இளுவையே மாவி லிங்கையின்
பச்சிலை யென்றிவை பஞ்ச வில்வமே.

[1. நொச்சி 2. விளா 3. வில்வம் 4. இளுவை 5. மாவிலிங்கம்.]

மாத புட்பம்

மெத்திய பலாசு புன்னை வெள்ளெருக் கலரிப் போது
கொத்தலர் சண்பகப்பூக் கொன்றையே தும்பை செய்ய
கத்தரி பட்டிகஞ்ச காவிமல் லிகையி ராறும்
சித்திரை முதலாக் கொள்க சிறந்திடு மாத புட்பம்.

[1. சித்திரை-பலாசு 2. வைகாசி—புன்னை 3. ஆனி—

வெள்ளெருக்கு 4. ஆடி-அரளி 5. ஆவணி-சண்பகம். 6. புரட்டாசி-கொன்றை 7. ஐப்பசி-தும்பை 8. கார்த்திகை-கத்திரி 9. மார்கழி-பட்டி 10. தை-தாமரை, 11. மாசி-நீலோற்பலம் 12. பங்குனி-மல்லிகை.]

தேவர்களுக்கு ஆகும் மலர்கள்

வில்வமுடன் கொன்றைமலர் சங்கரற்கு நேயம்
  வேழமுகற் கருகுவெட்சி கடம்புவிசா கனுக்காம்
குல்லைநெடு மாயவற்கா மலைமகட்கு நீலம்
  கோகனதம் சூரியற்குத் திருமகட்கு நெய்தல்
வல்லகலை மடந்தைக்கு வெண்கமல நேயம்
  வருங்கொடிய கடவுளர்க்குச் செம்மலர்கள் நேயம்
மல்லிமலர்க் கருங்குவளை அனைவருக்கு நேயம்
  அம்மலரே யெம்மலர்க்கு மதிகமென உரைப்பர்

[1. சிவபெருமானுக்கு — வில்வமும் கொன்றையும் 2. விநாயகருக்கு—அறுகும், திருவாத்தியும், 3. முருகனுக்கு — கடம்பும், 4. திருமாலுக்கு — குல்லைப்பூவும் 5. உமாதேவியாருக்கு—நீலோற்பலமும், 6. சூரியனுக்கு —தாமரையும், 7. திருமகளுக்கு — நெய்தற்பூவும், 8. சரசுவதிக்கு—வெண்டாமரையும், 9. உக்கிரமான துட்ட தேவதைகளுக்கு — சிகப்புப்பூவும் நேயமாம். மல்லிகைப் பூவும் கருங்குவளையும் எல்லாத் தேவதைகளுக்கும் நேயம். கருங்குவளைமலரே எல்லாமலரையும் விடச்சிறந்தது என்று கூறுவர்.]

தேவர்களுக்கு ஆகாத மலர்கள்

தும்பை மறையோர் தமக்காகா துர்க்கைக் கறுகம்
புல்லாகா

வெம்பு கதிர்வா ளவன்றனக்கு வில்வ மாகா விநாயகற்கு
வம்பார் துளபம் தாஞகா வருகன் தனக்கு வலம்புரியும்
அம்மை தனக்கு நெல்லியுமிங் காகா வென்பர் அறிந்
தோரே.

[பிரம்மாவிற்குத் தும்பையும, துர்க்கைக்கு அறுகம் புல்லும், சூரியனுக்கு வில்வமும், விநாயகருக்குத் துளசியும், திருமாலுக்கு நந்தியாவட்டையும், உமாதேவியாருக்கு நெல்லியும் ஆகாவாம்.]

சூரியனுக்கு வில்வமும் விநாயகர்க்குத் துளசியும் ஆகாததற்குக் காரணம்

சூரியன் தினத்தி லீசன் சூடலால் சூரி யற்கு
நேரிய வில்வ மாகா வாயின நிரும லற்கு
நாரிதன் கொங்கை யேபோல் நயத்தலால் துளபந்
தன்னை
சீரிய முன்னோன் வேண்டான் சிவன்சொலச் செவியிற்
கேட்டு.

[சிவபெருமான் ஞாயிற்றுக் கிழமையன்று வில்வத்தைச் சூடுதலால் அதனைச் சூரியன் விரும்பமாட்டான். துளசி திருமாலுக்குப் பிருந்தையின் கொங்கைபோல இன்பம் அளிக்கும் என்ற செய்தியைச் சிவன் சொல்லக் கேட்ட விநாயகர் அதனை விரும்பார்.]

நிர்மாலியம் ஆகியும் பூசைக்குப் பயன்படும் பத்திர புட்பங்கள்

செழித்திடும் துளபமும் சிறந்த வில்வமும்
வழுத்துபொன் மத்தமு மலரு நீலமும்
மழுத்துசெம் பொன்மல ரதனைப் போலவே
கழித்தநிர் மால்யமும் கழுவிச் சாத்தலாம்

[ஒருமுறை அர்ச்சித்த துளசி, வில்வம், கருஊமத்தை, நீலோத்பலம் ஆகியவைகளைப் பொன்மலரைப் போலவே கழுவிச் சாத்தலாம்.]

மலர்கள் பூசைக்குப் பயன்படும் கால அளவு

அம்புயம் எழுநாள் அலரி மூன்றுநாள்
வம்பவிர் குடலையில் வைத்துச் சாத்தலாம்
நம்பிடு நறுமலர் நண்ணி டாவிடின்
தம்பழுப் பரும்பிலை தளிரும் சாத்தலாம்

[தாமரைப்பூவை எழுநாளும் அரளிப்பூவை மூன்று நாளும் குடலையில் வைத்திருந்து சாத்தலாம். வாசனைப்புஷ்பங்கள் அகப்படாத போது பழுப்பிலை தளிர்களையும் சாத்தலாம்.]

ஆகாத புட்பங்கள்

எடுத்துவைத்தே அலர்ந்தமலர் பழம்பூக்கள் மற்ற
வெருக்கிலையா மணக்கிலை யினிற்பொதிந்த பூக்கள்
உடுத்தபுடை வையிற்கரத்தி னமைத்தநறும் பூக்கள்
உதிர்ந்திடுபூ வரையின்கீ ழுற்றவிரைப் பூக்கள்
அடுத்தபுழுக் கடியெச்சம் சிலந்திமயிர் உறுதல்
அங்கையில்வைத் தங்கைகுவித் திடுதல் கங்குறனிலே
எடுத்தமலர் நீரமிழ்த்தல் புறங்காட்டி லெய்தல்
எச்சில்குளி யாதெடுத்தல் இழிபெனுமா கமமே.

[எடுத்தபின் மலர்ந்தபூ, பழம்பூக்கள், எருக்கிலையிலும், ஆமணக்கிலையிலும் கட்டிவைத்த பூக்கள், கட்டிய ஆடையிலும் கையிலும் வைத்த பூக்கள், கீழே உதிர்ந்த பூக்கள், இடுப்பிற்குக் கீழேயுள்ள உறுப்புக்களில் பட்ட பூக்கள், புழுக்கடிப் பூக்கள், சிலந்தியும் பறவைகளின் எச்சமும்

பட்ட பூக்கள், மயிர்பட்ட பூக்கள், கையில்வைத்துக் குவித்திடும் பூக்கள், இரவில் எடுத்த பூக்கள், நீரில் மூழ்கிய பூக்கள், சுடுகாட்டில் எடுத்த பூக்கள், குளியாமல் எடுத்த பூக்கள் ஆகியவை ஆகாவாம்.]

பாவம் அகற்றும் மலர்கள்

எள்ளுநெடும் பிரமகத்தி தன்னை நீக்கும்
இதழிதா யரைக்கொன்ற வேத நீக்கும்
வெள்ளருக்குப் பலதார விணைத ணிக்கும்
வில்வமது பொய்யுரைத்த வெம்மை நீக்கும்
கள்ளுணவு கோங்கப்பூப் புனைய நீக்கும்
கத்தரியினிலை புனையக் குட்டம் நீக்கும்
உள்ளியதெல் லாமெய்தும் வறுமை நீக்கும்
ஒண்டுழாய் மலர்களினு முயற்சி தானே.

[எள்ளுப்பூ பெரிய பிரமகத்தியை நீக்கும். கொன்றைப்பூ தாயாரைக் கொன்ற பாவத்தை நீக்கும். வெள்ளெருக்கு பலதார வினையை நீக்கும். பொய்யுரைத்த பாவத்தை வில்வம் நீக்கும். கோங்கமலர் கள்உண்ட பாவத்தைப் போக்கும். கத்தரிப்பூ குஷ்டரோயைப் போக்கும். எல்லா மலர்களிலும் சிறந்த துளசியால் அர்ச்சிக்கின் நினைத்ததெல்லாம் கைகூடும். வறுமை நீங்கி விடும்.]

தும்பை மலர் கோகத்தி தோஷ நீக்கும்
சொன்னயன் றிடுகளவு பலாசு நீக்கும்
தம்பிதமை யனைக்கோறல் அறுகு நீக்கும்
சாத்திடுசந் தனமகா துக்கம் நீக்கும்
அம்புவியி னிலிங்கபின்ன மசோகு நீக்கும்
அடைந்தோர் தம் வறுமையெலா மான்பால் நீக்கும்

வம்பவிழ் நெய் நெல்லியிவை யுரோகம் நீக்கும்
வளர்நீலோற் பலநீக்கும் வாக்குத் தோஷம்.

[தும்பைப்பூ பசுவைக் கொன்ற பாவத்தையும், பலாசு செல்வத்தையே விரும்பிக் களவு செய்த பாவத்தையும், அறுகு சகோதரரைக் கொன்ற பாவத்தையும், சந்தனம் கொடிய துன்பத்தையும், அசோகு இலிங்க பின்னத்தையும், பசுவின் பால் வறுமையையும், நெய், நெல்லி இரண்டும் ரோகத்தையும், நீலோற்பலம் வாக்கு தோஷத்தையும் நீக்கும்.]

போகம் தரும் மலர்கள்

பாதிரியம் பிகைக்கணியில் இல்லாள் எய்தும்
பலாசமல ரருச்சிக்கப் பணிக ளுண்டாம்
கேதகையின் மலர்சாத்தச் சிவிகை எய்தும்
கிளர்முல்லை மலர்சாத்தக் கவிகை யுண்டாம்
தாதுமா துளைசாத்தத் தனங்க ளெய்தும்
தாமரையின் மலர்சாத்தப் பகைக ணீங்கும்
மேதகுநா ரத்தையிலை வியந்து சாத்தில்
விரைத்தகரை சாத்தியிடிற் பசுவுண்டாமே

[அம்பிகைக்குப் பாதிரிப்பூ சாத்தில் நல்ல மனைவி வாய்ப்பாள். பலாச மலர் அணிவித்தால் அணிகள் கிடைக்கும். தாழம்பூ சாத்தில் சிவிகையும், முல்லைப்பூ சாத்தில் கவிகையும், மாதுளம்பூ சாத்தில் தனங்களும் கிட்டும். தாமரைப்பூ அணிவித்தால் பகைகள் நீங்கும். நாரத்தையிலையும் மணம்மிக்க தகரையிலையும் சாத்தில் பசுக்கள் கிடைக்கும்.]

தெக்கமழும் எலுமிச்சை காடு பல்கும்
செங்கழுநீர் மலர்சாத்தப் புரவி எய்தும்
காக்கமழும் மலர்சாத்தக் கமலை சேர்வாள்
கல்லார மலர்சாத்தப் புதல்வர்ப் பேரு
மாக்கமழும் நெய்தலுக்கர்த் தங்க ளுண்டாம்
பாக்கியங்க ளத்தனையும் வேண்டு மென்னிற்
பரிமளமா மலரனைத்தும் பார்வதிக்கர்ச் சனையே.

[அம்பிகைக்கு எலுமிச்சையிலை சாத்தில் காடுகள் நிறையத் தருவாள். செங்கழுநீர்ப்பூ சாத்தில் குதிரைகள் தருவாள். சோலையில் மணம் வீசும் பூக்களைச் சாத்தில் இலக்குமி நம்மைச் சேர்வாள். நெய்தல்மலர் சாத்தில் பொருள்கள் கிடைக்கும். எல்லா வகையான பாக்கியங்களும் வேண்டுமென்றால், பரிமள மலர் அத்தனையாலும் பார்வதி தேவிக்கு அர்ச்சனை செய்யவேண்டும்.

அரிசியோ டறுகு சாத்த லருக்கியம் பூவினாலே
பரிவுறக் கொடுத்தல் யாக புண்ணியம் பலவு முண்
விரிமலர் நீலமத்தம் யாமத்தில் விசேடமாகும் [டாம்
பரிமளம் தோய்த்து மீசன் பதமலர் சாத்த லாமே

[அக்ஷதையுடன் அறுகு சாத்திப் பூவினாலே அருக்கியம் கொடுத்தால் யாகபலன் எல்லாம் உண்டாகும். நீலோற் பலமும் கருஊமத்தையும் அர்த்தயாம பூசைக்குச் சிறந்தனவாகும். இம் மலர்களில் வாசனை தோய்த்தும் ஈசனது பாதத்திற் சாத்தலாம்.]

மாத அபிடேகம்

கொழுந்து சந்தனம் கூறிய முப்பழம்
அருந்து பால்சர்க் கரைபணி யாரமே
தழைந்தவன்னம் தழனெய் யொழுகுதேன்
விழைந்த நெய்பொதி கம்பளம் வெண்டயிர்.

[சித்திரை மாதத்தில் தளிராலும், வைகாசியில் சந்தனத்தாலும், ஆனியில் மா, பலா, வாழை என்ற முப்பழத்தாலும், ஆடியில் பாலாலும், ஆவணியில் சர்க்கரையாலும், புரட்டாசியில் பணியாரத்தாலும் ஐப்பசியில் அன்னத்தாலும், கார்த்திகையில் நெய்யாலும் மார்கழியில் தேனாலும், தையில் நெய்யாலும், மாசியில் கம்பளத்தாலும், பங்குனியில் தயிராலும் அபிஷேகம் செய்யலாம்].

வார புட்பம்

பங்கய மலர்ந்தவெள் ளாம்பல் பாசடை
செங்கழு நீர்மலர் தகரச் செம்மலர்
தங்கிய குவலயம் தவெண் டாமரை
மங்கைகேள் நிலமேழ் வார புட்பமே.

[ஞாயிறு—தாமரை. திங்கள்-வெள்ளை அல்லி. செவ்வாய்—செங்கழு நீர். புதன்—தகரப்பூ. வியாழன்—குவலய மலர். வெள்ளி—வெண்தாமரை. சனி—நீலோத்பலம்.]

வார பத்திரம்

சூரியன் வில்வமே துளசி திங்களே
ஆரலில் விளாவிலே அறிவன் மாதுளை
வேரிலா யுருவிபொன் வெள்ளி நாவலே
காரியாந் சனியினில் விஷ்ணு காந்தியே.

[ஞாயிறு-வில்வம். திங்கள்-துளசி. செவ்வாய்-விளா. புதன்-மாதுளை. வியாழன்-நாயுருவி. வெள்ளி-நாவல். சனி-விஷ்ணுகாந்தி.

*

போஜன விதி

சிவாலய தரிசனத்தின் பின்னர் போஜனத்திற்காகச் சுத்தமான கோமயத்தினால் மெழுகிச் சுத்தம் செய்யப் பெற்ற ஸ்தானத்தில் விபூதியினால் தீக்ஷாக் கிரமப்படி 4, 3, 2, 1ல் ரேகையும் போட்டுக் கிழக்கு, மேற்கு, வடக்கு முகத்தில் ஏதாவது ஒரு முகமாக உட்கார்ந்து போஜன யோக்யமான சமயாசாரமுள்ளவர்களை உடனிருத்திக் கொண்டு பொன் வெள்ளி முதலிய பாத்திரங்களை யாவது, 7 தரம் சாம்பல், புளி, நெய் இவைகளால் அகோர மந்திரத்தால் சுத்தி செய்யப்பட்ட தாமிரம், இரும்பு, வெங்கலப் பாத்திரங்களையாவது வாழை, தாமரை, முருக்கு, மாபலா, தேக்கு முதலிய இலைகளில் ஒன்றையாவது நீரால் கழுவிப் பரப்பி, உட்கார்ந்து, இலையை இடது கையால் தொட்டுக்கொண்டு போஜனம் செய்யவும்.

இலையில் அல்லது பாத்திரத்தில் வட்டித்த அன்னத்தையும் காய்கறி பதார்த்தங்களையும் அஸ்திராய நம. என்று நீரால் புரோக்ஷித்துக் கவசாய நம: என்று கையால் தொட்டு "மிருத்யுஞ்ஜயாய வௌஷட்" என்று 7 தடவை அபிமந்திரணம் செய்து சிவன், குரு முதலானவர்களுக்குச் சமர்ப்பணம் செய்து ஈசானத்தால் ஜலத்தால் இலையைச்

சுற்றிக் கொஞ்சம் அன்னத்தால் வலப்பாகத்தில் பலியிட்டுக் கையினால் சுண்டுவிரல் மூலம் ஒழுகும் ஜலத்தில் ஹாம் நாக கூர்மக்ருகர தேவதத்ததனஞ்ஜயேப்யோ உபப்ராண வாயுப்யோ நம: என்று ஷடி வாயுக்களுக்கு நிவேதனம் செய்து, ஆபோசனம் போடச்செய்து தத்புருஷாயஸ்வாஹா என்று உட்கொண்டு அஸ்திராய நம: என்று உதரத்தில் உள்ள அக்கினியை ஜொலிக்கச் செய்து ப்ராண அபான சமான உதானவ்யானாய பஞ்சப்ராண வாயுப்யோ ஸ்வாஹா என்று சிறிது அன்னத்தைப் பல்லில் படாமல் வாயிலிட்டு விழுங்கவும். பின்னர் இடது கையில் நீர்விட்டு அலம்பி, அஸ்திராய நம: என்று மார்பைத் தொடவும். வேண்டுமளவு நெய்யும் தயிரும் உப்பும் கூட்டி நன்கு புசிக்கவும்.

சாப்பிடும் பொழுது இடையிடையே ஜலபானம் செய்தலும் ஒருவர் குடித்து மிகுந்த ஜலத்தை அருந்துதலும் பாத்திரத்தில் வாய் வைத்து உறிஞ்சுதலும் வீண் வார்த்தையாடுதலும் கூடாவாம்.

சுரைக்காய், மச்ச மாம்சங்கள் முதலிய பதார்த்தங்களைச் சேர்க்கலாகாது. ஒரு போதும் உப்பைத் தன் கையினால் பிரத்தியக்ஷமாக இலையில் போட்டுக் கொள்ளுதல் கூடாது. உணவருந்தும் போது, விளக்கு அவிந்து விடின் உடனே உண்ணுவதை நிறுத்தி மீண்டும் விளக்கு வந்தவுடன் அன்னத்தின் மீது திருநீறு தெளித்து, அகோர மந்திரம் 16 உரு ஜபித்துப் பின்னரே உண்ணுதல் வேண்டும்.

பகலில் பால் அன்னமும் இரவில் தயிர் சேர்ந்த அன்னமும் உண்ணுதல் கூடாது. திருப்தியாக உணவு

உண்டபின்னர், கையில் நீர் வார்க்கச் செய்து தத்புருஷா யஸ்வாஹா என்று அருந்தி எழுந்து கைகளைக் கழுவி வாய் 7முறை கொப்பளித்து, முழங்கால் வரை இரண்டு கால் களையும் நன்கு கழுவிச் சுத்தமான இடத்தில் உட்கார்ந்து, ஆசமனம் செய்து உதடுகளைத் துடைத்துத் தொடுமிடம் தொடவும். பின்னர்த் திருநீறணிந்து கொண்டு, அகோரமந் திரத்தை எழுமுறை ஜபம் செய்து, தாம்பூலம் தரித்துக் கொள்ளுக.

பின்னர் நல்ல பயன் தருவனவாகிய சைவசாஸ்திரங் களைப் படிக்க.

போஜன விதி முற்றும்.

★

பிற்சேர்க்கை

சிவ சம்ஸ்காரங்களின் இன்றியமையாமை.

சிவபெருமான் அநாதியே ஆணவாதி மலங்களினின்றும் நீங்கிய நிர்மலன் (பரிசுத்தன்). உயிர்கள் அநாதியே ஆணவ மலத்தால் கட்டுண்டவர்கள். அதனால் விருப்பு, வெறுப்பு உள்ளவர்கள். அதுவே "மூலகன்மம்" என்று சொல்லப்பெறும். அதனால் கன்ம சம்பந்தம் உள்ளவர்கள் ஆகிறார்கள். அந்தக் கர்ம பந்தத்திற்கு ஏற்பவே மாயா கார்யமாகிய உடம்பு, மனம் முதலிய கரணங்கள், உலகம், உலகத்திலுள்ள இன்ப, துன்ப அனுபவங்கள் என்னும் இவைகள் சிவபெருமானால் கூட்டுவிக்கப் பெறுகின்றன. ஆணவமல நீக்கத்திற்காகவே இங்ஙனம் மாயாமலத்தோடு கூட்டுவிக்கப் பெறுகிறோம். (இந்து ஆடையில் உள்ள அழுக்கை நீக்குதற்காக உவர்மண், சாணி முதலியவைகளை அவ்வாடையோடு சேர்த்தல் போலாம்.) ஆணவமலம் இருள் போன்றது. மாயாமலம் ஒளிபோன்றது. மாயா மலம் ஒளி போன்றதாயினும் ஆணவமல சம்பந்தத்தை முன்னாகக்கொண்டே அதன்சம்பந்தம் உண்டாவதால் அதுவும் ஆன்மாக்களுக்குரிய அறிவு, இச்சை, செயல் களைப் பரிபூரணமாக விளக்குவதன்று. (ஆணவ மலமும் மாயாமலமும் முறையே நோயும் நோய்க்குரிய மருந்தும் போன்றவை.) இந்த மாயாமலமும் ஞானமே வடிவாகிய இறைவன் சந்நிதியிலே முனைத்து நிற்கும் 'சத்துப்பொருளன்று; 'அசத்துப் பொருளே' (சடம்) ஆகும். இத்தகைய மாயாமலத்தாலாகிய தனுகரணங்களைப் பெற்றுள்ள நாம், அந்த நிலையில் நின்றே சிவபெருமானை உள்ளவாறு பூசிக்கும் தகுதியுடையேமல்லேம். ஆதலால் ஆணவாதி மல

நீக்கமும் சிவத்வ விளக்கமும் உண்டானபின்பே சிவோபாசனை செய்யும் தகுதியுடையவராவோம். அங்ஙனம் மல நீக்கத்தையும் சிவத்வ விளக்கத்தையும் உண்டுபண்ணுவதே சிவதீக்ஷையாகும். சிவதீக்ஷையின் வாயிலாகச் சிவஞான விளக்கத்தைப்பெற்றுள்ள நாம், அங்ஙனம் பெற்ற சிவஞான விளக்கத்தை நம் பக்கலிலே நின்று காத்துக் கொள்ளுதற்காகவும், சிவபூஜைக்கு உறுப்பாக வேண்டப் படும் சந்தனம், புஷ்பம் முதலிய சாதனங்கள், உலகப் பொருள்களாதலின், அந்தப் பொருள்களையும் ஞானமய மாக அமைத்துக்கொண்டா லல்லது சிவபூஜைக்குரிய சாதனங்களாக அமையாமையால், அவற்றை அங்ஙனம் ஆக்குதற்காகவும் நமக்கும் அந்தப் பொருள்களுக்கும் சம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. உயிர்ப் பொருள், உயிரில் பொருள் ஆகிய இரண்டினும் ஒப்பக் கலந்துள்ள சிவத்தன்மையை வெளிப்படுத்துவதே சம்ஸ் காரமாகும்.

சொற்பொருள் விளக்கம்

அநுட்டான விதி

1. ஆசமனம்—மந்திரமயமான நீர் அருந்துதல்.

இது சைவ சமயத்தில் குறைவறக் கூறப்பட்ட 36 தத்துவங்களையும் கடத்தலைப் புலப்படுத்துவது.

2. சகளீகாணம்—கலையோடு கூடியவனாகச் செய்தல்.

இது கரந்யாஸம், அங்கந்யாஸம் என இரு வகைப்படும். கலைகள் சக்திமயமானவை. சக்தி சிவனுக்குரிய தேகமாம். சிவ தீக்ஷையினால் சிவத்வம் எய்திய பரிசுத்த ஆத்மா தனது தேகத்தையும் சிவத்தன்மையதாக்கிக்கொள்ளுதற்பொருட்டுச் செய்துகொள்வது சகளீ கரணமாம்.

3. சந்தியா த்யானம்—செவ்வே த்யானித்து வழிபடுதல்.

4. மந்திராபிஷேகம்— மந்திரமயமான ஜலத்தை அபிஷேகித்துக்கொள்ளுதல்.

5. மார்ஜனம்—தெளித்தல்.

6. அகமர்ஷணம்—பாவம் கெடுதல்.

சிவபூஜை

7. சூரியபூஜை—சகள நிஷ்களனாக உள்ள சிவபெருமானைச் சகள வடிவாகத் தியானித்தல்.

8 துவாரபூஜை—பூஜா ஸ்தானத்தில் ரேசக பூரக வியாபாரங்களை அஸ்த்ரத்துவாரபாலர்களால் தடுத்து மனத்தை நிறுத்தல்.

9. கரந்யாஸம்—கைகளைச் சிவமாக்குதல்.

10. பூதசுத்தி—தத்துவங்களினின்றும் நீங்குதல்.

11. ஸ்தானசுத்தி—மாயையைக் கடந்துநிற்றல்.

12. திரவியசுத்தி—அனைத்தையும் சிவமயமாகக் காணுதல்.

13. மந்திரசுத்தி — சிவபூஜா மந்திரங்களை அருள்நாத ஒலியில் எழுந்தனவாகச் சிந்தித்தல்.

14: லிங்கசுத்தி—எட்டு மூர்த்திகளையே திருமேனியாகக் கொண்ட பெருமானை, இவ்வெட்டு மூர்த்திகளைக் கடந்தும் லிங்க உருவத்தில் எழுந்தருளியிருப்பவனாகக் கருதல்.

15. கணபதி தரு வணக்கம்—விக்கின நிவர்த்தி.

16. இலக்குமி தரு வணக்கம்—திரவ்ய பரிபூர்ணதா சித்தி.

17. சதாசிவாதி குருவணக்கம்—கர்ம பரிபூர்ணதா சித்தி.

18. சிவாஸன பூஜை—பிருத்வியாதி தத்துவங்களைக் கடந்த பெருமானை ஆன்மாக்களுக்கு அனுக்ரஹிக்கும் பொருட்டாய்த் தத்துவங்களை அதிட்டிக்கச்செய்தல்.

19. மூர்த்தி—ஓங்கிய ஒளியாய் இருத்தல். (தடஸ்தம்)

20. இறைவனுருவம்—(மூர்த்திமான்) எல்லாவற்றையும் கடந்து நிற்றல். (சொரூபம்)

21. ஆவாஹனம் முதல் புஷ்பதானம் வரையுள்ள சம்ஸ்காரங்களின் விளக்கம்:—

ஆவாஹனம்—எதிர்முகமாக்கல்.

ஸ்தாபனம்—எழுந்தருளியிருக்குமாறு வேண்டுதல்.

ஸந்நிதானம் — அண்மையில் உள்ளவாராக ஆக்கிக்கொள்ளுதல்.

ஸந்நிரோதனம்—பூசிக்கும் வரை நீங்காதிருக்கச்செய்தல்.

அவகுண்டனம் — சிவமுகங்களிலிருந்தும், ஹ்ருதயாதி ஸ்தானங்களிலிருந்தும் உண்டாகும் ஒளியை உருவகப்படுத்துவான் வேண்டிக் கவச மந்திரத்தால் சுற்றுதல்.

தேனுமுத்ரா—மேற்சொல்லிய ஒளியில் அசுத்தமாகிய புறவொளி விராவாது தடுத்தல்.

தேனுமுத்திரை—அமிருத மயமாக (தண்மை) ஆக்குதல்.

பாத்யம் —மாயையின் இரண்டு தன்மைகள் (ஆணவம் கன்மம்) நீங்குதல்.

ஆசமனம்—தன்னைப் பெருமானிடம் அர்ப்பணித்துக் கொள்ளுதல்.

அர்க்கியம்—அஞ்ஞானம் நீங்குதல்.

புஷ்பதானம்—சுத்த சைதன்யமாகி ஆனந்தம் பெறுதல்.

22. ஸ்நானம்—மலநிவர்த்தி.

23. சந்தனம், வஸ்த்ராபரணம்—போக, மோக்ஷ சித்தி.

24. தூபம்—கிரியாசக்தி விளக்கம்.

25. தீபம்--ஞானசக்தி விளக்கம்.

26. நைவேத்யம்—சர்வான்ம திருப்தி.

27. லயாங்கபூஜை—முக்தான்மா சிவனிடத்து ஒடுங்குதல்.

28. போகாங்க பூஜை, ஆவரண பூஜை— அறுவகைக்குணங்கள் பிராப்தி. அறுவகைக் குணங்களாவன எங்கும் நிறைந்து நிற்றல், எல்லோருக்கும் மேம்பட்டவனாயிருத்தல், எல்லாம் தோன்றுதற்குக் காரணனாயிருத்தல், எல்லாக் கிரியைகளையும் செய்வித்தல், எல்லாவற்றையும் பெற்றுக்கொள்பவனாக இருத்தல், எல்லாவற்றிலும் உள்ளும் புறமும் கலந்து நிற்றல் என்பவை.

29. நீராஞ்சனம் — மாயை இரண்டிலும் சிவபெருமானுடைய கலப்புத் தன்மையைப் புலப்படுத்துதல்.

30. ரக்ஷை-திருநீறு சார்த்துதல் (விக்ன நிவர்த்தியின் பொருட்டாக)

31. ராஜோபசாரங்கள் -1. கண்ணாடி-இச்சா சக்தி வியாபாரம் (பிரபஞ்ச சிருஷ்டி). 2. குடை—சிவவ்யாபகத்தில் ஆன்மா வ்யாப்பியமாகுதல். 3. சாமரம்—ஆன்மா சாயுஜ்யானுபவசித்தி. 4. வெள்ளை

விசிறுதல்—ஆன்ம விருத்தியை ஒன்றுபடுத்துதல். 5. விசிறி—ஒன்றுபடுத்திய ஆன்ம விருத்தியைச் சிவனிடம் சேர்த்தல்.

32. ஆத்ம சமர்ப்பணம் — ஸர்வார்த்த சித்தி. (அ) பவித்திர தானம், மன மொழி மெய்களால் வரும் குற்றம் நீங்குதல்.

33. தோத்திரம்—சிவத்தில் லயமாகுதல்.

34. பிரதக்ஷிணம்—சிவபோகத்துள் அழுந்திய ஆன்மாவின் மீளாத்தன்மையைப் புலப்படுத்துதல்.

35. நமஸ்காரம்—பதப்ராப்தி.

36. சண்டேஸ்வர பூஜை—அபராத மன்னிப்பும், கிரியைகளைப் பூரணமாக்குதலும்.

அனுட்டானத்தைப் பற்றிய குறிப்பு உள்ள தேவாரப் பாடல்கள்.

அல்லும் பகலுமாய் நின்றார்தாமே யந்தியு சந்தியு மானார் தாமே
சொல்லும் பொருளெலா மானார் தாமே தோத்திரமுஞ் சாத்திரமு
மானார் தாமே
பல்லுரைக்கும் பாவெலா மானார் தாமே பழனை பதியா வுடையார்தாமே
செல்லு நெறிகாட்ட வல்லார் தாமே திருவாலங் காடுறையும்
செல்வர் தாமே.

(அப்பர். திருவாலங்காட்டுத் தேவாரம்)

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத் தோதி னாளு மரனடிக் கன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா வமணர்தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி யடிகளாரே.

(அப்பர். திருநனிபள்ளித் தேவாரம்)

புரிகாலே நேசஞ்செய்ய விருந்தபுண் டரிகத் தாரும்
எரிகாலே மூன்றுமாகி யிமையவர் தொழநின் றாரும்
தெரிகாலே முன்றுசந்தி தியானித்து வணங்க நின்ற
திரிகாலங் கண்டவெந்தை திருச்செம்பொன் பள்ளியாரே.

(அப்பர். திருச்செம்பொன்பள்ளித் தேவாரம்.)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	5	ஓம் ஹூம் சிகாயைநம.	ஓம் ஹூம் சிகாயை நம:
8	15	காலக்னி	காலாக்னி
9	18	ஜபமாலையை பிறர்	ஜபமாலையைப் பிறர்
11	6	மேலும	மேலும்
19	12	தேஜஸ்சண்டமூாத்தயே நம:	தேஜஸ்சண்ட [மூர்த்தயே நம:
ஷை	25	பரிஷேஜனம்	பரிஷேசனம்
20	7	விஜர்ஜனை	விசர்ஜனை
21	2	எனறு	என்று
22		திருச்சிற்றம்பலமீ	திருச்சிற்றம்பலம்
29	16	காலக்னி	காலாக்னி
30	18	மூலமந்திாத்தை	மூலமந்திரத்தை
31	9	மூடிக்கொண்டதாகப	மூடிக்கொண்டதாகப்
ஷை	20	ஷ்டங்கங்களாலும்	ஷடங்கங்களாலும்
47	22	அர்க்கியம	அர்க்கியம்
53	6ஆம் பாடல் 3ஆவது வரி	மனனிய	மன்னிய
55	12 ஆம் பாடல் 5ஆவது வரி	யால்லாதார்க்கு	யல்லாதார்க்கு
58	25ஆம் பாடல் 4ஆவது வரி	தன்றா	தன்று

இந்நூல் கிடைக்குமிடம்:

உ. ராம. மெ. சுப. சேவு. மெ.

மெய்யப்ப செட்டியார்

தேவகோட்டை.